OFFICE OF THE ... 4-OCT 19.. MADRAS

# SRI VEDANTA DIPIKA

VOL. 28] JULY 1939 [PART 7

478

# ஸ்ரீ வேதாந்த தீபிகை

பிரதி இங்கிலீஷ் ௴ 25உ வெளிவரும்

விளம்பரக் கட்டளைகள் :

மானேஜிங் எடிடருக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

பிரமாதி ௵ :: ஆடி ௴

பத்ராதிபர்கள் :

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

வி. அனந்தாசாரியர் (*Managing Editor*)

கிருஷ்ணபுரம், கோடம்பாக்கம் **Post, Madras.**

○

உப-பத்ராதிபர்கள் :

வேதாந்த சிரோமணி T. வேணுகோபாலாசாரியர்

ஏ. ஸ்ரீநிவாஸராகவன், M.A., [மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை.]

CONDUCTED BY

**SRI VAISHNAVA SIDDHANTA PRACHARA SABHA, Ltd.,**

**Vani Vilas, 4—5, Badriah Garden St., Park Town, Madras.**

# L. G. பெருங்காயம்

**ஹிங்கு** அல்லது பெருங்காயம், உணவு பொருள்களுக்கு ருசியைத் தருவது மாத்திரம் அல்ல, பிரதிதினம் சாப்பிடக்கூடியதான ஔஷதமாயும் கருதப்படுகிறது. அடியில் கூறப்படும் குணங்கள் இதன் ஔஷதத் தன்மையை நன்கு விளக்கும். ராஜ நிகண்டு என்னும் ப்ராசீன வைத்திய சாஸ்திரத்தில் அடியில் கண்டபடி பெருங்காயத்தின் குணங்கள் வர்ணிக்கப்படுகின்றன. ஹ்ருதயத்திற்கு பலத்தைத் தரும். காரமாய் இருப்பதால் உஷ்ண வீர்யமுள்ளது. வயிற்றில் உண்டாகும் கிருமிகளை போக்கும். வாயுவை கண்டிக்கும், கபத்தை தொலைக்கும், மலச்சிக்கலை நீக்கும், வயிற்று பொருமலை அகற்றும், சூலவியாதியை கொல்லும், நேத்திர ரோகத்தையும் போக்கும், குல்மம் என்னும் வியாதியை வேரோடு அறுக்கும்.

हृद्यं हिंगु कटूष्णं च क्रृमिवातकफापहम् ।

निबन्धाध्मानशूलघ्नं चक्षुष्यं गुल्मनाशनम् ॥

இக்குணங்களையெல்லாம் பெற்ற பெருங்காயம் எல். ஜி. குறியுள்ளதைத் தவிற உண்மையில் வேறு எதுவுமன்று. இதை கவனித்து எப்பொழுதும் காயம் வாங்குங்கள்.

## லால்ஜி கோது & கம்பெனி

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

பம்பாய் சென்னை கும்பகோணம்



**அபலா கல்பம்**

மாதவிடாய்க் காலத்தில் ஸ்திரீகளுக்குண்டாகும் "ப்ரதரம்" அல்லது "பெரும்பாடு" என்கிற ரத்தப்பெருக்கு, வெட்டைச் சூட்டினால் மர்மஸ்தானத்திலிருந்து வெண்மையான திரவப் பொருள் சிறுகச் சிறுக வெளிப்படுதல், கர்ப்பம் அடிக்கடி சிதறுண்டுபோதல் முதலிய கர்ப்பாசய சம்பந்தமான வியாதிகளை அறவே யொழிப்பதில் ஒப்புயர்வற்ற சக்தி வாய்ந்தது. 1 பாட்டில் விலை ரூ. 2 8 0

**ஸித்த கல்ப மகரத்வஜா**

நரம்புத்தளர்ச்சி, இளமைப்பருவத்திலுண்டான துர்பழக்கங்களினாலேற்படும் அநேக விதமான வியாதிகள், வீர்யக் குறைவு, ஹிருதயத் துடிப்பு, இரத்தக் குறைவு, இரத்த அசுத்தம் முதலானவைகளுக்கு "அபாரசக்தி வாய்ந்த டானிக்" "ஸர்வரோக நிவாரிணி" என்று ஆயிரக்கணக்கான வைத்திய நிபுணர்களால் சென்ற 25 வருடங்களாகப் போற்றப்படுகிறது.

60 மாத்திரை ரூ. 10 30 மாத்திரை ரூ. 5

தபால் பெட்டி 151 மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி, லிமிடெட் மதராஸ்


4 - OCT 1939 MADRAS

## விஷயங்கள்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | ஆக்கையும் அறிஞர் நிலையும்—D. திருமலாசார்யர் .... | 153 |
| 2. | கூடவார்—S. T. ஸ்ரீநிவாஸாசார்யர் .... | 157 |
| 3. | ஸந்த்யாவந்தன பாஷ்யம் .... L. ரங்கஸ்வாமி அய்யங்கார் | 160 |
| 4. | மஹாகுருஸூக்தி ப்ரசம்ஸை—ஓர் விமர்சகன் .... | 161 |
| 5. | தானம்—வே. ராஜகோபால சர்மா .... | 168 |
| 6. | ஆரணசாரம் அரிய உணவு .... திருமலைநல்லான் ராமகிருஷ்ணய்யங்கார் | 170 |
| 7. | ஸ்ரீ வைஷ்ணவதாஸன் விண்ணப்பம் .... | 174 |
| 8. | சர்க்கரையின் உற்பத்தி விஷயம் ... அ. தே. ராமாநுஜய்யங்கார் | 175 |
| 9. | மதுரைமாநகரில் அட்டஹாஸம் .... அ. தே. ராமாநுஜய்யங்கார் | 176 |
| 10. | முமுக்ஷுக்களின் பிராயச்சித்தம் .... தி. ஈ. வீரராகவாசாரியார் | 176 |
| 11. | 'அலர்ந்த அம்புயத்து' விவரணம் .... A. V. கோபாலாசாரியர் & நவநீதம் ஸ்ரீராமதேசிகாசாரியர் | 180 |
| 12. | புஸ்தக விமர்சம் .... | 187 |


### அறிவிப்பு

பத்திரிகைக்கு வியாஸம் எழுதி அனுப்பும் வித்வான்கள் வடமொழிக் கோட்பாடுகளைக் கூடியவரைக் குறைத்து வியாஸம் எழுதவேணும். வியாஸங்களை சுத்தத் தமிழிலேயே அமைப்பது நன்று. தமிழ் பாஷையும் ஸாமான்ய ஜனங்களிடையில் நடமாடிவரும் எளிய நடையில் இருப்பது விரும்பத்தக்கது. ஒவ்வொரு வ்யாஸமும் மூன்று பக்கத்திலுள் முடிவு பெறுமாறு சுருங்கியிருக்கவேணும்.


பண்டிட் தோரி ராமசாஸ்திரிகளின்

**க்ஷீரவர்த்தினி** (ரெஜிஸ்டர்டு)

(தாய்ப்பாலை வ்ருத்தி செய்யும்)

தாய்களுக்கு ஓர் அருமையான டானிக். குழந்தைகளை சுரம், சூலைக்கட்டிகளினின்றும் காப்பாற்ற அவைகளைத் தாய்ப்பாலால் போஷிப்பது நல்லது.

புட்டி 1க்கு ரூ. 2-0-0

ஆயுர்வேத பூஷண பண்டிட் தோரி ராமசாஸ்திரி A.K.A.C.

"ஆயுர்வேத நிலயம்"

பெஜவாடா. M.S.M.RY.

| | | | | |
|---|---|---|---|---|
| ந்யாய ஸித்தாஞ்ஜனம் வ்யாக்யானத்துடன் | ரூ. | 5 | 0 | 0 |
| தத்வடீகை | ரூ. | 5 | 0 | 0 |
| வேதார்த்த ஸங்க்ரஹம் தமிழ் உரையுடன் | ரூ. | 3 | 0 | 0 |
| ஸ்ரீ வைகுண்ட ஸ்தவம், ஸ்ரீ ஸ்தவம் தமிழ் உரையுடன் | ரூ. | 1 | 0 | 0 |
| ஸம்ப்ரதாய பரிசுத்தி வ்யாக்யானத்துடன் | ரூ. | 1 | 0 | 0 |
| அபீதிஸ்தவம் தமிழ் உரையுடன் | ரூ. | 0 | 8 | 0 |
| ஸ்ரீபாஷ்யம்—பத்து வியாக்கியானங்களுடன் முதல் வால்யூம் பைண்டு செய்தது | ரூ. | 6 | 12 | 0 |
| ஷை 2வது வால்யூம் ,, | ரூ. | 6 | 12 | 0 |
| ஸ்ரீ தேசிகன் ஸ்தோத்திரங்கள் தேவநாகரத்தில் அச்சிட்டது | ரூ. | 1 | 0 | 0 |

இன்னும் பல ஸம்ப்ரதாய புஸ்தகங்களும் ஸம்ஸ்கிருத புஸ்தகங்களும் வேதாந்த தீபிகை பழய ஸம்புடங்களும் கிடைக்கும்.

Vedanta Dipika office
KRISHNAPURAM, KODAMBAKKAM POST, MADRAS.



ஐந்து நிமிஷ இன்பம்

அதற்காக வருஷக்கணக்காகவும், தலைமுறை தலைமுறையாகவும் அளவுகடந்த துன்பம் அனுபவிப்பான் ஏன்?

நோய் முற்றுமுன் மேகரோக நிவாரணத்தில் தலைசிறந்த நிபுணர்களான

மெஸர்ஸ் லக்ஷிமி அண்டு கோ.,

அவர்களிடம் கலந்து யோசனை கேளுங்கள்.

கடிதப்போக்குவரவும், ஆலோசனைகளும் அந்தரங்கமாய் நடத்தப்படும்.

விவரங்களுக்கு:— லக்ஷிமி அண்டு கோ.,
சகலவிதமான துஷ்டரோகங்களை நிவாரணம் செய்வதில் நிபுணர்கள்.
தபால் பெட்டி நெ. 137. 144, பிராட்வே, மதராஸ்.

தலைமை ஆபீஸ்: வால்டேர். ஆர். எஸ். போஸ்ட்.
பிராஞ்சுகள்: ராணிஹட், கட்டாக், காந்திநகர், பெஜவாடா.


श्रीः
श्रियै नमः
त्रिभुवनकमनं तमालवर्णं रविकरगौरवरांबरं दधाने ।
वपुरलककुलावृताननाब्जे विजयसखे रतिरस्तु मेऽनवद्या ॥


# ஸ்ரீ வேதாந்த தீபிகை

| | | |
|---|---|---|
| ஸம். 28. | பிரமாதி ஸு ஆடி மீ 12உ 25-ஜூலை 1939 | ஸஞ். 7 |


## ஆக்கையும் அறிஞர் நிலையும்.


ஸ்ரீ உ. வே. D. திருமலாசார்யர், வானமாமலை.


ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரனுடைய கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தை, நித்யமாகவனுபவிக்கைக்காகவேயிட்டுப் பிறந்தயிச்சேதனவர்க்கமானது, அதிதையடையப்பெறுமல் ஜந்மபரம்பரைகளிலே தோள்மாறிச்செல்வதற்கு முதற்காரணம், கரணகளேபரவிதுரமாய் ஆகையினுலேயே ப்ரவ்ருத்தி நிவ்ருத்யநர்ஹமாய் உருமாய்ந்து கிடக்கிற உயிர்த்திரளானது உஜ்ஜீவிக்கைக் குறுப்பாக, முன்னீர் ஞாலம் படைத்த எம்முகில் வண்ணன் தன் நிர்ஹேதுக கிருபையால், தன்னை வழிபடுகைக்குத் தந்த ஆக்கையின் வழியே, போய் அதில் ஆத்மப்ரமங்கொண்டு அலமருகின்றமையே யென அறியத்தக்கது. நதீ ஸஞ்சரண ஸாதனமாகக்கொடுத்த நாவத்தை நீர் போக்கிலே நடத்தி கடலிலே புகுருமாப்போலே இருப்பதொன்று இப்பேதமையும். அஃதன்றி திருமாலின் திருவருளால் கருவிலே திருவுடையராய், ஸத்ஸங்கத்தாலும், ஸச்சாஸ்த்ர நிஷேவணத்தாலும், ஸம்ஸாரத்தில் பற்றற்று ஸதாசார்ய ஸமாச்ரயணம் பண்ணி . ஸதஸத்விவேகிகளான ஸாதுக்கள், ஸம்ஸாரத்தில் வாழும் நாளிலேயே தாமரையிலையில் தண்ணீர்போல, சரீரதத்ஸம்பந்திகளிடையாட்டமாக ஸங்கமற்று, மாயவந்தன்னை வணங்கவைத்த கரணகளேபரங்களை, வகுத்த விஷயத்திலே விநியோகித்து, மாதவனை நாளும் மனமொன்றி புகையால் விளக்கால் புதுமலரால் நீரால் சென்றிறைஞ்சி, ஆதிவ்டு அந்திவாய் வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது என்கிறபடியே காலக்ஷேபஞ் செய்துகொண்டு பார்யாபுத்திராதி ஸம்ரக்ஷணத்தை அவனதீனமாக்கி, ஸாத்விகஸ்ம்ருதிநிஹாஸாதிகள் காட்டிய வழியே ஜீவிகாபரிக்ரஹம் பண்ணி ஸாம்ஸாரிக ஸகலதுக்க பரம்பரை

158622

478



களில் உயர்ந்த த்திகளை யடையாமல் ஒருபடிப்பட நின்று, புன்புல
ராக்கிலச்சினை செய்து இத்யாதிப்படி நெஞ்சுருகி உள்களிந்
தொழுகுகிற மெய்யன்புக் கிலக்காக்கி, தேஹயாத்திரையை ஆத்மயாத்திரா
சேஷமாக்கி இங்குமங்கும் இன்புற்றிருந்தார்கள். சரீரத்தின் தண்ணிமை
யும், கடலன்ன காமத்தின் அபரிச்சின்னதையும், முறையே, தந்தைதாய்
மக்களே என்ற திருமொழியில் அருள்மாரியின் அமுதிலும் ஆற்றவினிய
ஸூக்திரத்னங்களாலும், ஸத்வோத்தரமான ஸ்ரீவிஷ்ணுதர்மத்தில் தால்ப்ய
புலஸ்த்ய ஸம்வாதங்களாலும், பஞ்சமவேதமான மஹாபாரதத்தில் ஆதி பர்
வாந்தர்க்கதமான ஸம்பவ பர்வத்தில் (பதின்மூன்று பதின்நான்காமத்யா
யத்தாலும்) விரித்துரைக்கப்பட்டிருக்கின்றது. அஃதெவ்வாறெனில்
ஸ்ரீவிஷ்ணு தர்மம் முப்பத்தெட்டாமத்யாயத்தின் மேலுள்ள ஒன்றிரண்டு
அத்யாயங்களில், தால்ப்யரென்ற முனிவர், புலஸ்த்யரென்ற மஹர்ஷியைப்
பார்த்து, முனியரசே, இவ்விருள் தருமாஞாலத்தில், ஸம்ஸாரம் அஸாரமென்
றும், சப்தாதி விஷயங்களோ அளவிளாவாசையை விளைவிக்கவல்லது என
வறிந்த ஒரு புருஷனவன், தன் உஜ்ஜீவனத்துக்கு உபாயமாக செய்யவ
டுக்கும் கார்யமென்னதாகும், அத்தை அருளவேணுமென்று வினவ, அத்
தைக்கேட்ட முனிவர் முதல்வன் அருளிய விடையாவது, அந்தணர்க்கரசே
கேளீர், எந்த புருஷனுக்கு நீர் உரைத்தவாறு விவேகமுண்டாயிற்றோ
அவன், ஐம்பொறிகளில் ஸங்கத்தை அறவே யொழிக்கக்கடவன். அஃதே
யவனுக்கு உய்வதோர் உபாயம். வைஷயிக ஸுகங்களை எத்தனை காலம்
அனுபவித்தாலும் அவைகளில் திருப்தி பிறந்து அவ்வலையில் நின்றும் இவன்
அகலுவதென்பது, ககனகுஸுமமே தவிரவேறில்லை, விஷயங்களில் இவன்
அனுபவிக்கவேணுமென்று கோலி மனோரதித்த இன்பவெள்ளமெல்லாம் இவ
னதுவாழ்நாளில் நுகர வியலாமல் அந்த காலத்தில் அதிருப்தி யுடனேயே
வாக்கையில் நின்றும் அகலக்கடவன். ஆதலால் எந்த விஷயங்களை அனுப
வித்து ஆசை ஒழிவதென்பதரிதோ, அப்படுகுழிகளில், அடியிலேயே பற்
றற்று, அருவருத்து, அகல நிற்பதே, ஆடவர்க்கு, அழகியது, ஐம்புலனையு
மாக்கையும், அதன் வழியே செல்லவொட்டாமல், தன் நினைவின்படியே
நடத்துகைக்கு நிஷ்காமர்களான முமுக்ஷுக்களுக்கும் கரணகளேபரங்
களைக் காக்கவல்ல ஹரிதிநாத்யுபவாஸங்களும் சாந்திராயணாதி விரதங்களும்
அவச்யம் அனுஷ்டிக்கத்தக்கவைகள். இந்த விஷயத்தில் மூதுவர்மொழிந்த
முன்னுரையான தேவவைத்ய ஐளஸம்வாதத்தை உரைக்கின்றேன், கேண்
மின். இளாபுத்திரனான புரூரவஸ் என்ற மன்னனனவன் அனங்கனையும் ஆள்
கொள்ளத்தக்க வழகுடையவனாய்ப் ப்ரதிஷ்டான நகரமென்ற பட்டணத்தை



பரிபாலித்து வந்தான். அவனழகைக்கண்டு அப்ஸரஸ்களில் அக்ர கண்
யையான ஊர்வசியும், விண்ணுலகை வெறுத்து, மண்ணுலகேகி அகலகில்
லேனிறையுமென்று அளவிலாண்டு அவனதணியாகம் அணைந்து வாழ்ந்தாள்
என்றால் அவனழகைப்பேச அயன்தான் வல்லனோ சொல்லீர். இப்படி
யழகில் புகழ்பெற்ற அம்மன்னனது ரூபத்தைக் காண ஆவல் கொண்ட அச்
வினீ தேவதைகள் அவனதரண்மனை அடைந்து த்வாரபாலகன் மூலமாக
தங்களது வரவைத் தெரிவிக்க, மன்னவனும் அந்த ஸமயத்தில் தன் சரீரம்
வ்யாயாமதைல லேபனத்தினால் மாலிந்யம் அடைந்து அந்தணரடிபணிவ
தற்கு அனர்ஹமாய் இருப்பதால், ஒரு முஹூர்த்தத்தில் அலங்கிருதனாய்க்
கொண்டு விடைகொள்கிறேன். அதுவரை பொறுத்தருள வேணுமென்று
அறிவிப்பித்திருக்கச் செய்தேயும் அமரமருத்துவர்கள் அதைப்புறக்கணித்து
அப்யக்தனான தசையிலே அரசைக் காணக் கருதி அவனது மஞ்சனமாளி
கையேறச் சென்று அவனது வடிவின் வனப்பைக்கண்டு வியந்து நிற்க,
அரசனும் தனது குரம்பை அப்யஞ்சனத்தினால் அழுக்கடைந்து முழங்கால்
வரை குறுகிய ஆடை அணிந்து அமராடி வணங்கத் தகுதியற்றிருப்பதை
கண்டு நாணத்தால் தலை கவிழ்ந்து நின்று திடுக்கிட்டு பரவசித்தனாய் அவர
டி பணிந்து, தேவரீர் திருவுள்ளத்தில் கொண்ட கருத்தைத் தெளிய
உரைத்தருள்வீர். அடியேனுடைய புத்ரதாரகிருஹ க்ஷேத்ரதன தான்யாதி
கள் முழுதும் தேவரீரது திருவடிகளில் ஸமர்ப்பிவிக்கப்பட்டது என்று
சொல்ல இப்படி அரசுரைத்த அமுதமொழியைச் செவியுற்ற தேவவைத்தி
யர் அவனது அங்கோபாங்கங்களனைத்தையும் அடிமுதல் முடிவரைக் கண்
ணாரக்கண்டு களித்து அம்மன்னவனை நோக்கி, அரசே, நீர் மஞ்சனமாடி
பொன்னுடை பூண்டு பல்கலனணிந்து அறுசுவையுண்டு ஆடல் பாடலுடன்
வீற்றிருக்கும்பொழுது மறுபடியும் உம்மைக் காண வருகின்றோம் என்று
பணித்து விடைபெற்றுச் செல்லக் காவலனும் களிப்புடன் சென்று ஆடி
அமுது செய்து ஆடை யுடுத்து ஆபரணம் பூண்டு கொலுமண்டபத்தில் வீற்
றிருக்க அவ்வமரர்களும் அங்கு வந்து அவனது அங்கோபாங்கங்களையெல்
லாம் அகமகிழக்கண்டு மந்தஹாஸத்துடன் மன்னவனை நோக்கி நிற்க அப்பூ
பதியும் அவர்களது புன்சிரிப்பைக் கண்டு அச்சமடைந்து அன்னவரது மென்
நகைக்கு காரணத்தை வினவ, அச்வினீ தேவதைகளும், அரசே, நீர் சரீரப்
பயிற்சிசெய்து தேஹமெல்லாம் தைலம்பூசி அணிகலனொன்றுமின்றி அழுக்
கடைந்து நிற்கும்போது உமதாக்கையில் தோன்றிய அழகு ஒரு நொடிப்
பொழுதில் வேறு பரிணாமத்தை யடைந்த உமது சரீரத்தில் பொன்னுடை
யுடுத்தியும் பல்லாயிரமிழை பூண்டும் பன்மடங்கு குறைந்து தோன்றுகின்

றது. ஆகையால் இவ்வாக்கையானது ஒவ்வொரு க்ஷணமும் அளவிறந்த ஸூக்ஷ்ம விகாரத்தை யடைந்து மாறிக்கொண்டே வருகிறது. நாளடைவில் நரைதிரை மூப்புகளை யுடையதாய் நாரிகள் காரியுமிழுந் தசையுடைத்தாய்ப் பொறும் ஒப்புயர்வில்லாவழகு படைத்த ஊர்வசியும் மடலெடுக்கும்படியான வடிவுபடைத்தோம் நாம் என்று இறுமாந்திராதீர் ஸத்ஸங்கத்தால் ஸம்ஸாரத்தில்பற்றற்று ஸர்வாந்தர்யாமியான திருமாலின் திருவருளுக்கிலக்காகி, இங்குமங்கு மின்புறுவீர் என்று ஓதிவிட்டு விண்ணுலகை மேவினார்கள். மஹாபாரதத்தில் யயாதியின் கதாப்ரஸ்தாவத்தில் சுக்கிராசார்யரின் சாபத்தால் தன்னுடைய யௌவன வயஸ்ஸிலே திடீரென்று மூப்பையடைந்த யயாதியென்ற வேந்தனானவன் சிற்றின்பத்தில் திருப்தியடையாமல், யது முதலிய தனது நான்கு புத்திரர்களை யணுகி தன் ஜரையை அவர்களைப் பெற்றுக் கொள்ளும்படியும் அவர்களது காளைப் பருவத்தை ஆயிரமாண்டு தனக்குத் தந்துதவும்படியும் ஒவ்வொருவராகக் கேட்க அவர்களும் அவனது வார்த்தையை மறுக்க வேந்தனும் வெகுண்டு பூரு என்ற தன் புதல்வனிடத்திலும் கீழ் சொன்னபடியே விரும்ப அவனும் அத்தனிடத்தில் உண்டான அன்பின் மிகுதியால் அப்படியே ஆகுக என்று இசைய, அரசனும் அன்னவனது யௌவனத்தைப் பூண்டு அறநெறி வழுவாமல் சப்தாதி விஷயங்களை ஆயிரமாண்டு பலபடியாக புஜித்தும் மேல்மேலும் ஆசையை விளைவிக்கின்ற ஐம்பொறிகளின் தீயகுணத்தை தனதனுபவத்தால் உணர்ந்து தன்னரும் புதல்வனான பூருவை அருகில் இருத்தி என் குலக்கொழுந்தே உனது காளைப் பருவத்தைக் கைக்கொண்டு நான் பல்லாண்டு எனதைம்புலன்களைத் திருப்தி பண்ண நினைத்தும் அது பயன்படவில்லை. ஐம்பொறிகளில் ஏதேனும் ஒன்றிலாவது தெவிட்டல் உண்டாயிருக்குமோ என்று பார்த்தால் அதுவும் உண்டாகவில்லை. அறிவிலிகளில் சிறந்த நான், சிறிதும் நாணமின்றி புத்திரர்களான உங்களது முன்னிலையில் யௌவனத்தை விரும்பி ஆயிரமாண்டு ஐம்புலன்களை திருப்தி செய்வித்து அகல நினைத்தேன். அது ஆகாதகாரியமென இப்பொழுதுதான் உணர்ந்தேன், காதல் வெள்ளமானது, விஷயங்களை நுகர்வதால் ஒருக்காலும் குறையப் போகிறதில்லை, நெய்யினால் நெருப்புப்போல் மேல் மேலெனக் கிளருமே தவிர வேறில்லை. ஆதலால் இச்சிற்றின்பவாசையை முகஞ்சிதரப் புடைத்து ஸர்வேச்வரனிடத்தில் மனதை ஒருமைப்படுத்தி காமக்குரோதம் முதலியதை அறவே ஒழித்து அரண்யமடைந்து அங்கிருக்கும் மிருகங்களுடன் வாழப்போகின்றேன், பிள்ளையாரே, உனது காளைப்பருவத்தைக்கைக்கொள், என்று கூறி, தனது ராஜ்யத்தில் பூருவுக்கு மகுடஞ் சூட்டுவித்து வாயார வாழ்த்தி வாஸுதேவனை மனதில்



கொண்டு வனம் ஏகி, திருமாலடியாரொடு ஒரு கோவையாக வாழ்ந்து வந்தான். நல்லதும் தீயதும் விவேகிக்கைக்கு உறுப்பான மானிடப்பிறவியில் பிறந்த ஒவ்வொரு புருஷனும், இந்த சரீரம், அதன் ஸம்பந்திகள், இவர்களது ஸம்பந்தத்தின் உண்மை நிலை, இக்கரண களேபரம் எதற்காக அளிக்கப்பட்டது, அதன் உள்மானம் புறமானங்களில் உண்டான தூய்மை, உணர் முழு நலமான ஆத்மாவின் ஸ்வரூப ஸ்வபாவங்கள், இது முதலியதை பஞ்சாக்நி வித்யை முதலான உபநிஷத்துக்களாலும் மேல் குறிப்பிட்டது போன்ற பல சுருதி ஸ்மிருதீதிஹாஸாதிகளாலும் ஆசார்யர்களின் ஸதுபதேசத்தாலும் ஆழ்வார்களின் அமுதமொழிகளாலும் தன் வாழ்நாளில் உண்டான அனுபவத்தாலும் ஆராய்ந்து நோக்குவனே ஆனால், அவன் மேல் குறிப்பிடப்பட்ட ஸாதுக்கள் நிலையிலேயே நின்று நிச்ச்ரேயஸ்ஸை நிச்சயமாக அடையக்கடவனென்பது திண்ணம்.

---

## கூடலூர்.

[S. T. ஸ்ரீநிவாஸாசாரியார், கல்யாணபுரம், தஞ்சாவூர்.]

[இந்த திவ்யதேசம் தஞ்சாவூர் ஜில்லாவில் அய்யம்பேட்டை ரயில்வே ஸ்டேஷனுக்கு வடக்கே இரண்டு மைலில் காவிரியாற்றின் வடகரையில் படுகையிலேயே (திருவையாற்றிலிருந்து கும்பகோணம் போகும் பஸ் மார்க்கத்திலேயே இருக்கிறது. இப்போது அங்கே இது 'ஆடுதுறைப்பெருமாள் கோவில்' என்று வழங்கி வருகிறது. இது திருமங்கையாழ்வாருடைய மங்களாசாஸநத்தைப் பெற்றது. ஆழ்வார் இந்த திவ்யதேசத்திற்கு ஈந்த தசகத்தில் இங்கு எழுந்தருளி யிருக்கும் ஜகத்ரக்ஷகன் (வையம்காத்த பெருமான்) என்ற எம்பெருமானை பர-வியூஹ-விபவ அர்ச்சை முதலான எல்லாப் பிரகாரங்களாலும் அனுபவித்திருக்கிறார். இவ்வாழ்வாருடைய அனுபவ ரூபமாய் வெளிவந்த பாசுரங்களையு மவற்றின் பொருளையு மொட்டியே கீழ் பிரசுரிக்கப்படும் வியாசம் அழகாகச் சித்தரிக்கப் பட்டிருக்கிறது.

இந்த ஸ்தலத்தைப் பற்றிய 'ஸங்கமக்ஷேத்ர மாஹாத்ம்யம்' என்ற ஸ்தல புராணம் ஏற்கனவே வெகு வருஷங்களுக்கு முன் அச்சிடப்பட்டிருப்பதாகக் கேள்விப் படுகிறோம். ஆனால் இப்போது கிடைக்கவில்லை. அதை மறுபடி அச்சிட விரும்புகிறோம். எவரிடமாவது இருந்து கிருபை கூர்ந்து தந்து உதவுவார்களானால் கிருதார்த்தர்களாவோம். புஸ்தகத்தை c/o ஸம்பாதகர், வேதாந்த தீபிகை என்று அனுப்பலாம்.—ஸ்ரீ. ஸ்ரீ.]

"குருமாமணியுந்து புனற்பொன்னி"க் கரையில் ஓர் அழகிய சோலையிற் பூம்பள்ளியிற் கிடந்து துடிக்கிறாள் ஓர் பொற்கொடியாள்—குளித்த

கையினளாய், கண்ணீர் கைகளாலிறைத்திறைத்து, வடதிசை நோக்கி "நின்று நின்று குமுறும்" என்ற வண்ணம் நெட்டுயிர்ப்புடன் புரண்டு துடிக்கிறாள். அவளது அந்தரங்க ஸகியான ஓர் மாது துக்கத்தைக் காட்டக் கூடிய முகத்துடன் பக்கலில் உட்கார்ந்து ஆதரவுடன் அடிக்கடி ஏதோ வினவியும் பதிலொன்றுங் கிடைக்கப் பெறுகிறாளில்லை. பெண்மணியோ இடையிடையே அறிவழிந்து மோஹிக்கிறாள். சற்று பயந்து தோழியானவள் கருணை கூர்ந்த குரலுடன் "அம்மா நேற்று ஸாயங்காலம் முதல் ஏனிவ்வாறு கசிந்த நெஞ்சினளாய் விட்டாய். எனக்கு ஒரு வார்த்தை சொல்லாயே" என்றாள்.

நெற்றியிற் கருங்குழல்களசைய, வாணெடுங்கண் மிளிர, கொவ்வைச் செவ்வாய் துடிப்ப "சொல்லுகேன் தோழி" என்று ஆரம்பித்தாள். நேற்று, பரந்த காவிரிக் கரையில் ஓர் சோலையில் ஒரு திவ்ய புருஷனைக் கண்டேன். உதிக்கும் சந்திரனது வெள்ளிய கிரணங்களில் அவனது திருமுகத்தைக் கண்டேன். அவனுடன் ஊழி தோறூழி பழகியதுபோல் தோன்றிற்று. அவரது அஞ்சன வண்ணத்தைக் காணுந்தோறும் "பண்டிவரைக் கண்டது எவ்வூரில்" என்றே தோன்றிற்று. தோழி! அந்த இருண்ட மெய்யானை அணுக யான் கூசுங்கால் அவனே என்பால் வந்து என் கைப்பற்றி.........."

பெண்மணி உடம்பு சிலிர்த்தாள். அவள் கண்களில் நீர் தாரை தாரையாய் பெருகிற்று. தோழி அவளது கூந்தலைத் திருத்தி "ஸகி! மேலே தெரிந்து கொண்டேன். உன்னுடன் அச்சோலையிற் கூடிச்சென்ற அவன் யார்? அவனது ஊர் எது?" என்றாள். பெண்மணியும் ஆரம்பித்தாள்—"தோழி—அவரைக் காணும்போதே நினைத்தேன். அவர் இந்த உலகைச் சேர்ந்தவரல்ல. என்னைப் பிரிந்து \போகுங்கால் தன்னை உள்ளவாறு காட்டினார். அவர் வெள்ளைச் சுரிசங்கோடாழி யேந்தும் வித்தகனார். பொன்னனைய புகருடைய பூமகளும் நிலமகளும் புல்கும் புனிதன்...செய்ய தாமரைக் கண்ணனுயிவ் வையமெல்லாம் தாயவன். பேராயிர முடையான்—

தோழி!—அவன் தன் பெருமையறியாது "சூட்டு நன்மாலைகள் தூயன வேந்தி" நிற்கும் சூரிகளையும் விட்டு மண்மகள் நிலமகள் தேட நிற்ப, மாகவைகுந்தம் விட்டு இப் பூமியில் திகழ்ந்து நிற்கும் கூடலூராளான். அவனுடைய பெருமை பேசிமுடியாதது! வேந்தற்கு தூது சென்ற வேந்தன்."—செறுந்தண்டிமி லேறுடைய நப்பின்னையின் கேள்வன்—"பிள்ளையுருவாய் தயிருண்டு அடியாருள்ளம் புகுந்தவன்"—"கூற்றேருருவிற் குறலாய் நிலநீரேற்றவன்"—"காவிப்பெரு நீர்வண்ணன்"—தோழி! இத்தகைய பெருமை வாய்த்தவன் இனிதுறையும் ஊர் சொல்லுவேன் கேள்—



அந்த நற்பதியினைக் காவிரி நன்னதியிருகிளையாகத் தழுவும்—பரந்த வீதிகளை யுடையது. வீதிகள் தோறும் "பொற்பனைய மாடங்கள் பொலிந்து" தோன்றும். மாடங்கள் தோறும் துகிலார்ந்த கொடிகளசையும். மன்றங்களூடே மகிழ் தென்றலுலவும். மணிகளிழைத்த ஒளி மனதைக் கவரும். ஆடல் மகளிரின் ஆர்ப்பு ஓவாது. "காந்தள் விரல் மென்கலை நன்மடவார் கூந்தற் கமழும்" சோலைகளில் வளம் பெருகி தேன் வெள்ளமிடும். "நறுந்தண் தேனை யுண்டு வண்டு குறிஞ்சி பாடும்."

வயல்களில் செந்நெலுயர்ந்து அதன் நிழல் வாய் கரும்பு புனைக்கும் அச் செந்நெற்கவரி வீச வண்டு பாட மயிலாட மடவன்னம் பெடையொடு துயிலும். "கள்ள நாரை கயல் மீன்களைக் கொள்ளை கொள்ளும்." வண்டலார்ந்த அலையுள் கெண்டை மிளிர நீண்டு பணைத்த கெண்டைகளை மின்னற் கொடியென்று நினைத்துப் பதறி கொண்டல் அதிரும். "எக்கலிடு நுண்மணல் மேல் எங்கும் கொக்கின் (ஒட்டு மாமரம்) பழம் வீழ்ந்து கிடக்கும் "பெறுந்தண் முல்லைப்பிள்ளை ஓடிக் குருந்தம் தழுவும்"—"இலைதாழ் தெங்கின்மேல் நின்று இளநீர்க் குலைகள் வீழ்ந்து மலிர்ந்து கிடக்கும் கிடங்குகள். நீர் நிலைகளின் அருகே அலர்ந்த கைதை மலர்களைக் கண்டு குருகென்று அஞ்சி கெண்டைகள் ஓடி ஒளியும். இப்படிப்பட்ட இனிய இடத்தில் பரமபதத்திற் காட்டில் அன்புகொண்டு எனக்காக நிற்கிறான் **வையங்காத்த பெருமான்**. அவனது வரையாகத்தில் நமது வெந்துயர் கெட்டு வேண்டும் வாழ்வை யாம் பெறவே ஓர் வஞ்சிக்கொடி துலங்குவாள். அவளே "நல்விரை மலர் கோதிய மதுகரம் குலவிய மலர்மகள்"—அன்னவள் காதல் செய்யும் இடம் அதோ வடதிசையில் தெரிகிறதே. அவன் பிரிந்தது முதல், தோழி, "வாளாய கண் பனிப்ப," "மென்முலைகள் பொன்னரும்ப" நாளும் நினைந்து வருந்துகிறேன் என்று சொல்லிப் படுக்கையில் சாய்ந்து விம்மிவிம்மி அழுதாள்.

இந்தப் பெண் யார்—இவளே **பரகால நாயகி**. கூடலூர் என்ற திவ்ய தேசத்தையும் அங்கு திருக்கோயில் கொண்ட பூங்கொடிப் பிராட்டியுடனமர்ந்த வையங்காத்த வள்ளலையும் இவர் அனுபவித்த முறை வர்ணித்துச் சொல்ல இயலாது. எம்பெருமானுடைய உபய விபூதி நாயகத்வம் கிடக்கச் செய்தேயும் அவன் நமக்காகத் தாழ்ந்து தம் பெருமையறியாது இம் மடவலில் நடையாடியதையும் அதினிலும் ஏற்றமாக ஓலையைக் கழுத்தில் கட்டி

"தூது போ" என்ற வேந்தர்க்குத் தூது செல்லும் நீர்மையையும் முதலில் அளவிலா ஆனந்தத்துடன் சொல்லி அனுபவிக்கிறார்—"நாடுடை மன்னர்க்கு தூது செல் நம்பி" அல்லவா அவன். புராண வாயிலாக உள்ள பெருமையை விட கோடானுகோடி மடங்காகப் பரகாலன் பாசுரம் பெற்ற பெருமையே கூடலூர்க்கு ஏற்றமாகும். அவனது சொல் "கோவைத் தமிழா"லாகி, "விழுமிய விசை பெற்று" "தொண்டர்க் கோரமுதாணல்"லவா?

---

## ஸந்த்யாவந்தன பாஷ்யம்.

எல். ரெங்கஸ்வாமி அய்யங்கார், மாடுங்கா, பம்பாய்.

ஸ்ரீமாந் வித்வான் காஞ்சீபுரம் ச்யாமதேசிக ஸ்ரீசைல தாதாசாரியாரால் மொழிபெயர்க்கப்பட்டு அனந்தாசார்யாராலும் சிதாராம சாஸ்திரியாலும் பரிசோதிக்கப்பட்ட ஸந்தியாவந்தன பாஷ்யம் என்ற நூல் ஒன்று இருக்கிறதென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இந்த நூலில் கண்ட வ்யாக்யானம் சிற்சில விடங்களில் பொருத்தமானதாக யிருக்கவில்லை. முக்கியமாக, அர்க்யப் ப்ரதானத்தைப் பற்றி சற்று கவனிக்க வேண்டியதாகயிருக்கிறது.

அர்க்யப்ரதானத்திற்கு காயத்ரீயே மந்த்ரம். வ்யாக்யான கர்த்தாக்கள் எந்த விதமாக அர்க்யம் கொடுக்கவேண்டுமென்பதையும் விஸ்தரித்திருக்கிறார்கள். இதில் இந்த அர்க்ய ப்ரதானம் சில ராக்ஷஸர்களை உத்தேசித்து அவர்கள் பாபம் போகவே பிராமணர்கள் ப்ராதக் காலத்திலும் ஸாயம் ஸந்தியாவிலும் அர்க்யம் கொடுப்பதென்றும் ஆத்ம ப்ரதக்ஷிணம் செய்து கொள்வதென்றும் கூறப்பட்டிருக்கிறது. எல்லாப் புராணங்களும் வேதோப நிஷத்துக்களும் துஷ்ட்ட நிக்ரஹ சிஷ்ட்டபரிபாலனம் செய்வதற்காகவே பகவான் ஒவ்வொரு யுகத்திலும் அவதாரங்கள் எடுக்கிறார் என்று முறையிடுகின்றன. இஃது இப்படியிருக்க ஏன் இந்த பிர்ஹ்ம வரன் மட்டும் ஸேதிக்காமல் போய்விட்டது. மற்றும் ஒவ்வொரு அவதாரத்திலும் எவ்வித பிர்ம்மவரனும் நிக்ரஹிக்கப்படவில்லையா. ராக்ஷஸர்களுக்காக யார் எந்தவிதமான புண்யாதிகளை ஸம்பாதித்துக் கொடுக்க முடியும்? இவ்விதமான வ்யாக்யானத்தினால், குடிகாரர்களும், லாகிரி வஸ்துக்கள் உபயோகிப்பவர்களும், சண்டாளர்களும், பிரஹ்ம ஸந்ததிகளானவர்களை தூஷணை செய்து வருகிறவர்களும் தாசி லோலர்களும் திருடர்களும், இன்



னும் பாபிஷ்டர்களும் இவ்விதமான வ்யாக்யானத்தை ப்ரதானமாக வைத்துக்கொண்டு தாங்களும் தங்களுடைய செயல்களை பாபமார்க்கத்தில் தீவிரமாக செலுத்திக்கொண்டும் தங்களுக்கு பாபமே கிடையாதென்று சொல்லிக்கொண்டு திருந்து கொண்டிருக்கிறார்கள்.

எனவே, ஸந்த்யாவந்தன கர்ம்மமானது ப்ராஹ்மணர்களினால், தாங்களை உத்தேசித்து பகவானுக்காக சேர்ப்பிக்கப்பட்ட முக்கியமான கர்மாநுஷ்ட்டானமாயிருக்கிறபடியால், இவ்விஷயத்தில் மற்ற ஜாதியினர்களும் குப்பினர்களும் ராக்ஷஸர்களும் மஹாபாதகர்களும் இதை தங்கள் சார்பாக வைத்துக்கொள்வதற்கு எவ்விதமான ஹேதுவும் கிடையவே கிடையாதென்பது திண்ணம். இவ்விதமான வ்யாக்யானத்தால் அஹிம்ஸா தர்மம் நழுவப்படுமேயன்றி, தர்ம நிலயமான காரியங்களொன்றும் கையாளப்படமுடியாது. ஆனது பற்றியே, இவ்விதமான க்ரந்தங்களை பண்டிதர்களும், வித்வான்களும் சற்று நிதானத்துடன் கவனிக்க வேண்டுமாக அடியேன் விஞ்ஞாபித்துக் கொள்ளுகிறேன்.

---

### பத்திராதிபர்.

ஸந்த்யாவந்தநாதிகர்மங்களுக்கு ப்ரயோஜநம் அவரவருடைய அதிகாராநுகுணமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ச்ருதி ஸ்ம்ருதிகளில் ஒவ்வொரு க்ரியைக்கும் சொல்லபட்டிருக்கும் ப்ரயோஜநங்களை உள்ளபடியே எடுத்துக்கொள்வது சரியன்று. ஸ்ரீவைஷ்ணவ விசிஷ்டாதிகாரிகள் செய்யும் ஸந்த்யாவந்தந அர்க்க்யாதிகளுக்கு ராக்ஷஸநிரஸநம் பலன் ஆகாது. கேவலம் பகவதாராதநரூபமேயாகும். இதை ஒவ்வொரு க்ரியாரம்பத்தில் ஸங்கல்பத்தால் தெளிந்து கொள்ளலாம்.

---

## மஹாகுருஸூக்தி ப்ரசம்ஸைகளில் அதிஜாம ரூகத்வமவஶ்யம்.

[ஓர் விமர்சகன்]

ஸர்வதேவதா ஸார்வ[illegible]வெதி ஸர்வ[illegible] [illegible]

[illegible] — [illegible] — [illegible] — [illegible] — ஸ்ரீவ[illegible]

[illegible] — [illegible] தங்களான [illegible]

[illegible] ங்களைப் பற்றின உண்மைகளுக்கெல்லாம்

மூலப்ரமாணமாயிருக்கும் ஸ்ரீஸூக்தம் என்ற ஶ்ருதிஸாமத்துக்கு விஶதமமான ஒப்பற்ற பாஷ்யத்தை அநுக்ரஹித்தருளின பெரிய ஜீயரென்று நிகமாந்ததேஶிகனால் ஸாரஸாரத்தில் கொண்டாடப்பட்டிருக்கும் ஸத்வாதஶிஷ்யஜநார்ஹராயொஶியால் விஶதமான அநூத ஸ்ரீஸூக்த பாஷ்யத்தை நாமெல்லோருமோதியுணர்ந்து போற்றிக் களிக்கும்படியான ஸாமர்த்யஶாலிகளாகும்படி வெகு பரிஶ்ரமத்துடன் அச்சிட்டு ப்ரசுரித்தவராய் உ.வே. ஸ்ரீ. திருக்கோட்டியூர் ஸ்வாமி ஶிஷ்யராய், புதுக்கோட்டை ஆங்கில கலாசாலையில் ஸம்ஸ்க்ருத ஆசிரியராய் விளங்கும் உ.வே. ஸ்ரீ. ஸ்ரீநிவாசராகவாசார்யர் (M. A.) என்கிற ஸ்வாமிகள் செய்த இம்மஹோபகாரத்துக்கு எவ்விதமாய் நன்றி பாராட்டினாலும் போதாதே யென்று தடுமாற்றங்கொண்ட மனமுடைய அடியேன், அம்மஹானுக்கு ப்ரத்யுபகாரமாக ஓர் குற்றேவல் செய்யும்படி இப்போது நேர்ந்திருக்கிறது. அதாவது, தேஶிகதிவ்யஸூக்திஶைலியின் மேல் அந்த ஸ்வாமி ஒரு குறை சொல்லும்படி ஸமீப காலத்தில் நேர்ந்து, அதை அடியேன் இப்போது அறிய வந்ததை எடுத்துக் காட்டி, அவ்வபசாரத்துக்குப் பரிஹாரமாக, ஶப்தார்த்த ஸௌஷ்டவ தேஶிகஸ்மரணமதியொன்றே தேஶிக தைவமாகும் திவ்யப்ரபந்தத்தின் சிறப்பைக் கணிக்கக்கூடியதென்று எடுத்துக்காட்டிச் சொல்லாமற்போனேனேயானால், லோகோபகாரியான இந்தப் புதுக்கோட்டை ஆசிரியர் விஷயத்தில் செலுத்தவேண்டிய கடமையைச் செலுத்தாத பெருங்குற்றவாளியாவேனென்ற பயத்தால், இப்பத்திரிகை மூலமாய் எடுத்துக் காட்டப் புகுவதெல்லாம், ஆசிரியர் ஸ்வாமிக்கும், பத்ரிகைகளிலுள்ள பண்டித பாஷணங்களைக் கொண்டே தத்வஹித புருஷார்த்தங்களை அறிந்து கொள்ள முயலும் இக்காலத்திய ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்துக்கும், அடியேனுக்கும் பரம நன்மையை உத்தேசித்ததேயென்று நம்பும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

2. சென்ற புரட்டாசி மாஸத்துச் ஸுதேசமித்ரன் பத்ரிகையின் விஜயதசமி மலரில், புதுக்கோட்டை கலாசாலை ஆசிரியர் ஸ்வாமிகள், ஸ்ரீ தேஶிகாவதார மஹோத்ஸவத்தைக் கொண்டாடும் வகையில், விசேஷ பரிஶ்ரமத்துடன், உதாஹரண பூர்வகமாகச் செய்திருக்கும் ஸ்ரீ தேஶிக கவிதா ப்ரஶம்ஸையை, யாத்ருச்சிகமாக அடியேன் இப்போது வாசித்துப் பார்க்கும்படி நேர்ந்தது. தேஶிக ஸூக்திகளிலும் முக்கியமாய் ஹம்ஸ ஸந்தேஶம், யாதவாப்யுதயம், தமிழ் ப்ரபந்தங்கள், இவைகளில் காணப்படும் கவிதையின் அழகும், கல்வித்திறமையும், உயர் பொருள் விளக்கமும் வர்ணிக்-



பட்டிருந்ததைப் பார்த்தேன். புதுக்கோட்டை ஆசிரியர் போன்ற வடமொழி தென்மொழிக் கல்வித் திறமையையுடையவர்களின் உதவியால், தேஶிகதிவ்ய ஸூக்தி பரிஶீலனத்தில் அபிவ்ருத்தியுண்டாகும் ஜன்ம ஸாபல்யம் கிடைக்கும்படியாயிற்றே என்ற ஆவலுடன், வரிவரியாய் வாசித்துப் பார்த்தேன். ஹம்ஸ ஸந்தேஶத்தைப்பற்றி ஆசிரியர் செய்த முதற் ப்ரஶம்ஸை—

“இது காளிதாஸனுடைய மேக ஸந்தேஶத்தைப் போன்றது. மஹாகவியை அனுசரித்து இது எழுதப்பட்டது. அதற்கு நிகராயிருப்பது.”

(இங்கு அடிக்கோடுகள் அடியேனுடையவை)

அதாவது, லோகஸாமான்ய த்ருஷ்டியால் மஹாகவியாகக் கொண்டாடப்படும் காளிதாஸாதிகளின் கோஷ்டியில் ஸ்ரீதேஶிகனுக்கும் ஓரிடத்தை நம் புதுக்கோட்டை ஆசிரியர் அளித்துவிட்டபடி! முதன் முதலாகவே காளிதாஸனைக் காட்டிலும் அதிகப்படியாகச் சொல்வதற்குப் பயந்த நம்மாசிரியர், பிந்தி யோசிக்கும்போது, தாம் செய்த ப்ரஶம்ஸை போதாதென்று உள்ளத்திற்படவே,

“சில விடங்களில் அதனிலும் (அதாவது மேகஸந்தேஶத்திலும்) சிறந்து நிற்கிறது.”

என்று கொஞ்சம் அதிகப்படியாகவே தேஶிகவிரசிதஹம்ஸஸந்தேஶத்தைப் புகழ்ந்து விட்டபடி! இவ்வதிகப்படிப் புகழ்ச்சியை உதாஹரணங்களால் முடிந்தமட்டும் ஸ்திரீகரித்தார் போலும்.

3. உண்மையில், இவ்விரண்டு காவ்யங்களுக்குமுள்ள ஸாம்யம் எம்மட்டுமென்றால், பாஷை வடமொழி, நடை செய்யுள் நடை, விஷயம் பிரிவாற்றாமையால் ப்ரியநாயகிக்கு ப்ரியநாயகன் விடுந் தூது; ஸந்தேஶரூபகாவ்யங்களில் ஶ்ருங்காரரஸ ப்ராதான்யத்தின்மேல் ஸஹ்ருதயகவிலோகத்தாருக்கிருந்த ஓர் உசித பக்ஷபாதம்.—லளித மனஸ்கரான விரஹிகளின் மனோஹரமான வசனங்களான சிற்சில பதவாக்ய ப்ரயோகங்களிலிருக்கக்கூடிய ஒற்றுமை—என்ற இவ்வகையான சூவாத ஸாம்யங்களைக்கொண்டே, மஹாகவி காளிதாஸவிரசிதமான மேகஸந்தேஶ காவ்யத்தையும், “தார்க்கிக தேஜோஸம்ப்ரதாய ஶக்தி” யான தேஶிகனாலருளிச் செய்யப்பட்டதாய், ‘அநந்யார்ஹ கவித்வ’மும் ‘நிஷ்கர்ஷ ஹம்ஸ வர்ணனாவஹித’மும் ‘அநேகார்த்த யுக்தி’முமான ஶாஸ்த்ர திவ்யப்ரபந்தத்திலுடைய வரதேஶிகாஜ்ஞா ஸந்தேஶ

ஶிக்ஷிதா ஸர்வஶிக்ஷிதா । யஸ்யோக்திபி: நூதநம் ஸர்வவர்ஷாணாம் வேஷ்டி விஶ்வஸ்வ ஸித்தேந ।।”) என்றும்,

“ஸமஸ்த ராமாநுஜ ஸித்தாந்தத்தை நன்கு விளக்கி, ஸகலவிதச் சொற்பொருளழகுகளும் பொருந்தி, பரம இனிப்புடையவையாய், ஸகல ப்ராஜ்ஞர்களினுள்ளா முகக்கச் செய்யுமவையாய், பொறுமையுடையவரையும் தனிமையில் ஶிர: கம்பம் பண்ணும்படி செய்வனவுமான திவ்ய ஸூக்திகள் எவருடையனவோ அந்த நிகமாந்த தேஶிகன் நம்மெல்லோர்க்கும் நலமளிக்கக் கடவர்.”

(=“யதுக்தயோ யதிபதிஸித்தாந்த தீபிகாஸ்ஸுலக்ஷணாஸ்ஸதாஸ்வாதா: । ஸஹ்ருதய மௌலி ஸததம் கம்பகாரிண்ய: ப்ரஶம்ஸிதா: ஸ வேங்கடேஶோ தஶ்யாத் ஶ்ரியம் ।।”) என்றும்,

“எவருடைய ஸூக்திகளில் செய்த ஸ்வல்பகால பரிசயங்கூட ஸஜ்ஜனங்களுக்கு, மற்றவர்களாலமைக்கப்பட்ட க்ரந்தங்களில் பற்பல ஆண்டுகளாகச் செய்த பயிற்சியாலுண்டாக்கக் கூடிய கல்வித்திறமையை எளிதிலளித்துவிடுமோ, அந்த யதிராஜமதோத்தாரகரான கவிதார்க்கிக ஸிம்ஹத்தை வணங்குகிறேன்” (=“யதீயஸூக்திஷு க்ஷணம் பரிசிதிர்ஹி ஸதாம் ஆதநோதி தநோதி பஹுவத்ஸர ப்ரகரணாந்தராப்யாஸஜாம் । தமேஷ யதிராஜ ஸித்தாந்த ஸமுத்தாரகம் நமாமி கவிதார்க்கிக ஸிம்ஹமதிவ்யபுங்கவம் ।।”) என்றும்,

மஹாகுருவின் அவதாரஸஹஸ்ர ப்ரதிவாதிஜனர்களான ப்ரதிபட மோஹிகள் செவியுறும்படி தேஶிகஸ்வத்திர தண்டகை என்ற ப்ரஸித்தியையுடைய எழுபது செய்யுட்களாலே, அரங்கனுர் திருமுற்றத்தில் ஶபத பூர்வகமாக கோஷித்தருளின (தூப்புல் நயினர் திருவடிகளான) ஹஸ்திகிரி நாராயணர் வெனுந்திரு நாமமுடைய ப்ரதிவாதிபயங்கர மஹாஸிம்ஹத்தின் கர்ஜனங்களும்;

தேஶிகோ நிகமாந்தார்யோ தஸ்ய ஸார்வஜ்ஞோ வா ஸர்வதந்த்ர: ।
தத்ஸூக்திஷு ப்ரவ்ருத்தோ நாஸ்தி நாஸ்தி ஸமோ ஜக ।।”

என்றும்,

“ஜயதி ஸகலவித்யா வாஹிநீ ஜந்மஶைல: …… தஸ்ய ஸூக்தி: ।

“நிகமாந்தகுரோ, தேவரீராலருளிச் செய்யப்பட்ட திவ்யஸூக்திகளாகும் கங்காநதீப்ரவாஹாம்ருதவெள்ளத்தில் முழுகி நீந்தி விளையாடிப் பருகிக்களிக்கும் ராஸிக்யமற்றமனுஷ்யம்ருகத்தை எப்போதாவது நினைக்கும்படி அடியோங்களுக்கு நேர்ந்துவிட்டால், அதனுலுண்டான தோஷத்தை “ஸ்ரீக்ருஷ்ணாய நம:” என்று நூற்றெட்டுத் தடவை ஜபிப்பதினுல் போக்கிவிட்டு, பரிஶுத்தர்களாகி, அதற்குமேல் தேவரீருடைய திருவடிகளை நோக்கி வணங்குவோமாக.” (=“த்வதீய ஸூக்தி ஸுதா ஸரித் ப்ரவாஹ ஸ்நாந க்ரீடாபாநாத் ஸுஸ்வாத ரஸிகவர்ஜிதநர பஶும் ஸம்ஸ்ம்ருத்ய யதி ஜபேம ஸ்ரீக்ருஷ்ணாய நம இதி அஷ்டோத்தரஶதம் தத: பரிஶுத்தாஸ்ஸந்த: தவ பதாம்போஜயுகம் நமேம ।।” என்று,

அறுதியிட்ட சோளசிங்கபுரத்துச் சண்டமாருத மஹாஸிம்ஹத்தின் கர்ஜனங்களும், ஸ்ரீதேஶிகஸூக்திகளின் பரம பாவநத்வாதி விஶிஷ்ட பரம கோமளதைக்கு ஒப்பற்ற ஸாக்ஷிகளன்றோ?

7. இவைகளெல்லா மொருபக்கமிருக்க, ஸாஹஸ்ர ஸுந்தரஸூக்தி ப்ரபந்த வசநங்களால் ஆஸ்திகஜனங்கள் மயங்காமல் உண்மையிலிழியும்படி, ஹிதோபதேசமாக ‘ப்ரபந்நஜன ஸந்ததி ஸம்ரக்ஷணவ்ரதிக'ராய், திவ்யதம்பதிகளின் க்ருபையை பூர்ணமாய் வஶீகரித்திருக்கும் தம் ஹிதோபதேசச் சொல்லில் நம்பிக்கையை நிலைக்கச்செய்யும் பரமஹிதபுத்தியால், “ஆவி நாடறைட்ட முக்தி அடையார் சியம்” எனும் ஸாத்விக மிடுக்குடைய திருமங்கை மன்னன் கணக்கிலே, “ஸத்யம் வதாமி தே ஸத்யம் ப்ரதிஜாநே ப்ரியோஸி மே” என்று கண்ணன் அர்ஜுனனுக்கு உண்மையை அருளிச்செய்த மாதிரியே,

“ தர்கேஷு கர்கஶதியோ வயமேவ நாந்யே
காவ்யேஷு கோமலதியோ வயமேவ நாந்யே ।
தந்த்ரேஷு நிஶ்சிததியோ வயமேவ நாந்யே
க்ருஷ்ணே ஸமர்பிததியோ வயமேவ நாந்யே ।।

“பரமார்த்திக கோமளமதோஷமான கவனத்தில் நாமேயன்றி மற்றொருவருமில்லை” என்று தேஶிகன் தாமே தம் கவிதையின் ஸர்வோத்தர விலக்ஷணதையைப்பற்றி வற்புறுத்திச் சொல்லியிருக்கு முண்மை நிறைந்த சொல்லே போதுமே, பரமார்த்தத்தில் நம்பிக்கையுடைய ஆஸ்திக வழிநடக்கும் தெளிவுடையாருக்கு!

பரம வ்யாபக பரதத்வமான திவ்யமிதுனத்தின் அஸாதாரண திவ்ய ஸ்வரூப ரூப குண விபவாதிகளையும் ஜகத்காரணமாகிற பரம புருஷார்த்தத்தில் உதார நிரவத்யமான ஸம்ஸாரிகளையும், அப் பரம்பொருளின் ஸர்வ ஸ்வாதந்த்ர்ய ஸௌலப்யாதிகளைப்பற்றின ஶாஸ்த்ர ஸ்வாரஸ்யங்களில் விஶதமமான தெளிவையும் பரமபுருஷார்த்தத்தை எளிதி

லடைவதற்கு வ்யாஜஸாபேக்ஷயான [illegible] யையை ஸ்வீகரிப்பதில் ஸமய[illegible]மான பரமஹிதா[illegible]ணத்தில் உன்னிப்பையும், ஸூக்தி பரிசீலனம் பண்ணுமாஸ்திகனுக்குக் காமதேனுவைப்போல் சுரந்துவிடும் பரம வீர்யத்தை யுடைய வடமொழி தென்மொழி மணிப்ரவாள வுருவங்களான அதிவிசித்ர மனோஹரா[illegible] திவ்ய ஸூக்திகளை, "[illegible]" என்றாற்போல் ஸூக்திகளின் அருமையறியாத நம்மிடம் மலிந்து கிடக்கும்படி கொட்டிவிட்டிருக்கும் கவிதார்க்கிக சிங்க மெங்கே, இதரகவிகளெங்கே? [ப-ர். ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸராகவாசார்யர் தேசிகன் ஸூக்தி, சற்று கடின பாகம் என்று சொன்னதை தூஷணமாக எடுத்துக் கொண்டதாக தெரிகிறது. கடினபாகம் தூஷணமாகாது என்பதை இவ் வுரையாசிரியர் அறிக.]

---

# தானம்.

ஸ்ரீரங்கம் வே. ராஜகோபால சர்மா.

दानं भोगो नाशः तिस्रो गतयो भवन्ति वित्तस्य ।
यो न ददाति न भुङ्क्ते तस्य तृतीया गतिर्भवति ॥

இந்த சுலோகத்தால் வித்தமாகிற பணத்தை பிறருக்குக் கொடுத்தோ அனுபவித்தோ உபயோகிக்காவிடில் நாசமாகிறது என்று ஏற்படுகிறது. ஆழ்ந்து கவனித்தால் இதில் கீழ்க்கண்ட விசேஷப்பொருள்களைக் காணலாம்.

அர்த்தம் அல்லது பொருள் என்பது நான்குவித புருஷார்த்தங்களில் மிகவும் முக்கியமானது. நமது ஹிதத்தைத் தேடிக்கொடுப்பது. இதன் உதவியாலேயே தானமூலமாய் தர்மரூபமாய் அதிருஷ்டமான ஆத்மாவானது ஆமுஷ்மிகாதி மோக்ஷபரியந்தமான பகவத்பாகவத கைங்கரிய ப்ராப்தியாகிற அதிருஷ்டமான பேரின்பத்தை யடைகிறது.

பத்த தசையில் ஞானஸங்கோசத்தினுல் சரீரத்தையே ஆத்மாவென்று பிரமித்து துக்கரூபமான சுகத்தையே பெரிதாகக் கருதும் நமக்கு பணமில்லாவிட்டால் இந்திரியங்களுக்கு சுகத்தைக் கொடுக்கும் பலவித ஐஹிக சிற்றின்பங்களும் கிடைக்காதென்பது தெரிந்த விஷயம். பொருளால் கிடைக்கும் சரீர போகானுபவமானது திருஷ்டபலம், நசுவரம், மரணத்தினுல் முடிவடைகிறது. தேவசரீர சம்பந்தமுள்ள ஆமுஷ்மிக சுகானுபவம் துக்கம் கலசாத சுகமாக நினைக்கப்படுவது. இது அதிருஷ்ட-



**क्षीणे पुण्ये मर्त्यलोकं विशन्ति** என்றபடி எக்கத்துடன் கூடிய சுகம். இதுவும் நசுவரம். ஆத்மானுபவமாகிற கைவல்ய சுகமும் பரமாத்மானுபவம் வரையில் செல்லாவிடில் விரும்பத்தகாத குறைந்த சுகமே. முடிவில் பேரின்பமொன்றே பிராகிருத சரீரஸம்பந்தமில்லாமல் துக்கலேசமும் கலசாததிகட்டாத ரஸகனமான சுகம். லோகத்தில் சுகத்தை நாடாத வஸ்துக்களே இல்லை. புல் பூண்டு ஊர்வனங்கள் பசு பக்ஷிகள் பகுத்தறிவுள்ள மனிதர்கள் விவேகிகள் எல்லோரும் துக்க நிவிருத்தியையும் சுகத்தையுமே விரும்புகிறார்கள். இதில் விவேகிகளான சான்றோர் மட்டுமே பேரின்பத்தை முக்கிய புருஷார்த்தமாக விரும்புவார்கள். இதற்கு இன்றியமையாத ஸாதனம் பொருள்.

உரைக்கும் சப்தம் ஆசையுடன் தழுவும் அர்த்தம் உள்ளபடி புத்திக்கு வந்து சேர்ந்திருப்பதுதான் 'பொருள்' என்று ஒரு பெரியார் திருவாக்கு. இங்கே பொருள் என்பது உள்ளபடி தர்மரூபமாய் அதிருஷ்டமான பேரின்ப பிராப்திக்கு ஸாதகமானுல் மட்டுமே அர்த்தம் என்று கொள்ளலாம். ஆகையால் தான் இந்த சுலோகத்தில் தானத்தை முற்படச்சொல்லியிருப்பது. நித்யமான சுகபிராப்திக்கு ஹேதுவானது. போகமோ வென்றால் நசுவரமான சரீரத்துக்கு சுகத்தைக் கொடுப்பது. ஆனது பற்றி போகத்தில் செலவு செய்யப்படும் பொருள் அர்த்தமற்றதாய்த் தீரும். இந்த சுலோகத்தால் நாம் தெரிந்து கொள்வது ஸாதக புருஷார்த்தமான பொருளை அதிகம் செய்வதில் முக்கியமாய் உபயோகித்து ஐஹிக ஆமுஷ்மிக சுகங்களுடன் முடிவில் பகவத்பாகவத கைங்கர்ய ரூபமான வீடாகிய பேரின்பத்தையடைய முயற்சி செய்யாவிட்டால் அது நாசத்தை யடைகிறது என்பதே.

நாம் கைவிட்டுக் கொடுக்கும் பொருள்தான் நமக்குச் சொந்தமானது. தானம் கொடுக்கும் சொத்துத்தான் உபயோகமாவது. நம்முடையது என்று நாம் பாடுபட்டுச் சேர்த்து வைப்பது பிறருடையது என்று நாம் அறிகிறோம். இந்த தத்வார்த்தத்தை செவ்வனே யறிந்து அனுஷ்டித்து வரும் நம் பிரதம ஸம்பாதகரான ரத்னதீபம் வழிகாட்டியாக நிற்பது போற்றத் தக்கது.

---

# ஆரணசாரம் அரியவுணவு.

திருமலை நல்லான் ராமகிருஷ்ணய்யங்கார் சிரோமணி.
ஆழ்வார் திருநகரி.

கீழ் வியாசத்தில், ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஆழ்வார்களை ஆச்ரயிப்பது தான் வழியென விளக்கினோம். மதுரகவியாழ்வார் இதற்குத்தக்க சான்றுவர் தேவுமற்றறியாமல் ஆழ்வார் பொன்னடிமேவி, தான் பெற்ற பேற்றைப் பற்றிச் சொன்ன சொல்லை நம்புவார்க்கு வைகுந்தம் காட்டித் தந்து உபகரித்த உதார புருஷர் மதுரகவியாழ்வார். இவர் தன் மனத்தில் தெளிவு பிறப்பியாத வேதத்தின் உட்பொருள் இவரால் தெளியப் பெற்றார். "மிக்க வேதியர் வேதத்தினுட்பொருள், நிற்கப் பாடி என்னெஞ்சுள் நிறுத்தினான்" அருளினான் அவ்வருமறையின் பொருள்," என்பனபோன்ற பொன்னுரைகள் காண்க. இத்தையடியொற்றியே "பாஷ்யகாரர் இது கொண்டு ஸூத்ர வாக்கியங்கள் ஒருங்கவிடுவர்" என்று ஆசார்யஹ்ருதயத்தில் அருளிச் செய்யப்பட்டுள்ளது. வேதாந்தத்தையே நிரூபகமாகப் பெற்ற தேசிகனும் "தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமென்று இவ்வுண்மையை அநுபவ பூர்வம் அநுக்ரஹித்தருளினார் "தெளியாத மறை" என்னுமிடத்திலுள்ள மறை என்னும் சீரிய சொல், "அருளினான் அவ்வருமறையின்" என்கிற சொல்லை நினைவூட்டுகிறது. அருமறை என்னுமிடத்தின் அருமை "தெளியாத" என்னும் சொல்லால் உரையிடப்படும் அழகு காண்க.

வடமொழியில் உள்ள வேதத்தில் பல விஷயங்கள் பேசப்பட்டுள்ளன. அவரவர் மனப்போக்குக் கேற்ப வேதம் சென்றுளது. ஸத்வம், ரஜஸ், தமஸ், என்னும் மூன்று குணங்களுள்ளவர்கள் எல்லாருமிழியுந்துறையது. "த்ரைகுண்யவிஷயா வேதா:" என்பது கீதை. முமுக்ஷுக்களான பெரியோர், இத்தகைய வேதசாஸ்த்திரத்திலிருந்து, தங்களுக்கு வேண்டிய ஸாராம்சத்தை மட்டும் எடுத்துக் கொள்கிறார்கள். இங்ஙனம் தத்துவத்தை ஆய்ந்தறிந்த வாழ்வார்கள் பரமகிருபையாலே பிற்பட்ட நம்போலியற்கும் பயன்படுமாறு அச் சாராம்சத்தைப் பிரபந்தமாக வெளியிட்டருளினர். "மறைப் பாற்கடலைத் திருநாமந்த்ரத்தால் கடைந்து............தமிழ்......அமிர்தம்...............அன்பரீட்டம் களித்தருந்த நிறைப்பான்" என்று நம்மாழ்வாரைப்பிள்ளைப் பெருமாளையங்கார் விசேஷித்துக் கூறுவது கவனிக்கத் தக்கது. வேதாந்த தேசிகனும் "அருமறைகள் தமிழ் செய்தான்" என்று அருளிச்செய்கிறார்.



"யாவாநர்த்த உதபாநே ஸர்வத: ஸம்ப்லுதோதகே, தாவாந்ஸர்வேஷு வேதேஷு ப்ராஹ்மணஸ்ய விஜாநத:' என்னும் கீதா சுலோகம் ஆழ்வாரை நோக்கியே அவதரித்ததுபோலும்!. க்ஷத்ரியனானவர்ஜுனனை நோக்கி அருளிச்செய்யும் பிரகரணமாகையிலே "பிராம்ஹண" என்னும் சொல் "வைதிகன்" என்னும் பொருளின் கண் நிற்கிறது. "வைதிகஸ்ய முமுக்ஷோ: யதேவ மோக்ஷஸாதநம் ததேவோபாதேயம் நாந்யத்" என்று இவ்விடத்தில் ஸ்வாமியின் பாஷ்ய ஸ்ரீஸூக்தி. எனவே, பரமவைதிகராய் முமுக்ஷுவான வாழ்வார் மோக்ஷத்திற் குறுப்பானவைகளையே கையாண்டு, பிறவற்றைப் புறக்கணித்தனர். இது திவ்யப் பிரபந்தத்தை ஆராய்ந்தார்க்குத் தெள்ளென விளங்கும்.

சிலர் இங்கு இங்ஙனம் சங்கிக்கக்கூடும். நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் முதலியவர்களுக்கு வேதத்திலேயே அதிகாரம் கிடையாது. இதையவர்களே ஒப்புக்கொள்கின்றனர். நம்மாழ்வார் "இருக்கார் மொழியால் நெறியிழுக்காமை நிலத்தேவர் வணங்குவார் யாமும் திருநாமச்சொல் கற்றனமே" என்று திருவிருத்தத்தில் அருளிச்செய்கிறார். யாமும் என்று தனித்துக் கூறிக்கொள்வதால், தனக்கதிகாரமின்மையை நன்கு காட்டுகிறார். "அவர்களுடைய (நிலத்தேவர்) பரிகரமின்றிக்கேயிருக்கிற நானும்" என்று இவ்விடத்தில் ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை உரையிடுகிறார். திருமங்கையாழ்வாரும் "அந்தணர் மாட்டந்தி" என்று பிராம்மணர்களுடையதாமாக வேதத்தைக் கூறி தனக்கதில் சம்பந்தமின்மையைக் காட்டிக் கொண்டார். ஆக, வேதத்திலேயே அதிகாரமில்லாமலிருக்கும் பொழுது, அதிலிருந்து சாராம்சத்தை எடுப்பது எங்ஙனே கூடும்?

ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்தத்தை உணர்ந்தார் இத்தகைய சங்கை செய்வதற்கிடமில்லை. எனினும் மேலெழுந்தவாரியாகத் தோற்றுமிந்த சங்கைக்கு சமாதானம் கூற நாம் கடமைப்பட்டுள்ளோம். ஆழ்வார் வேதாத்யயனம் செய்திலரேயாகிலும், பகவத்பிரஸாதத்தாலே வேதங்களையும் அவைகளின் உள்ளீடான பொருளையும் நேரே ஸாக்ஷாத்கரிக்கப்பெற்றனர். ரிஷிகள் யோகமஹிமையாலே ஸாக்ஷாத்கரிப்பர். ஆழ்வார்கள் பகவத்பிரஸாதத்தாலே. ஆகையால்தான், ரிஷிகளைவிட ஸாக்ஷாத்காரத்தில் தெளிவுபெற்ற வாழ்வார்கள் ஸம்சயவிபர்யயமறவருளிச் செய்கின்றனர். "ததா விதா" என்னும் சுலோகவ்யாக்கியானவதாரிகையில், வேதாந்ததேசிகன் "ஸ்வ பராபர ப்ரஹ்மாதிவி வேதாந்தாஹஸ்யவை ப்ரம்பதேஸ்ய ப்ரயமேத ஸுஹ்ருதை:" என்று விஷ்ணுபுராணத்தைவிட வேதாந்தாஹஸ்யத்தை

மிகவும் விளக்கவல்லன ஆழ்வார் ஸ்ரீஸூக்திகள் என்றருளிச் செய்வதால் இவ்வுண்மையை அறியலாம். லோகமர்யாதையை நிலைநாட்டுவதற்காகத் தங்களை வேதத்தில் அதிகாரமில்லாதவர்களாகக் கூறிக்கொள்கிறார்கள். இது தன்னை "அந்தணர் மாட்டந்தி வைத்த" என்கிற விடத்தில் ஸ்ரீ பெரிய வாச்சான் பிள்ளை ஸ்ரீ ஸூக்தியால் தெளியலாம். அதாவது :—" அந்தணர் மாடு' என்கிறார் காணும், தாமதிற்கு அயோக்யர் என்னுமிடந்தோற்ற. ஸர்வமும் திருவுள்ளத்திலே ப்ரகாசியாநிற்க வாய்விடுகை மர்யாதாஹாநி என்றிருக்கிறாரிறே. தாம் பரமவைதிகராயிருக்கச் செய்தே, பிறர் தநம் என்பாரைப் போலே அத்தோடு ஸம்பந்தமற வார்த்தை சொல்லுகிறாரிறே, உபப்ருஹ்மணார்த்தமாக. என்ப. ஆகையால் ஸாக்ஷாத்க்ருதமான வேதத்தின்ஸாரத்தை யாழ்வார் எடுத்துரைப்பது கூடும் என்க. சாதாரணமான வர்கள் விஷயத்தில் செய்யும் சங்கை விசிஷ்டர்களான வாழ்வார்கள் விஷயத்தில் செல்லாதென்ன தாயிற்று. ஶ்ருதிஶோத நிஷ்கர்ஷஸம்ஸதஸ்ய பாயாத்ஸ்ம்ருதிஷு । ஸத்யஸம்ப்ரதாய தொடாத பத்மநீப உதவத்வ." என்னும் தேசிகன் ஸ்ரீஸூக்தியிங்கு நினைக்கத் தக்கது. நிற்க,

பிள்ளைப்பெருமாளையங்கார் கூறியபடி மறைக்கடலில் மறைந்து கிடந்த அமுத (பிரபந்தம்)த்தை ஆழ்வார்கள் ஸ்ரீவைஷ்ணவ உலகிற்கு அருளியிருக்கின்றனர். தொண்டர்க் கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னதாக வவர்கள் கூறுமழகு களிக்கற்பாலது. நமது கீழ்வியாசத்தில் கூறப்பட்ட "நல்வழி"யே நடப்பார்க்கு வழியமுது வேணுமன்றோ? வாயுப வஹ்ணீகாக்ஷ நாஸ்ஸேத்தாஜ்ஞாவ்ரதம் என்ன கடவதிறே. ஸ்ரீவைஷ்ணவர் வழி நடைக்கேற்ப சுவைகுன்றாமலும் தெவிட்டாமலுமுள்ள உணவு ஆழ்வார்கள் திவ்ய ப்ரபந்தங்களே.

நல்விஷயங்களைக் கேட்பதை ஒரு உணவாகக் கூறுவது வழக்கம் "செவிக்குணவில்லாதபோது" என்று குறளாசிரியர் கூறுகிறார். பரீக்ஷித்து பகவத் கதைகளையே உணவாகக் கொண்டது ஜகத்பிரஸித்தம். ஆனால் அவ்வுணவுகளுக்கும், திவ்யப்பிரபந்த உணவுக்கும் மிகவும் வேறுபாடுண்டு ஏனெனில் வேதத்திலும் அதன் விரிவாய் இதிஹாஸ புராணங்களிலும் பகவத் விஷயத்தோடு, புறம்பான சிலவுங்கலந்துள்ளன. ராமாயண பாரதாதிகளிலே, கங்கா காங்கேய ஸம்பவாத்யஸத் கீர்த்தனங்கள் மலிந்திருப்பனவென்று ஆசாரியஹ்ருதயம் கூறுகிறது. ஆகவே கீதையில் கூறியபடி ஸாத்விக, ராஜஸ, தாமஸா ஹாரங்கள் மூன்றும் அவைகளில் இருக்கின்றனவென்று கொள்ளலாம். "திருமாலவன் கவி" என்று சொல்லுகிறபடி



திவ்யப் பிரபந்தங்கள் பகவத் விஷயத்தை மட்டுமே கூறுவதால் ரஜஸ், தமஸ், கலசாத தனி ஸாத்விக ஆஹாரம் என்று கூறக் குறையில்லை. "ரஸ்யாஃ ஸ்நிக்தாஃ ஸ்திரா ஹ்ருத்யா ஆஹாராஃ ஸாத்த்விகப்ரியாஃ" என்று கீதை கூறுமடையொழியெல்லாம் இந்த நல்லுணவுக்கும் பொருந்துகின்றன. பொருந்தவே ஸாத்விகர்களான நம் ஆசாரியர்கள், பிரபந்தங்களையே பேருணவாகக் கொண்டதில் சிறிதும் வியப்பில்லை. அவர்களுக்கு உண்ணு நாள் பசியாவதொன்றில்லை. பிரபந்தங்களால் மந்திரார்த்தத்தை யெண்ணு நாட்களே அவர்களுக்குப் பட்டினி நாட்கள். "தெரித்தெழுதி வாசித்துங் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன்போது" என்னும் புடையிலே திவ்யப்ரபந்தங்களில் காலக்ஷேபம் செய்தனர். "பாம்பணையான் சீர்கலந்த சொல் நினைந்துபோக்காரேல்.......என்னினைந்து போக்குவரிப்போது?" என்கிறபடியே திவ்யப்ரபந்தங்களை அநுஸந்தானம் செய்யாமல் நாட்டார் காலத்தைச் செல்லவிடும்படி எங்ஙனே? என்றிருப்பர் நம்பூருவர். உண்ணாது ஒருவன் உலகயாத்திரை நடத்திப்போந்தாய் அது வியப்பேயன்றோ? நமது பெரியோர் "சீர்பரவாதுண்ணா வாய்தானுறுமோ வொன்று" என்கிறபடி தமது திருவாயால் திவ்யப்ரபந்தங்களைத் தவிரப்பிறிதொன்றையும் உண்டறியார்கள்.

"தொல்வழியே நல்வழியாய்" என்று வேதாந்த தேசிகன் குறித்த நல்வழியே நடப்பவர்க்கு தக்க வழி உணவு திவ்யப்ரபந்தங்கள்தான் என்பது யாவருக்கு உடன்பாடே. உலகமே அந்நமயமாகச் சம்சாரிகட்குத் தோற்றுவதுபோலே நம் ஆசார்யர்கட்குத் திவ்யப்ரபந்தம்.

"உறுபெருஞ்செல்வமுந் தந்தையுந் தாயும் உயர்குருவும், வெறிதரு பூமகள் நாதனும் மாறன் விளங்கிய சீர்நெறிதரும் செந்தமிழாரணமே என்றிந்நீணிலத்தோர் அறிதர நின்றிராமாநுசன் எனக்காரமுதே" என்கிற பாசுரத்தில் கூறியபடி தோற்றுகிறது.

"மாறன்கலை உணவாகப் பெற்றோம்" என்று இவ்வமுதை அருந்தி சுவையறிந்த ஒரு பெரியாரருளிச் செய்கிறார்.

---

## ஓர் ஸ்ரீ வைஷ்ணவதாஸன் செய்யும் விண்ணப்பம்

சென்ற ஆனிமீ'த்திய ஸ்ரீ வே. தீபிகையில் 'ப்ராம்மண்யமும் ஸ்ரீவைஷ்ணவமும்,' என்ற விஷயத்தில் வேதாத்யயநத்தால் பிராம்மண குலமும் திவ்ய ப்ரபந்த படனத்தாலேயே ஸ்ரீ வைஷ்ணவத்வமும் ஸித்திப்பதாக நிஷ்கர்ஷிக்கப்பட்டிருக்கிறது.

இந்த பிராம்மண குலம் "**अनागतां तु ये पूर्वां अनतीतां तु पश्चिमाम् । सन्ध्यां नोपासते विप्राः कथं ते ब्राह्मणाः स्मृताः ॥**" '**विष्णुं क्रांतं वासुदेवं विजानन् विप्रो विप्रत्वं गच्छते तत्त्वदर्शी**' இத்யாதி பிரமாணங்களால் காலாதிக்ரமமில்லாமல் ஸந்த்யாவந்தனம் செய்தல், பகவத் பக்தி முதலியதாலும் இப்பிராம்மண குலம் ஏற்படுவதாகத் தெரிகிறது. வேதாத்யயநம் மாத்திரம் இதற்குக் காரணமன்று. வேதத்தைக் கொஞ்சம் அத்யயநம் செய்வதால் பிராம்மணனாகிறானென்றும் ஓர் சாகையை அத்யயநம் செய்வதால் அநூசானனாகிறானென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதை யனுஸரித்து வேதாத்யயநத்தால் பிராம்மண குலம், அநூசானகுலம் இரண்டும் ஏற்படுவதாகவோ பிராம்மண குலத்தைக் காட்டிலு முயர்ந்த அநூசானகுலம் ஏற்படுவதாகவோ சொல்லவேண்டுமே யொழிய மட்டமான பிராம்மண குலம் மாத்திரம் ஏற்படுவதாகத் தெரிவிக்கும் ஸம்பிரதாய வாக்யம் ஸரி யன்று. இதேமாதிரி ஸ்ரீ வைஷ்ணவத்வம் திவ்யப் பிரபந்த படனத்தால் மாத்திரம் உண்டாவதில்லை. செய்யாமல் போனால் ப்ரத்யவாயத்தை உண்டாக்கும் பஞ்ச ஸம்ஸ்காரம் ஆக்ஞாநுஷ்டானம் முதலியதாலும் ஏற்படுவதாக ப்ரமாணங்களிலிருந்து தெரிகிறது. பஞ்சஸம்ஸ்காராதிகளால் ஸ்ரீ வைஷ்ணவத்வம் உண்டாவதாகச் சொல்லவில்லையே என்று சங்கிப்பதற்கில்லை. 'அறியக் கற்று வல்லார் வைட்டணவர்' என்ற இடத்திலும் திருவைட்டணவர் என்று சொல்லப்படவில்லையே. ஆகையால் முன்பு நிரூபித்தபடி வேதாத்யயநத்துக்கும் பிராம்மண்யத்துக்கும், திவ்யப்ரபந்த படனத்துக்கும், ஸ்ரீ வைஷ்ணவத்வத்துக்கும் அவ்யபிசரிதமான ஸம்பந்தம் இல்லாததால் இவைகளுக்குக் கார்யகாரணபாவமே அநுபபன்னம். ப்ராம்மண்ய ஜாதி வேதாத்யயநத்தால் உண்டாவதாகச் சொல்லுவது ஸரியன்று என்று முன் ஸஞ்சிகையில் நிரூபிக்கப்பட்டது' விசிஷ்டாத்வைத மதஸ்தர்களான பிராம்மணர்களே ஸ்ரீவைஷ்ணவர்களென்று வழங்கப்படுவதாகவும் அப்படிச் செய்வதில் தோஷமில்லை யென்றும் சொல்லுகிறார்கள்.

முன்னடி பின்னடியாக அருளிச்செயலை ஏதோ ஒரு காலத்தில் ஸமயக் குறைவினால் ஸேவித்திருந்தாலும் ஸேவை பண்ணும் ஸமயமெல்லாம் இவ்விதமே ஸேவிப்பது உசிதமாகுமா? இப்படியானால் 'திருவிருத்தத்தோரடி கற்றீர்' என்கிறபடி திருவிருத்தத்தில் ஓர் அடிஸேவித்தால் போதுமே! நாலாயிர திவ்ய ப்ரபந்தங்களை ஸேவிக்கவேணுமா? ஆகையால் ச்ரமத்தைப் பாராமல் அதற்கு வேண்டிய ஸமயத்தை வைத்துக்கொண்டு வ்யுத்பன்னர்களான ச்ரோதாக்களுக்கு அர்த்தக்ஞான முண்டாகும்படி அக்ஷராதி லோபமில்லாமல் ஸேவிப்பதே உசிதமாகத் தோன்றுகிறது.



---

## ஸத்சம்ப்ரதாய விருத்தமில்லாத சர்க்கரையின் உற்பத்தி விஷயம்

திருக்குருகூர் ஸ்ரீ அ. தே ராமாநுஜய்யங்கார்.

அநேக நியமங்கள் சம்ப்ரதாயங்கள் அடங்கிய வைதீக சனாதன தர்மத்தை அனுஷ்டிப்பவர்கள் சாப்பிடுவதற்குரிய பொருள்களைப்பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டியது முக்யமாகும். பெரும்பாலும் அதி முக்யமாக். யாவராலும் விசேஷமாய் உபயோகப்படுத்தப்படும் சர்க்கரை உத்பத்தி விஷயமாய் ஆனி மாதத்திய தீபிகையில் கனம் பத்திராதிபரால் எழுதப்பட்டுள்ள வியாஸம் மூலம் அஸ்கா சர்க்கரைக்கு குற்றமில்லையெனத் தெரிகிறது. மைசூர் மண்டயம் ஷுகர் பாக்ட்ரியிலும், நெல்லிக்குப்பம் ஜீனி (சர்க்கரை) ஆலையிலும் சர்க்கரையில் வெளுப்பு வர்ணத்தை உண்டாக்கவேண்டி மாட்டெலும்பு உபயோகப்படுத்தும் வழக்கத்தை ஒழித்து கந்தகப் புகையை உபயோகப்படுத்தி வருவதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தேவகோட்டை ஸ்ரீமான் டி.எ.ஆர்.எம். ராமநாதன் செட்டியாரால் நடத்தப்பட்டுவரும் ஆழ்வார்திருநகரி சர்க்கரை மில்லில் வானமாமலை ஸ்ரீமான் என். எஸ். டி. சாரியரால் ஐந்தாறு வருடங்களுக்கு முன்னதாகவே மாடுகள் எலும்புக் கறியின்றி தாவர சம்பந்தமான கரிகளைக் கொண்டு சர்க்கரையை பக்குவப்படுத்த ஆரம்பிக்கப்பட்டு இன்றும் மாட்டெலும்பின்றியே காரியம் நடைபெற்று வருகிறது. மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் பெரும்பாலும் ஆழ்வார்திருநகரி சர்க்கரையே செலவாகிறதாய்த் தெரிகிறது.

சென்னை மாகாணம் தவிர மற்றவிடங்களில் விசேஷமாய் பெருங்காயம் உபயோகப்படுத்தும் வழக்கமில்லாமலிருப்பதுடன் வைதீக சம்ப்ரதாய முறையில் குறைவும் சொல்லப்படுகிறது. பெருங்காயம் சம்பந்தமான உசிதானுசிதங்கள் நமது தீபிகையில் வெளிவருதல் நலமாகும்.

சர்க்கரை உற்பத்தியில் எலும்புக்கறி உபயோகிக்கும் முறை ஒழிக்கப்பட்டு, கந்தகப்புகை, தாவர சம்பந்தமான கறி உபயோகிக்கப்படுவது எங்கும் பரவி வருவது பாராட்டத்தக்கதாம்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக !

---

## மதுரைமாநகரில் அட்டகாசம்

திருக்குருகூர் ஸ்ரீ அ. தே. ராமாநுஜய்யங்கார்.

நவீன விஷமப்ரசாரம் மலிந்துள்ள தற்காலம், தார்மிகர்கள் தங்களுக்குள் பல அபிப்ராய பேதங்களை உண்டுபண்ணிக்கொண்டு வடகலை, தென்கலை, சைவர், வைணவர் எனசண்டையிட்டுக்கொண்டு விஷமிகள் பேச்சுக்கு பதிலிறுக்காமல், தங்கள் போக்கிலேயே தகராறுகள் செய்துகொண்டு பொது மத விஷயங்களை பிறமதஸ்தர்களும் ஏளனம் செய்யும் நிலையில் விட்டுக்கொண்டிருப்பது வருந்தத்தக்கதாம். சாரதா ஆக்ட் மூலம் நமது வீட்டிலுள்ள சங்கடம் கஷ்டம் யாவரும் அறிந்ததே. அரசியல் வாதிகள் பலவித ஆர்ப்பாட்டங்கள், தந்திரங்கள் செய்து ஜர்மன் ஆஸ்த்ரேலியாவை கபளீகரம் செய்தது போலும் நவீநர் துணிகரமாகத் திருட்டுக்கள் நடத்தியது போலும், மதுரை ஸ்ரீ மீனாக்ஷிகோவிலிலும், கூடலழகர் தேவஸ்தானத்திலும் தீண்டாதார்களை நுழையவிட்டு அதிகாரிகள் ஆதரவையும் நாடி ஆர்ப்பாட்டங்கள் மூலம் ஜாதிதர்மம் வர்ணதர்மம் ஆகியவைகளை த்வம்ஸம் செய்து குலைக்க ஆரம்பித்துவிட்டனர். தர்மஸ்தாபன மடாதிப திஸ்வாமிகளும் ஸ்ரீ சங்கராசாரியார்களும் பணவிரயம், உயிர்நாசம் ஆத்மத்யாகம் செய்யவும் முன் வந்து யாவர்க்கும் வழிகாட்டியாய் தர்மரக்ஷணம் செய்ய, பெரும் ஆபத்தான இச்சமயத்திலும் கவனியாவிடில் ஜாதிமத தர்மம் ஒழிந்து நவீனர் போக்கு ஓங்குமென்பது திண்ணம். தார்மிக சம்ரக்ஷண மடாதிபதிகளும் பிரமுகர்களும் நன்கு கவனித்து வேண்டுவன செய்ய வேண்டியது கடமையாகும். பகவத் கடாக்ஷமுண்டாவதாக.

---

## முமுக்ஷுக்களின் ப்ராயச்சித்த விவேசநம்

தி. ஈ. வீரராகவாச்சாரியார், திருவாதி.

முமுக்ஷுக்களுக்கு அவரவர் அதிகாரத்திற்கு அனுகுணமாக பக்தி, ப்ரபத்தி இவை மோக்ஷ ஸாதனங்களாகிறப்போலே எல்லா பாபங்களுக்கும் ப்ராயச்சித்த ரூபங்களுமாகின்றன என்று சாஸ்திரங்களில் சொல்லியிருக்கின்றது.



அவற்றில் உபாயானுஷ்டானத்திற்கு முன் செய்துள்ள பாபங்கள் ப்ராரப்தங்கள் என்றும் ஸஞ்சிதங்கள் என்றும் இரண்டு வகைப்படும். பலனை கொடுத்துக்கொண்டிருக்குமவை ப்ராரப்தங்களாகும். பயன் தருவதற்கு ஆரம்பமாகாமல் சேமிக்கப்பட்டுள்ளவற்றை ஸஞ்சிதங்கள் என்கிறது.

ஸம்ஸாரிகள் ஏராளமான தான்யங்களை உத்பத்தி செய்து அவற்றைக் களஞ்சியத்தில் சேர்த்துவைத்து அவ்வப்போது ஆஹாரத்திற்கு வேண்டியவற்றை உபயோகித்து வருகிறார்கள் அன்றோ. இப்படி உபயோகித்து வரும் தான்யங்களைப் போன்றவை ப்ராரப்தங்களாகும். களஞ்சியத்துள் மிகுதியாயுள்ள தான்யங்களைப் போன்றவை ஸஞ்சிதகர்மாக்கள். இது வரையில் பலன் தராமல் இனி பலனைத் தருவதற்கு ஸித்தங்களாயிருக்கின்றன இவை.

இவ்விருவகைப்பட்ட முன் செய்துள்ள வினைத்திரளில் பலன் கொடுக்க ஆரம்பித்துள்ள ப்ராரப்தகர்மாக்களைத் தவிர்த்து மற்றுள்ள ஸஞ்சிதங்கள் பக்தன் விஷயத்தில் பக்தியின் ப்ரபாவத்தினால் தீயினில் தூசாகும்.

ப்ரபன்னன் விஷயத்திலோவென்றில் முன் செய்துள்ள ப்ராரப்த பாபங்களும் ப்ரபத்தியின் ப்ரபாவத்தினால் நாசம் அடைகின்றன. அந்த ப்ராரப்தங்களில் எவ்வளவு அம்சத்தை இவன் இசைக்கின்றானோ அதைத் தவிர்த்து மற்ற அம்சத்திற்கே நாசம்.

பக்தி ப்ரபத்திகளுக்கு முன்பாகிலும் பின்பாகிலும் புத்தி பூர்வகமன்றியில் ஏற்பட்டுள்ள ப்ராமாதிகம் என்னும் பாபம் எல்லாவற்றுமே தீர்ந்துவிடுகின்றது.

புத்தி பூர்வகமான பாபம் பக்தி ப்ரபத்திகளுக்குப் பிற்காலத்தில் உண்டாகில் அதற்கு பிராயச்சித்தம் செய்து கொள்ளவேண்டும்.

ப்ராயச்சித்தம் செய்யுமிடத்தில் செய்த பாபத்தில் பச்சாதாபம் பிறந்து, மீண்டும் அந்த பாபத்தைச் செய்யாமல், பிராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டும் என்று ச்ரத்தையுடன், ப்ராயச்சித்தத்தை அனுஷ்டித்தல் வேண்டும். இப்படி அனுஷ்டிப்பதனால் அனுதாபம் முதலிய ஒவ்வொன்றாலும் கால்கால் பாகம் பாபத்தில் கழிந்து பாபம் அறவே ஒழிகின்றது.

‘ अनुतापादुपरमात् प्रायश्चित्तोन्मुखत्वत : ।
तत्पूरणाच्चापनघाः सर्वे नश्यन्ति पादशः ॥

என்கிற வசனத்தினால் இவ்வர்த்தம் சொல்லப்பட்டது.

இந்த பிராயச்சித்தமானது ப்ரதிபதோக்தம் என்றும், ஸாமான்ய ப்ராயச்சித்தம், என்றும் பிரிவு உள்ளது. இன்ன பாபத்திற்கு இன்ன ப்ராயச்சித்தம் என்பதாக விசேஷித்து ஸ்ம்ருதி முதலியவைகளில் சொல்லியுள்ளது ப்ரதிபதோக்த ப்ராயச்சித்தம். இன்ன பாபம் என்று தனக்கு விசேஷித்துத் தெரியாதவற்றிற்கு “प्रायश्चित्तान्यशेषाणि” என்றுப்போல் பொதுவாகச் சொல்லியுள்ள பகவன்னாமஸ்மரணம் முதலியது ஸாமான்ய ப்ராயச் சித்தம் ப்ரபத்திக்குப் பிற்பட்ட காலத்தில் ஏற்பட்டுள்ள புத்தி பூர்வங்களான பாபங்களுக்குப் ப்ராயச்சித்தமாக மறுபடி ப்ரபத்தியையே செய்யவேண்டும் என்பதாக உள்ள பல ப்ரமாணங்களை ஆசார்யன் ரஹஸ்ய க்ரந்தங்களில் நிரூபித்தருளுகிறார்.

ஆகிலும் அவ்வாசார்யனே ப்ரதிபதோக்த ப்ராயச்சித்தத்திற்கு சக்தியில்லாதபோதும் அந்த ப்ராயச்சித்தம் நீண்டகாலம் செய்யக்கூடியதாகில் அவ்வளவு விளம்பம் பொறாத தசையிலும் ப்ரபத்தியை அனுஷ்டிக்க வேண்டும் என்பதாக நிஷ்கர்ஷம் செய்துள்ளார்.

“प्रायश्चित्तान्तराशक्तः कालक्षेपाक्षमोपि वा ।
पुनः प्रपद्यते नाथमभिन्दन् लोकसङ्ग्रहम् ॥”

என்பதே அவ்வசனம்.

மேலும் ரஹஸ்ய ரத்னாவளீ ஹ்ருதயத்தில் “புத்திபூர்வாபசாரங்கள் புகுந்ததாகிலும் அவைத்துக்குப் ப்ரதிபதோக்த ப்ராயச்சித்த யோக்யதை இல்லாதபோது ப்ரபன்னனுக்கும்....................ப்ரபத்தி தன்னையே மீண்டும் ப்ரயோகிக்குமது ஸ்வாதிகாரானுகுணமான ப்ராயச்சித்தமாகக் கடவது” என்று அருளிச் செய்திருப்பதாலும் ப்ரபன்னர்களிலும் சக்தருக்கு ப்ரதிபதோக்த ப்ராயச்சித்தமே ஆவச்யகம் என்று ஏற்படுகிறது.

இப்படி ஆசார்யன் நிஷ்கர்ஷம் செய்தருளியதற்குமூலம் என்னவெனில்,

“शक्तौ प्रतिपदोक्तं स्यात् अशक्तौ शरणागतिः”

சக்தியிருந்தால் க்ருச்ரம் முதலியதும் சக்தியில்லாவிடில் ப்ரபத்தியும் ப்ராயச்சித்தமாகும் என்கிற வசனமே மூலம்.

மேலும் தான் விரும்பியது, மற்றொன்றால் ஸாத்யமில்லாதபோது ஈச்வரனையே உபாயமாக ப்ரார்த்திப்பதே ப்ரபத்தி என்பதாக உள்ள லக்ஷணவசனத்தை நிரூபித்தால் பாபத்தைப் பரிஹாரம் செய்துகொள்ள



ப்ரதிபதோக்த ப்ராயச்சித்தத்தில் சக்தியுள்ளபோது ப்ரபத்தி கூடாது என்று ஏற்படுகிறது.

பக்தியோக நிஷ்டனுக்கோ வென்னில் பக்தியை ஆரம்பித்த பிறகு ஏற்படும் புத்தி பூர்வக பாபங்களுக்கு பக்தியே ப்ராயச்சித்தம். இவன் ப்ரதிபதோக்தமாயுள்ள க்ருச்ரம் சாந்திராயணம் முதலியதை சக்தியிருந்தாலும் அனுஷ்டிக்கக் கூடாது. ஏனெனில்

अपि चेत् पातकं किञ्चित् योगी कुर्यात् प्रमादतः ।
योगमेव निषेवेत नान्यं यज्ञं समाचरेत्” ॥

என்கிற வசனத்தினால் பக்தியோக நிஷ்டன் ஏதேனும் பாபம் செய்தாலும் ப்ராயச்சித்தமாக யோகத்தையே அனுஷ்டிக்க வேண்டும் அனவதானத்தினால் வேறுப் ப்ராயச்சித்தம் செய்து கொள்ளக்கூடாது என்று ஏற்படுவதால் இப்படி கொள்ளவேண்டும்.

இவ்வசனத்தில் புத்தி பூர்வகமன்றியில் பாபம் செய்தால் யோகத்தையே அனுஷ்டிக்க வேண்டும். என்பதாக அர்த்தம் கொள்ளக் கூடாது. அந்த பாபமானது இவனிடத்தில் ஸம்பந்தப்படுவதில்லை என்று சாஸ்திரமாகையாலே அதற்கு ப்ராயச்சித்தம் விதிக்கக் கூடாதன்றோ? ஆகவே மேலே கூறிய அர்த்தமே கொள்ளப்பட வேண்டும்.

ஆக இவ்வளவினால் ப்ரபன்னன் ப்ரபத்திக்குப் பிறகு புத்திபூர்வகமாக ஏற்படும் பாபங்களுக்கு சக்தியிருந்தால் ப்ரதிபதோக்த ப்ராயச்சித்தத்தை அனுஷ்டிக்க வேண்டும். சக்தியில்லாவிடில் ப்ரபத்தியையே மறுபடி ப்ராயச்சித்தமாக அனுஷ்டிக்க வேண்டும். பக்தனோவெனில் சக்தியிருந்தாலும் ப்ரதிபதோக்த ப்ராயச்சித்தத்தை அனுஷ்டிக்கக்கூடாது. பக்தியையே புத்திபூர்வக பாபத்திற்குப் ப்ராயச்சித்தமாக அனுஷ்டிக்க வேண்டும் என்று ஏற்படுகிறது.

பாபங்களுக்கு மூன்று விதங்களான சக்திகள் உண்டு. அவையாவன (1) புருஷனுக்கு வைதிககர்மங்களை அனுஷ்டிக்க யோக்யதை இல்லாமையை உண்டுபண்ணும் சக்தி. (2) மேன்மேலும் பாபகர்மங்களைச் செய்வதில் ஆசையை உண்டுபண்ணும் சக்தி (3) ப்ரத்யவாயத்தைக் கொடுக்கும் சக்தி இவைகளாகும். ப்ராயச்சித்தம் செய்து கொள்ளுவதினால் அந்த சக்திகள் அவைகளுக்குப் போய்விடுகின்றன.

ஆகவே முமுக்ஷுக்கள் புத்தி பூர்வகமான பாபம் நேர்ந்தால் தங்கள் அதிகாரங்களுக்கு அனுகுணமாயுள்ளதொருப் ப்ராயச்சித்தம் செய்து அந்த பாபத்தைத் தவிர்ப்பதே சாஸ்த்ரானுமதமாகும்.

நமது ஆசார்யர்களின் ஸித்தாந்த க்ரந்தங்கள் சிலவற்றில் ப்ரபன்னனுக்கு ஒரு பொழுதும் க்ருச்ரம் சாந்த்ராயணம் முதலிய ப்ராயச்சித்தம் கூடாது என்றும், பக்தியோகநிஷ்டன் க்ருச்ரம் முதலியதை ப்ராயச்சித்தமாகச் செய்யவேண்டுமென்றும் அபிப்பிராயம் ஏற்படுகிறது. அதை மற்றொரு ப்ரகரணத்தில் நிரூபணம் செய்யலாமென்று எண்ணி இந்த வியாஸத்தை இத்துடன் நிறுத்திக்கொள்ளுகிறேன்.

பத்திராதிபர் :—தர்மசாஸ்திர விசாரம் செய்யும் முமுக்ஷுக்கள் பகவத் சாஸ்திரத்தையும் பரிசீலநம் செய்வது அவச்யம்.

---

## ‘அலர்ந்த அம்புயத்து’ விவரணம்.

உப. வே. A. V. கோபாலாசார்யர்

,, நவநீதம் ஸ்ரீ. ராமதேசிகாசார்யர்.

சித்திரை மாதத்து வேதாந்த தீபிகையில் பெருமாள் கோயில் ஸ்ரீ. உ.ப. வே. வித்வான் பிரவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி, ஸ்ரீதேசிகன் அருளிய “அலர்ந்தவம்புயத்து” என்ற பாசுரத்திற்கு உரை கேட்டிருந்ததையும், வைகாசி மாதத்துத் தீபிகையில் சுண்டப்பாளையம் ஸ்ரீஉ.ப. வே. வித்வான். வே. ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி அப்பாசுரத்திற்கு இட்ட உரையையும் கண்ணுற்றோம். அவ்வுரை நம்முள்ளத்தில் நின்று தித்திக்குமென்பதில் ஐயமில்லை. ஆயினும் நிகரற்றுப்பொலியும் ஸ்ரீதேசிகனுடைய பொன்னினும் போற்றவுரிய ஸ்ரீஸூக்திகளில் பற்பலவுயர்ந்த பொருள்கள் பொதிந்துளவாதலின் இதுவே பொருள், இதுமட்டுமே பொருள் என்று ஒருவரும் கூறவியலாது என நினைந்து, அறிவாளரின் முன்னணியில் நிற்கும் ஸ்ரீ. அப்பய தீக்ஷிதவர்யரே “ உத்தம் விதிஜ்ஞாஸூவக்த்ரு ஸாவாஸூஜி வதெவதெ” என்று கூறினர். நம் தேசிகன் ஸ்ரீஸூக்திகளில் யாதாமொன்றுக்குப் பொருள் காணவேண்டுமாயின் அவ்வாசிரியரின் மற்ற ஸ்ரீஸூக்திகளையும் ஆய்வது இன்றியமையாததாதலின் அங்ஙன் ஆய்ந்து ஆசிரியருளால் அடியோம் கண்ட பொருள்களை விண்ணப்பம் செய்வான் புகுந்தோம். சுவை யுணரும் பெரியோர் பொருந்தும் பொருள்களைக் கொள்க—



சென்னை-600 005.

அமிருதரஞ்சினி பாசுரம்.

“ அலர்ந்த அம்புயத்திருந்து
  தேனருந்தி இன்னகல்
அல்குலாரசைந்தடைந்த
  நடைகொளாதது அனமெனில்
நலம் தவிர்ந்ததாமது என்கொல் ?
  நாவின் வீறிகழ்ந்ததால்
நாவணங்கு நாதர்தந்த
  நாவின் வீறு இழந்ததென் ?
சலந்தவிர்ந்து வாது செய்து
  சாடிமூண்ட மிண்டரைச்
சரிவிலாதெ (லேனே)னக் கனைத்
  துரைத்த வ (வே) திராசர்தம்
வலந்தருங்கைநாயனார்
  வளைக்கிசைந்த கீர்த்தி, ஆர் (பால்)
வாரிபா(வா)லதாம் அது என்றும்
  மாசில் வாழிவாழியே.”

### பதவுரை.

அனம் - அன்னம் (ஹம்ஸரென்னும் சன்னியாசி), அலர்ந்த - மலர்ந்த; அம்புயத்து - தாமரைப்பூவில் (எம்பெருமானது பதகமலத்தில்), இருந்து - வசித்து, (நிஷ்டையை யுடையராய்), தேன் - தேனை (திருவடிகளின் சுவையை), அருந்தி - பருகி (அனுபவித்து), இன்னகல் அல்குலார் - இனிய அகன்ற அல்குலையுடைய பெண்டிரின் (ஸ்த்ரீவ்யஜ்ஞரான பிறரின்), அசைந் தடைந்த நடை - அசைந்த நடையை (ஆசாராதிகளை), கொளாதது - அடையாதது, எனில் - என்று இகழ்ந்தால், (அவ்வன்னம்) (அந்த ஹம்ஸர்) நலம் - பெருமையை, தவிர்ந்ததாமது-இழந்து விட்டதென்பது, என்கொல் - என்ன? (அப்படியாமோ?) (அதுபோல்) நாவின் வீறு - (நம்மிராமானுசனுடைய) நாவின் பெருமையை, இகழ்ந்ததால் - பிறமதத்தினர் இகழ்ந்ததால், நா அ(வ)ணங்குநாதர் - நாவின் தெய்வமாகிய சரசுவதிக்கும் (வணங்கத் தகும்) நாயகனாகிய பரிமுகன், தந்த - அருள்செய்த, நாவின் வீறு - நாவின் பெருமை, என் இகழ்ந்தது - எதை இழந்துவிட்டது? (வந்த குறையாது!) மூண்ட - போர் புரிய எதிர்த்து வந்த, மிண்டரை - வலியரை, சலம் - வாதப்போரில் வரும் சலம், ஜாதி முதலிய குற்றங்களை (நிரக்ஷீரங்

களில் அஸாரமான சலம்போன்ற அஸாரயுக்திகளை), தவிர்ந்து - அறவே யொழித்து, வாது செய்து - வாதம் செய்து, சாடி - வென்று, சரிவிலாது என - (தாம் சாதித்த அர்த்தம்) குலைவற்றது என்று, கனைத்து உரைத்த - கர்ச்சித்துக் கூறிய, எதிராசர்தம் - எம்பெருமானாருடையதும், வலந்தரும் கை - வெற்றியைத் (வலிமையைத்தரும் கையை யுடைய, நாயனார் - எம்பெருமானுடைய, வளைக்கு - சங்குக்கு, இசைந்த - ஒத்ததுமான, கீர்த்தி - புகழ், ஆர்பால் வாரியதாம் - நிறைந்த பாற்கடல் போன்றதாம். அது என்றும் - அப்புகழ் எப்போதும், மாசில் வாழிவாழியே - குற்றமற்று வாழ்க, வாழ்கவே.

## பாடபேதங்கள்.

செருவில் ஆர் - வாதப்போருக்கு இன்னும் வருபவர் யார்? சரிவிலேன் - இன்னும் பலர் வந்து வாதம் புரினும் பின்வாங்கேன். சரிவிலாது, எனக்கு - என்போன்ற பிற்காலத்துச் சேதனர்க்கு, அனைத்துரைத்த - ஸகலஶாஸ்த்ரங்களையும் ஸ்ரீபாஷ்யம் முதலிய நூல்களின் வாயிலாக அருளிச்செய்த, வேதிராசர் - மும்மறையாகிய அழகிய வேதியில் வீற்றிருக்கும் இராமாநுசர். பால்வாரி வாலதாம் - புகழ் பாற்கடலினும் வெண்மை தூய்மை, சிறப்பு, மிகுதி முதலிய தன்மை பெற்றதாம்.

## பொழிப்புரை.

வாளா வீற்றிருக்கும் அன்னத்தை நோக்கி மலர்ந்த தாமரையில் வீற்றிருந்து இனிய தேனைப் பருகியும் பெண்களின் அசைந்த நடையைக் கொள்ளவில்லையே யென்று யாரேனும் இகழ்ந்து பேசினால் அவ்வன்னத்தின் பெருமைக்கு என்ன குறை வரும், (எம்பெருமானது திருவடிக்கமலங்களின் அனுபவரஸத்தில் மண்டிக்கிடப்பவர்களும், ஜ்ஞாநகர்மங்களாகிய இருவகைகளுடன் கூடியவருமாகிய பரமஹம்ஸர்களைக்கண்டு ஸ்த்ரீபுருஷர்களாகிய ஸம்ஸாரிகளின் ஆசாரங்களைக் கொள்ளாதவரென்று ஒருவர் பழித்தால் அதனால் அவர்களுக்கு என்ன இழிவு வரும்?) அவ்வாறு, நம்மாசிரியராகிய எம்பெருமானாருடைய நாவின் பெருமையை அறியாத உதாஸீநர் தோன்றியவாறு இகழ்ந்தால் அதனால் வரும் குறை யாது? கல்விக்குத் தெய்வமாக உலகத்தோரால் புகழப்படும் சரஸ்வதி தேவிக்கு வாக்குப்பிச்சையருளி அவளுடைய அத்தனைச் சிறப்புக்கும் காரணமாய்த் திகழும் ஆதி ஹம்ஸரான வெள்ளைப் பரிமுகர்தாமே மகிழ்ந்து எதிராசனுக்கு அளித்த நாவின் பெருமைக்குப் புல்லிய உதாஸீநரின் பழிப்பால் வரும் இழிவு யாது?



(ஓர் குறையும் வாராதெனக் கூறிப் புகழ் பரவும் வகையைப் பிற்பகுதியால் வெளியிடுகிறார்—)

தம்மிடத்தில் எதிர்த்து வாதப்போருக்கு வரும் உடல் வலியையே முக்கியமாகக்கொண்ட புறமதத்தினரை சலம், சாதி, நிக்ரஹஸ்தானம் என்ற குற்றங்களற்று வாதுசெய்து இன்னும் யாவர் வரினும் பின்வாங்கேனென்று மார்பு தட்டிக் கருச்சித்துக் கூறியவரும், அன்றிக்கே, அக்காலத்து வாதியரை வென்று ஸித்தாந்தங்களை ஸ்தாபித்த மாத்திரத்தால் பர்யாப்தி பெறாத பரம கிருபையாலே என்போன்ற பிற்காலத்துச் சேதனர்களும் வாதப்போரில் பின் வாங்காது வெற்றி பெறும்படி ஸகலஶாஸ்த்ரங்களையும் ஸ்ரீபாஷ்யாதி திவ்யஸூக்திகளின் வாயிலாக அருளிச்செய்தவருமான நம்பிராமாநுசனுடையதும், பலத்தையும் வெற்றியையும் அளிக்குங்கையை யுடையரான எம்பெருமானுடைய சங்கத்தை ஒத்ததுமான புகழ், நிறைந்த பாற்கடல் போன்றதாம்.

அன்றி அப்புகழ் பாற்கடலினும் வெண்மைபூண்டு, தூயதாகி, சிறந்து, மிகுந்துப் பொலிந்திருக்கின்றதாம்.

இங்ஙனம் பொலியும் புகழ் எக்காலத்தும் குற்றமற்று வாழ்க.

## விசேஷார்த்தங்கள்.

இப்பாசுரம் “விரோத பரிஹாரம்” என்னும் இரகசியத்தின் இறுதியில் நம் தேசிகனால் அருளிச்செய்யப்பட்ட தொன்றாகும். இந்த ரஹஸ்யம் நம் ஸித்தாந்தத்தில் புறமதத்தோரால் கிளப்பப்படும் ஸகலவிரோத பங்க்திகளுக்கும் ஸ்ரீபாஷ்யத்தை மூலமாகக்கொண்டு ஸமாதாநரூபமாய் ஸ்ரீபாஷ்யகாரருக்கும் ஸ்ரீபாஷ்யத்திற்கும் ஓர் ஸங்க்ஷேபஸாரஸம்பூர்ணமோ வென்று கூறலாம்படி 108 வாக்யங்களைக்கொண்ட ஒரு நூலாகும். ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமத்தின் முடிவில் “ஸர்வப்ரஹரணாயுத:” என்று எம்பெருமானைச் சகலவிரோதிகளையு மழிக்கும் திருவாழியாழ்வானை ஆயுதமாகக் கொண்டவராகக் கூறியதுபோல் இந்த ரஹஸ்யத்தின் கடைசி வாக்கியத்தில் “ இத்திக்காலே மற்றுமுள்ள பரிஹாரங்கள்......ஸ்ரீபாஷ்யாதிகளிலும் வ்யாப்தராய்......தெளிவுடைய விஜ்ஞரோடு பரிசீலித்துத் தெளியக்கண்டு கொள்ளலாம்” என்று ஸ்ரீபாஷ்யத்தில் ஸர்வவிரோதபங்க்தி பரிஹாரங்களும் பொதிந்து கிடப்பதாகக் கூறிமுடித்தார். இந்த ரஹஸ்யத்தின் தொடக்கத்தில் அமைந்துள்ள பாசுரத்தில் “ இரவன்றிரவியின் காலத் தழைத்த எழில் படையோன் ” என்று திருவாழியாழ்வானை விரோதிகளை

எதிர்க்கக் கருவியாக நினைந்ததுபோல் முடிவிலுள்ள பாசுரத்திலும் "எதிராசர்" என்று ஆயுதங்களின் தலைவரான அவரையே அநுஸந்திப்பதாக த்வனியால் கூறலாம். ஹேதிராஜமயர் யதிராஜரென்றும் த்வநிக்கும்.

**அலர்ந்த......அனமேனே**—இங்கு "அனம்" என்ற சொல் ஜ்ஞாநாநுஷ்டாநங்களாகிய இரு சிறகுகளையுடைய யதிராஜ ராஜஹம்ஸரையும் ஸூசிக்கும். இத்தகைய இரு சிறகுகளற்ற புறமதத்தோர் பக்ஷியாவதற்கே உரியரல்லாது கிடக்க, அன்னமாவது எங்ஙன்? உயரிய பக்ஷிக்குலத்திற் பிறந்து, உயர்ந்த ஜ்ஞானத்தையடைந்து, நீரை நீக்கிப் பாலைப் பருகிச் சுவையுணரும் நாவினைப் பெற்றுப்பொலியும் அன்னத்தைப்போல், ஹம்ஸாவதாரம் செய்த ஆதிகுருவின் ஸந்தாநபரம்பரையில் பிறவியையும், ஜகதாசார்ய ஸ்தாநத்தையும், மற்றொரு பேறு மதியாது ப்ரஹ்மமாகிய அமிருதத்தைப் பற்றியே திவ்யார்த்தத்தை வர்ஷிக்கும் நாவினையும் பெற்றவர் நம்மாசிரியர் எம்பெருமானார் என்று சொல்லிற்றாயிற்று. "அம்புயத்திருந்து தேனருந்தி" என்ற சொல் எம்பெருமானார் 'ஸர்வதேசதசாகாலேஷ்வவ்யாஹதபராக்ரமா'ராய் அந்தச் சுவையிலேயே மண்டித் திரிவதைக் குறிக்கும்.

**"இன்னகலல்குலார்"** என்ற சொல்லால் ஸ்திரீப்ராயரென்று மைத்ரேயீப்ராஹ்மணத்திலும், "வசஸ்த்ரீணாம் ப்ரஜ்ஞா....." என்று உபந்யாஸத்திலும் நிந்திக்கப்பட்டபடி தாழ்ந்த ப்ரஜ்ஞை யுடையவராய் "யாவேதபாஹ்ய குத்ருஷ்டய:" என்றபடி சுடர்மிகு சுருதிக்கு முரண்பட்ட மிகக் கொடிய யுக்திகளையுடைய புறச்சமயத்தோர் குறிக்கப்படுகின்றனர்.

**"அசைந்தடைந்த நடைகோளாதது"** என்ற வாக்கியத்தால் புறமதத்தோரின் நடையை (அநுஷ்டானம், சீலம், வாக்கு முதலியவற்றை) ஒரு பொருளாக மதியாது அதற்கு முற்றிலும் மாறுபட்ட சுருதி காட்டிய நெறியே செல்லுமதான நடையையே (அநுஷ்டானநிகளையே) கைக்கொண்டவர் நம்மெதிராசரென்று ஏற்படுகிறது.

**"நாவணங்கு......இழந்ததேன்"** நா அணங்கு நாதர் - தேவீ ஸரோஜாஸநஸம்பவா ஸா,....ஸர்வசக்தி ஸர்வேசு தவ பக்திஷ்ச:" என்றபடி ஸரஸ்வதிக்கும் ஜ்ஞாநஸிக்ஷையளித்த நாதரான வெள்ளைப்பரிமுகர். நா - வாக்தேவியால், வணங்கு நாதர் - வணங்கப்படும் நாதர் எனவும் கொள்ளலாம். அவர் தாமே யருள்செய்த நாவின் வீறுக்கு என்ன குறை வரும்? இப்பாசுரத்திற்குப் பின்பு "ஸ்தோதாரம் நிஹதாஸேஷத்ருக்ஷம்" என்ற ஒரு ஸ்லோகத்தால் ஸ்வாமி தாமே தம் ஸூக்திவிஷயத்திலும் இவ்வாறு பிறர் புகழ்வையும் இகழ்வையும் பொருள் படுத்தாது பேசியுள்ளார்.



"மச்சந்தாதேவ தே ப்ரஹ்மந் ப்ரவ்ருத்தேயம் ஸரஸ்வதீ" என்று ஸரஸ்வதீ காந்தனான பிரமன் அருள் புரிந்த வால்மீகி முனிவரின் நாவீறுக்கு என்ன குறைவு வரும்? எனவும் பொருள் தொனிக்கும்.

**"சலம் தவிர்ந்து........மிண்டரை"** புறமதத்தோருடைய வாதம் சலம், ஜாதி, நிக்ரஹஸ்தானமாகிய குற்றங்கள் நிரம்பியே கிடக்கும். நம்மாசிரியரின் வாதத்தில் அக்குற்றங்கள் அணுகா.

"சலம் தவிர்ந்து என்ற சொற்களால், பாலையும் நீரையும் கலந்துவைக்க நீரை விலக்கிப் பாலைப் பருகுமன்னம்போல் நம்மெதிராசரும் ஜலம் போன்ற குயுக்திகளைத் தள்ளி பாலைப்போல் ஸாரவத்தங்களாய் ப்ரமாணாநுகூலங்களான யுக்திகளைக் கைக்கொண்டு வாதம் புரிகிறாரென்று ஸூசிதமாயிற்று. "யச்சாஸ்த்ரஸம்மதம் தத்வாதீத ஹம்ஸோ யதா க்ஷீரமிவாம்புமத்யாத்" என்றல்லவோ ஸுதிமத்தர்களின் உக்தி.

"சரிவிலாதேன..........எதிராசர் தம்" "தத்ராபி கோடீரயோர்ஹம்ஸோ ஸமியத்ரா நஹிவாநு" என்றபடி மாலாவலியாகிய முத்து வடத்திற்கு நாயகமணிபோல் மிளிரும் நம்மெதிராசர் வாது புரியுங்கால் ஸரஸ்வதீ ஸிம்ஹாஸநாதிபரான பரிமுகர்தாமே அவர் நெஞ்சில் வீற்றிருந்து அவர் ஸாதித்த ஸித்தாந்தம் குலைவற்றதென்று கனைத்துரைப்பதாகக் கூறுவது பொருந்தும். "வேதிராசர்" எனுஞ் சொல் மும்மறையாகிய வேதிக்கு நாதன் என்ற பொருளைத் தந்து, "வக்த்ரீவேதாந்" என்றபடி பரிமுகரையும், "ஸஜதி யதிவரௌ ஸம்ப்ரவேஸம் த்ரிவேத்யா" என்றபடி எதிராசரையும் கூறும். பரிமுகருடைய கனைப்பு மும்மறையின் உருக்கொள்ளும். "ஸ்யாத் ஸாலக்ரவக்த்ரவிந்யஸ்த ஜிஹ்வாக்ர ஸிம்ஹாஸநாத:" என்றபடி எதிராசருடைய நாவின் முனையாகிய சீரிய சிங்காதனத்திலிருந்து ஸ்ரீவேதராஜரான பரிமுகர் கனைத்த கனைப்பே ஸ்ரீபாஷ்யாதிஸூக்திகளாகப் பரிணமித்ததாகவும் கூறலாம். இப்பொருளுக்கு ஸ்ரீசததூஷணீ 9வது வாதத்தொடக்கத்தில் "ஹயக்ரீவஸ்ய ஹேஷாலஹரிகரக்ஷ்ணோ ஹேஷாரவோதய: | ஜயதி வாதிவேதண்டதுண்டீரகண்டரவ:" என்ற மங்கள ஸ்லோகமும், "வாதிவேதண்டேபோத்ரேகண்டீரவஸ்ய பாஷ்யகாரஸ்ய ஸ்ரீஹயக்ரீவேந ஸஹ ஸம்ப்ரதாய ஸித்தேஸ்ச ஹேஷாகர்ஷண ஆரவணம் விவக்ஷிதமிதி மந்தவ்யம்" என்ற அண்ணங்கராசார்ய ஸூக்தியும் சான்றாகும்.

"சரிவிலேன்" என்றும் பாடமிருக்கக்கூடும். இன்னும் யாவர் வந்து வாதம் புரியினும் பின் வாங்கேன் என்ற பொருளும் பொருந்தலாம்.

" சரிவிலாது எனக்கு அனைத்துரைத்த " எனப் பிரித்து " வாத்தில் பின் வாங்காதபடி நூல்களின் வாயிலாக ஸகலார்த்தங்களையும் என்போன்ற அஜ்ஞர்க்கு உரைத்த " என்றும் பொருள் கொள்ளலாம்.

" வலந்தருங்கை..........கீர்த்தி " " வலம் " எனுஞ்சொல் பலத்தையும் வெற்றியையும் கூறும். தம்மை யடைந்தோர்க்கு வாதுக்குரிய வலிமையை யளித்து வெற்றியையு மளிக்கும் கையையுடைய எம்பெருமானுடைய கையில் பொலியும் வெண்சங்கு போன்றது நம்மிராமானுசன் புகழ்.

அன்றிக்கே, வளையெனும் சொல் சங்கைக் கூறுவதுடன் " தாரகம் யஸ்ய ஸம்ஸ்தாநே ஶங்கே அவஶிஷ்யதே " " ப்ரணவாகிருதிவத்தாணுஜ க்ருணே " என்றபடி ஸம்ஸ்தாநத்தாலும் ஶப்தத்தாலும் சங்கின் ஒப்புமையைப் பெற்ற ப்ரணவத்தையும் காட்டுவதாகக் கொள்ளலாமாதலின், ஸகலார்த்தங்களும் தம்முள் பொதியப் பெற்றிருக்கும் அப்பிரணவத்தின் பொருளைத் தழுவியே எம்பெருமானார் ஸ்ரீஸூக்திகளைத் திருவவதரிப்பித்து அதனால் பெற்ற புகழை வளைக்கிசைந்ததெனப் பணித்ததாக ஸ்வோக்தியாகக் கூறலாம்.

வளையெனும் பதம் கைவளையெனுமணியைக் கூறுவதாகக் கொண்டு ஆசிரியர் சாவன்மையால் பெற்ற புகழ் எம்பெருமான் கைவளை போன்றதாமெனவும் கூறலாம். " கையில் வளைபோ லெம்மாசிரியர் வாக்கு " என்று தாமே யருளிச்செய்தாரிறே.

" கீர்த்தி ஆர்வாரி பாலதாம் " " வாரி " என்னும் பதம் கடலைக் கூறும். "ஆர்பால் வாரியதாம் " எனச்சேர்த்து, புகழ், நிறைந்த பாற்கடல் போன்றதாம் எனக் கொள்ளலாம். " ஸுதாஸாகரமிவ க்ஷீரஸலிலேஷு: " என்றபடி பாற்கடல் போன்ற திருமேனியையுடைய வெள்ளைப் பரிமுகரின் அருளால் நம்மிராமானுசர் பெற்ற புகழும் நிறைந்த பாற்கடல் போன்றதாம்.

இராமானுசன் புகழாகிய பாற்கடலும் எம்பெருமானது பள்ளியாக வுரித்து. " தஸ்ம ஸ்வாதுபயஸ: " என்றபடி மாறன்மறை ஶரண்யனுடைய திருப்பள்ளியாயிற்றாதலின், அம்மறையையே தழுவி யவதரித்த ஸ்ரீபாஷ்யம் முதலிய ஸ்ரீஸூக்தியும், அதனால் ஓங்கி நிற்கும் அவருடைய புகழும் சரண்யனுக்குப் பள்ளியாவதில் தடையேதுமில்லை.

அன்றிக்கே, " வால் " எனுஞ்சொல் வெண்மையையும் தூய்மையையும், சிறப்பையும், மிகுதியையும் கூறுமாதலின் " கீர்த்தி பால்வாரி வாலதாம் " என்றே பாடத்தை இசைந்து, " வாரி " எனும் பதத்தில் ஐந்தாம்



வேற்றுமை யுருபு தொக்கியிருப்பதாய்க் கொண்டு பாற்கடலைக் காட்டிலும் நம் மிராமானுசன் புகழ் வெளுத்துத் தூய்மைபெற்றுச் சிறந்து மிகுத்திருக்கின்றதெனக் கூறலும் பொருந்தலாம்.

" அதென்றும்.........வாழியே " இங்ஙனே வீறுபெற்று மிளிரும் நம்மிராமானுசன் புகழுக்குக் கண்ணெச்சில் படுமோவென வஞ்சிப் பல்லாண்டு பாடுகிறார் " அது என்றும் மாசில் வாழி வாழியே " என்று.

---

# புஸ்தகவிமர்சம்

## 1. ஸ்ரீ சாரீரகாதிகரணரத்நமாலா

மஹாமஹோபாத்யாய கபிஸ்தலம் தேசிகாசார்ய ஸ்வாமி எழுதிய இப்புஸ்தகத்தை நமது தேசத்து வித்வான்களனைவரும் வெகு குதூஹலத்துடன் கொண்டாடுகிறார்கள். ஸ்ரீபாஷ்யத்தின் ஒவ்வொரு அதிகரணத்தையும் ஸங்க்ரஹித்து ஆர்யாவிருத்தத்தில் விஷயங்களையடக்கி அந்த ச்லோகங்களுக்குத் தானே வ்யாக்யானம் செய்து வெகு அழகாயும் தெளிவாயும், ஸம்ஸ்கிருத பாஷையில் ஸ்வல்ப ஞானமுடையவர் கூட எளிதில் வேதாந்தார்த்தத்தை யறிந்துகொள்ளும்படி இது அச்சிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு அதிகரணத்திலும் தொடக்கத்தில் அவதாரிகை வைத்திருப்பது இப்புத்தகத்தில் விசேஷாகாரமென்று சொல்லலாம். இந்த அவதாரிகை வாசிப்பவர்க்கு அந்தந்த அதிகரணத்தை வெவ்வேறு அதிகரணமாய்ப் பிரித்ததற்குக் காரணமும் ஸ்ரீ பாஷ்ய ச்ருதப்ரகாசிகா முதலிய க்ரந்தங்களில் தெளிவுற அறியமுடியாத சில நுட்பமான அபூர்வ விஷயங்களும் போதிக்கும்படி எழுதப்பட்டிருக்கிறது. வேதாந்த சாஸ்திரங்களில் ச்ரமப்படாமல் ஞானம் சம்பாதிக்கவேணும் என்று விரும்புமவர் இப்புத்தகத்தை ஓர் அருமருந்தாக உபயோகித்தல் அவச்யமாகும். இக்காலத்திய மனோபாவத்துக் கேற்றபடி ஸங்க்ரஹருசிகளான ஜனங்களுக்கு வேதாந்தசாஸ்திர ஞானத்தைப் புகட்டுவதற்காகவே இப்புத்தகம் அவதரித்தது. இதை ஒருமுறை முழுவதும் வாசித்தால் விசிஷ்டாத்வைதஸித்தாந்தத்தில் பூர்ணமான ப்ரதிபத்தியும் மனப்பூர்வமான ஆஸ்திக்ய புத்தியும் உண்டாகி அனைவரும் ஐஹிகத்திலும் ஆமுஷ்மிகத்திலும் நன்மையைப் பெறலாம். ஒவ்வொரு அதிகரணத்திற்கும் பூர்வபக்ஷஸித்தாந்தங்களை சுருக்கமாய் எடுத்துரைப்பதில் இப்புத்தகம் இன்றியமையாதது. இதன் விலை ரூபா 3—0—0.

இதை அச்சிட்டு வெளிப்படுத்தியவர் நமது தீபிகையின் உபபத்ராதிபராகிய ஸ்ரீமான் A. ஸ்ரீநிவாஸராகவன் M.A. இப்புத்தகம் ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவனுடைய அகத்திலும் அவசியம் ஸம்ரக்ஷிக்கத் தகுந்தது. வேண்டுமவர் தீபிகை ஆபீஸுக்காவது ப்ரசுரகர்த்தாவுக்காவது எழுதித் தருவித்துக்கொள்ளலாம்.

## 2. ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹஸ்தவம்.

புதுக்கோட்டை வித்வத்ஸபை தானாதிகாரி காளி இரங்காசாரியர் இயற்றியது. இது 261 ச்லோகங்கள் அடங்கியது. இந்த ஸ்வாமியின் கவன சக்தி மிகவும் சிறந்தது என்பது இப்புத்தகத்தை வாசிப்பவர்க்கு நன்கு விளங்கும். தவிர ஆழ்வார் ஆசார்யர்கள் ஸ்ரீ அழகியசிங்கர் விஷயமாக ஆங்காங்கு கூறியிருக்கும் பாசுரங்களை எடுத்து ஒரு தொகுதியாக இப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டு இருக்கிறது. ஒரு தெய்வத்தை வழிபாடு செய்ய விருப்பமுள்ளவர், இம்மாதிரி ஒருங்கே திரட்டிவைத்த ஸ்துதிகளைத் தேடிப் பிடித்து வைத்துக்கொள்ள வேண்டியதவசியம். இப்புத்தகம் ஒவ்வொரு ஆஸ்திகரும் வாங்கி வாசித்து தன்யர்களாக வேணும் என்றே இப்புத்தகத்தை இயற்றியவருடையவும் பதிப்பித்தவருடையவும் முக்கியமான கொள்கை. இதன் விலை அணா 0—4—0. கிடைக்குமிடம்—A. ஸ்ரீனிவாஸராகவன், அம்பாள்புரம், புதுக்கோட்டை.

---

## விருத்தாந்தங்கள்

மைசூர் மேலக்கோட்டையில் வெகுகாலமாய் நடந்து வரும் உபய வேதாந்த ப்ரவர்த்தந ஸபையின் 38 வது வருஷத்திய கான்பரென்ஸ் வெகு விமர்சையுடன் நடந்ததாக அறிக்கை வந்திருக்கிறது. இதில் 76 வித்வான்கள் பரீக்ஷைக்கு வந்ததாயும், 73 வித்வான்கள் பரீக்ஷையில் தேறி ஸம்மானம் பெற்றதாயும் குறிக்கப்பட்டிருப்பதைக் கண்டு மிகவும் களிக்கிறோம். நவீந நாகரீகம் தலையெடுத்து ஆடிக் கொண்டிருக்கும் இக்காலத்திலும் வேத வேதாந்தங்களில் ஜனங்களுக்கு இவ்வளவு குதூஹலம் வந்திருப்பது மெச்சத் தக்கதே. பூர்விக வித்யையையும் பூர்விக ஆசாரத்தையும் புறக்கணித்து பணத்தாசை என்னும் பிசாசுபிடித்து அநாசாரத்தையே தைவமாகக் கொண்டாடிவரும் லௌகிகர்களை விட்டு, இப்படிப்பட்ட ஆஸ்திக மஹாஜனங்களையே இவ்விந்தியாவுக்குச் சொந்தக்காரர் என்று கொண்டாடுவது பொருந்துமல்லவா? இப்படிப்பட்ட ஸபைகள் அங்காங்கு தோன்றி மஹாஜனங்களுக்கு ஆஸ்திக்ய புத்தியைப் புகட்டினால் தேசம் முன்னேற்றமடையும்.


# अमृतांजनम्

# அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முதுமொழி கூறுகிறது.

"अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम्।"
"अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः।"




தலைவலி, ஜலதோஷம்,
சுளுக்கு முதலான சகல
நோய்களையும் தீர்க்கவல்ல
ப்ரஸித்தமான லேபனம்—

## அம்ருதாஞ்சனம் லிமிடெட்

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

Registered No. M. 3778.

சீரும் சிறப்பும் செழித்துப் பெருமையாய் வாழ
அழகிய ஆபரணங்களை அணிவது அவசியம்.
ஆபரணங்களுக்கெல்லாம் அரசனாயிருப்பது
வைர நகையே.

சீமைக் கமலங்களைச் செம்மையாகத் தேடியணிபவரிடம் ஸ்ரீதேவி தானே வந்து தாண்டவமாடுவள். இது விளம்பரக் கட்டுரையென்று வீணில் நினைத்துவிடாதீர்கள். வைரம் முதலிய இரத்தினங்களின் அருமை பெருமைகளைப் பகுத்தறிந்த பண்டைக் காலத்திய பண்டிதோத்தமர்கள் நிர்ணயித்து நிரூபித்துள்ள வசனங்களையும் வாசித்துப் பாருங்கள்.

षड्भिर्वाष्टभिरस्रैर्यत् बहुभिर्वा समन्वितम् ।
अम्बुदेन्द्रधनुर्वारिधरं वज्रं प्रशस्यते ॥
वज्रस्य सर्वदा तादृग्गुणयुक्तस्य धारणम् ।
शोभाकरं श्रेयसां च साधकं दोषघातकम् ॥

"ஆறு பட்டைகள், எட்டு பட்டைகள், அநேகம் பட்டைகள் உள்ள வைரங்கள்



குணத்தில் ஒன்றுக்குமேல் ஒன்று உயர்ந்தவை, நீர் கொண்ட மேகத்தில் தோன்றும் இந்திர தனுஸ்ஸுக்கு ஒப்பான நிறங்களோடுகூடி நிரம்ப நீரோட்டமுடைய வைரக்கல் வெகுப்பிரசஸ்தமானது. அவ்வாறு உயர் குணமுள்ள வைரத்தை எப்பொழுதும் அணிவதால் அழகும் ஒளியும் ஓங்கி வளரும்; சீரும் சிறப்பும் செழிக்கும்; பீடையும் பிணிகளும் பற்றறவே ஒழியும்."

உத்தம குணம் பொருந்திய வைரங்களை அணிபவருக்கு அவ்வித அழகையும் ஐச்வர்யத்தையும் அளித்திடுமென்பதை ஆற அமர யோசித்து அவ்வித வைரங்களை வாங்கியணிய முயலவேண்டும். அவ்வகை வைர நகைகளை நாகரிகமான மோஸ்தரில் நன்றாகச் செய்து நம்பிக்கைக்குப் பாத்திரமாய் பெரும் வியாபாரம் செய்பவர் ஸூராஜ்மல் கம்பெனியாரே.



SURAJMAL'S
The Jewellers
313 ESPLANADE, MADRAS.

Printed by M. Satyanarayana, at the Hindi Prachar Press, T. Nagar, and Published by V. Ananthachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras.

77
4-OCT 1939
MADRAS

# SRI VEDANTA DIPIKA

VOL. 28] AUGUST 1939 [PART 8

# ஸ்ரீ வேதாந்த தீபிகை

பிரதி இங்கிலீஷ்மீ 25௳ வெளிவரும்

விளம்பரக் கட்டணைகள் :

மானேஜிங் எடிடருக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

பிரமாதிஸு :: ஆவணிமீ

பத்ராதிபர்கள் :

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

வி. அனந்தாசாரியர் (*Managing Editor*)

கிருஷ்ணபுரம், கோடம்பாக்கம் Post, Madras.

○

உப-பத்ராதிபர்கள் :

வேதாந்த சிரோமணி T. வேணுகோபாலாசாரியர்

எ. ஸ்ரீநிவாஸராகவன், M.A., [மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை.]

CONDUCTED BY
SRI VAISHNAVA SIDDHANTA PRACHARA SABHA, Ltd.,
Vani Vilas, 4—5, Badriah Garden St., Park Town, Madras.

# L. G. பெருங்காயம்

**हिंगु** அல்லது பெருங்காயம், உணவு பொருள்களுக்கு ருசியைத் தருவது மாத்திரம் அல்ல, பிரதிதினம் சாப்பிடக்கூடியதான ஔஷதமாயும் கருதப்படுகிறது. அடியில் கூறப்படும் குணங்கள் இதன் ஔஷதத் தன்மையை நன்கு விளக்கும். ராஜ நிகண்டு என்னும் ப்ராசீன வைத்திய சாஸ்திரத்தில் அடியில் கண்டபடி பெருங்காயத்தின் குணங்கள் வர்ணிக்கப்படுகின்றன. ஹ்ருதயத்திற்கு பலத்தைத் தரும். காரமாய் இருப்பதால் உஷ்ண வீர்யமுள்ளது. வயிற்றில் உண்டாகும் கிருமிகளை போக்கும். வாயுவை கண்டிக்கும், கபத்தை தொலைக்கும், மலச்சிக்கலை நீக்கும், வயிற்று பொருமலை அகற்றும், சூலவியாதியை கொல்லும், நேத்திர ரோகத்தையும் போக்கும், குல்மம் என்னும் வியாதியை வேரோடு அறுக்கும்.

हृद्यं हिंगु कटूष्णं च कृमिवातकफापहम् ।
निबन्धाध्मानशूलघ्नं चक्षुष्यं गुल्मनाशनम् ॥

இக்குணங்களையெல்லாம் பெற்ற பெருங்காயம் எல். ஜி. குறியுள்ளதைத் தவிற உண்மையில் வேறு எதுவுமன்று. இதை கவனித்து எப்பொழுதும் காயம் வாங்குங்கள்.

## லால்ஜி கோது & கம்பெனி

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

பம்பாய் சென்னை கும்பகோணம்



**அபலா கல்பம்**

மாதவிடாய்க் காலத்தில் ஸ்திரீகளுக்குண்டாகும் "ப்ரதரம்" அல்லது "பெரும்பாடு" என்கிற ரத்தப்பெருக்கு, வெட்டைச் சூட்டினல் மர்ம ஸ்தானத்திலிருந்து வெண்மையான திரவப் பொருள் சிறுகச் சிறுக வெளிப்படுதல், கர்ப்பம் அடிக்கடி சிதறுண்டுபோதல் முதலிய கர்ப்பாசய சம்பந்தமான வியாதிகளை அறவே யொழிப்பதில் ஒப்புயர்வற்ற சக்தி வாய்ந்தது. 1 பாட்டில் விலை ரு. 2 8 0

---

**ஸித்த கல்ப மகரத்வஜா**

நரம்புத்தளர்ச்சி, இளமைப்பருவத்திலுண்டான துர்பழக்கங்களினலேற்படும் அநேக விதமான வியாதிகள், வீர்யக் குறைவு, ஹிருதயத் துடிப்பு, இரத்தக் குறைவு, இரத்த அசுத்தம் முதலானவைகளுக்கு "அபாரசக்தி வாய்ந்த டானிக்" "ஸர்வரோக நிவாரிணி" என்று ஆயிரக்கணக்கான வைத்திய நிபுணர்களால் சென்ற 25 வருடங்களாகப் போற்றப்படுகிறது.

60 மாத்திரை ரு. 10   30 மாத்திரை ரு. 5

தபால் பெட்டி 151 | மதறாஸ் ஆயுர்வேதிக் பார்மஸி, லிமிடெட் | மதறாஸ்


OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4-OCT 1939
MADRAS

விஷயங்கள்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | ஆலயப்ரவேசக் கிளர்ச்சி—ஸம்பாதகர் .... | 189 |
| 2. | சுத்தாந்த ஸித்தாந்தம்—தி. ராமஸ்வாமி ஐயங்கார் .... | 191 |
| 3. | கம்பர் களித்த கருப்பொருள்—ரெ. திருமலை ஐயங்கார் .... | 195 |
| 4. | இந்தளூரில் இந்துமுகி—S. T. ஸ்ரீநிவாஸாசார்யர் .... | 199 |
| 5. | ஆப்ததமர்—திருமலை நல்லான் T. ராமகிருஷ்ணய்யங்கார் சிரோமணி .... .... | 204 |
| 6. | ஸ்ரீ ராமாநுஜ தர்சன ஸபா, தஞ்சாவூர் .... | 205 |
| 7. | சுற்றத்தாரிடம் பக்ஷம்—ஒரு நண்பன் .... | 207 |
| 8. | ஸ்ரீ வைஷ்ணவ ஸமரஸ ஸபை .... | 209 |
| 9. | உபயகலா ஸாமரஸ்யம் — வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ... | 211 |
| 10. | யதிராஜ ஸப்ததி—ஏ. வி. கோபாலாசாரியர் .... | 33—40 |
| 11. | வேதாந்த ஸாரம் .... | 161-168 |






ஆயுள், ஆரோக்கியம், அஷ்ட ஐஸ்வரியம்
இவற்றை முன் கூட்டி அறிவிப்பவர்

**புரொபஸர் முரளி**

(20-ம் நூற்றாண்டின் மேதை, சமூக தீர்க்கதரிசி, வரப்பிரஸாதி)

ரேகை சாஸ்திர ஜோதிஷ நிபுணர்

B-1/192, ராயப்பேட்டை ஹைரோட், (மார்க்கட் அருகில்) சென்னை.

விதியை மதியால் வெல்லலாம். ஆனல் விதி உங்களுக்கு என்ன வைத்திருக்கிறதென்பது தெரிய வேண்டுமல்லவா? தெரிந்து கொள்ளுங்கள்.



**லெப்பர் க்யூர்**
ரிஜிஸ்டர்
குஷ்டரோகம் வெண்குஷ்டம் சாமத்தில் தோனறும் வட்டம் தடிப்பு இன்னும் அநேகவித சாமவியாதிகளைப் போக்கடிக்கும்.
M.O. லக்ஷ்மி & கோ ரிஜிஸ்டர்
வால்டேர், R.S. போஸ்ட்,
பிராஞ்சு 22, பிராட்வே or P.B. 137. மதராஸ்.


**லெப்பர் க்யூர்**
ரிஜிஸ்டர்
குஷ்டரோகம் வெண்குஷ்டம் சாமத்தில் தோனறும் வட்டம் தடிப்பு இன்னும் அநேகவித சாமவியாதிகளைப் போக்கடிக்கும்.
M.O. லக்ஷ்மி & கோ ரிஜிஸ்டர்
வால்டேர், R.S. போஸ்ட்,
பிராஞ்சு 22, பிராட்வே or P.B. 137. மதராஸ்.

ஐந்து நிமிஷ இன்பம்

அதற்காக வருஷக்கணக்காகவும், தலைமுறை தலைமுறையாகவும்

அளவுகடந்த துன்பம் அனுபவிப்பான் ஏன்?

நோய் முற்றுமுன் மேகரோக நிவாரணத்தில் தலைசிறந்த நிபுணர்களான

மெஸர்ஸ் லக்ஷிமி அண்டு கோ.,

அவர்களிடம் கலந்து யோசனை கேளுங்கள்.

கடிதப்போக்குவரவும், ஆலோசனைகளும் அந்தரங்கமாய் நடத்தப்படும்.

விவரங்களுக்கு :— லக்ஷிமி அண்டு கோ.,

சகலவிதமான குஷ்டரோகங்களை நிவாரணம் செய்வதில் நிபுணர்கள்.

தபால் பெட்டி நெ. 137. 144, பிராட்வே, மதராஸ்.

தலைமை ஆபீஸ்: வால்டேர். ஆர். எஸ். போஸ்ட்.

பிராஞ்சுகள்: ராணிஹட், கட்டாக், காந்திநகர், பெஜவாடா.

18 வகை குஷ்டத்துக்கும்

வெண் குஷ்டம் உள்பட

சிகிச்சை

உத்தரவாதம்

25க்கு மேலான வருட கீர்த்தி வாய்ந்த முறை.

லக்ஷ்மி அன் கோ வால்டேயர் R.S போஸ்ட்



ஸ்ரீ:

त्रिभुवनकमनं तमालवर्णं रविकरगौरवरांबरं दधाने ।
वपुरलककुलावृताननाब्जे विजयसखे रतिरस्तु मेऽनवद्या ॥

# ஸ்ரீ வேதாந்த தீபிகை

| ஸம். 28. | பிரமாதி ஞு ஆவணி மீ 12வ 25-ஆகஸ்டு 1939 | ஸஞ். 8 |
|---|---|---|


## ஆலயப்ரவேசக் கிளர்ச்சி


ஸம்பாதகர்


கிராமங்களிலும், நகரங்களிலும், வீதிகளிலும், வீடுகளிலும் இதே பேச்சாயிருக்கிறது. இராஜாங்க அதிகாரம் ஒரு ஆயுதத்துக்கு ஸமானம். ஆயுதத்தை கையில் பிடித்தவன் தனது மனம் போனவிடத்துக்கெல்லாம் ஆயுதத்தை உபயோகப்படுத்தக் கூடாதல்லவா? அதுபோல் அதிகாரத்தையும் நீதிமார்க்கத்தில் செலுத்தவேணுமே யல்லாமல் தனது ப்ரத்யேகமான கொள்கையை நிறைவேற்ற உபயோகப்படுத்துவது தவறு. அரசாங்க நீதிகளில் மாமூல் பழைய வழக்கம் என்பது ஒருபெரிய நீதியாகும். அதை ஹடாத்காரமாய் மாற்ற முயலுவது ஸாஹஸமாகும். முன் சரித்திரங்களில் அறிஞர்களின் கொள்கையைக் கவிழ்க்க யத்நித்ததாலும், மதவிஷயத்தில் அளவுக்கு மிஞ்சி தலையிட்டு சட்டதிட்டங்கள் செய்ததாலும் அநேக அரசாங்கங்கள் படுத்துப்போனதைக் கேட்டிருக்கிறோம். ஆகையால் அரசர்கள் **महाजनो येन गतस्स पन्थाः** என்ற நீதியை பின்பற்றவேண்டியது அவச்யம். ஜாதி பேதத்தையும், மதபேதத்தையும் தூஷிக்கின்றனர் பலர். இந்தியாவில் இந்த பேதங்கள் இப்போது உண்டானவை அல்ல. அநாதிகாலந்தொட்டு இந்த பேதங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஜாதி பேதமும் மதபேதமும் அரசாங்க கார்யங்களில் ஒற்றுமைப்பதற்கு இடையூறாக இல்லை. உட்பிரிவினைகளில் வேற்றுமை வாய்ந்த பற்பல வகுப்பினர் பொது கார்யங்களில் ஒற்றுமை அடைந்து பெரிய பெரிய கார்யங்களை ஸாதித்துள்ளார். ஜனங்களில் ஐகமத்யத்தை உண்டாக்கப் பாடுபடவேண்டிய அரசாங்கத்தார்

விதை போடுகிறார்கள். ஆகையால் இந்த ஆலயப்ரவேசக் கிளர்ச்சி அநாவச்யகம், அக்ரமம், ஸாஹஸம், விபரீதம். தேச க்ஷேமத்தைக் கருதி பற்பல நுட்பமான நீதிகளில் புத்தியை செலுத்தவேண்டியிருக்க, அவற்றில் புத்தி செல்லாமல் அநுபயுக்தமான வழிகளில் புத்தியை செலுத்தி தங்களுடைய உத்ஸாஹ சக்தியை வீணாக விநியோகப்படுத்துவது நல்லதல்ல. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து உணவுக்குப் பொருள் அகப்படாமல் ஜனங்கள் வருந்திக்கொண்டிருக்க இந்த கிளர்ச்சியால் யாருக்கு என்ன உபயோகம்? பஞ்சமர்களுக்கு கிஞ்சித்தேனும் இதனால் ப்ரயோஜநம் உண்டா? மற்றவர்களுக்குத்தான் இதனால் லாபம் உண்டா? இந்தக் கிளர்ச்சி அடங்காமல் மேன்மேலும் வளர்ந்தால் கோயில்கள் எல்லாம் கூடிய சீக்கிரத்தில் பாழடையும் என்பதில் ஸந்தேஹம் இல்லை. ஏனெனில்—பஞ்சமர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஸமமான அதிகாரம் கொடுத்து கோவில்களை நடத்தவேண்டி வந்தால் இக்காலரீதியை அநுஸரித்து மற்றவர்கள் கொஞ்சங் கொஞ்சமாய் விலகி பஞ்சமர்களின் செல்வாக்கு கோயில்களில் அதிகமாகும். அப்போது, இப்போது பஞ்சமர்களுடைய ஆட்சியில் இருந்து வரும் கோயில்களைக் காட்டிலும் நமது கோயில்களுக்கு நல்ல நிலைமை கிடைக்காது அல்லவா? यदन्नः पुरुषो भवति तदन्नास्तस्य देवताः என்ற கணக்கில் எந்தக் கோயில்களில் எந்த ஜாதியினர் பூஜை செய்கின்றனரோ அந்த கோயில்களில் அந்த ஜாதியினருடைய ஆசார நியமாதிகள் நடைபெற வேண்டுவது அவச்யமல்லவா? अन्तश्शवम्, अन्तश्चाण्डालम्, என்ற ஆபஸ்தம்ப ஸூத்திரப்படி ஒரு கிராமத்தில் பஞ்சமர் புகுந்தால் அந்த பஞ்சமன் வசிக்கும்வரை அந்த கிராமத்தில் வேதாத்யயநமும் வைதிக க்ரியைகளும், அந்நபாகமும் செய்யக்கூடாது என்று ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு ரீதியை தேவாலயத்தில் எப்படி அநுமதிப்பார்களோ தெரியவில்லை. ரயில் யாத்திரையிலும், வித்யாலயங்களிலும், ஹோடல்களிலும், ரஸ்தாக்களிலும், ஆபீஸ் உத்யோகங்களிலும் இன்னும் மற்ற பலவித இடங்களிலும் வேற்றுமை ஒருவருடைய பிரயத்நமின்றி கலிகால மகிமையால் தானாகவே ஒழிந்துவிட்டது. இன்னும் சில நாட்களில் கோயில்களிலும் தானாகவே ஒழியப்போகிறது நிச்சயம். அதுவரை பொறுத்து இந்த ஆனந்தத்தை ப்ரத்யக்ஷமாகக் கண்டநுபவிக்கலாமே. ஆனால் அது தாமதமாகும், அதுவரை தங்களுக்கு ஆயுள் நீடித்திருக்காது என்று ஸந்தேஹமிருந்தால் நாங்கள் தெய்வத்தை பிரார்த்திக்கிறோம், கிளர்ச்சியின்றி தானாகவே ஆலயப்ரவேச மஹோத்ஸவம் நடைபெறும்வரை காங்கிரஸ்காரர் அனைவரும் உயிரோடிருக்கவேண்டும் என்று. பஞ்சமர்களைக் கொண்டு க்ருஷி வ்யவஸாயத்தை ஏராளமாய்



விருத்தி செய்யலாம், அளவற்ற நிலங்கள் பயிரிட யோக்யதையில்லாமல் தரிசு போடப்பட்டிருக்கின்றன. வர்த்தக மார்க்கத்தில் எவ்வளவோ சீர்திருத்தங்கள் செய்யவேண்டியதுண்டு. இப்படிப்பட்ட லோகோபகாரமான கார்யங்களில் ஊக்கம் செலுத்தாமல் அநுபயுக்தமான துர்பல ஹிம்ஸையில் வீணாக உத்ஸாஹத்தை விநியோகிப்பது மிகவும் வருந்தத்தக்கது.

---

# சுத்தாந்த ஸித்தாந்தம்

[மைலாப்பூர் தி. ராமஸ்வாமி அய்யங்கார் எழுதியது]

நமது ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தை அந்த:புரஸித்தாந்தமென்றும் சுத்தாந்த ஸித்தாந்தமென்றும் ஸம்ப்ரதாய நிஷ்டர்கள் பேசுவதுண்டு. ஸித்தாந்தத்தின் ப்ரதான ப்ரதிதந்திரமான சரீராத்மபாவமும், அதன் விவரணமான ஆதேயத்வ விதேயத்வ சேஷத்வ ஸம்பந்தங்களும், அவைகளடியாய் ஈச்வரனைப்பற்ற சேதனர்களுக்கு ஸித்திக்கும் பாரதந்திரிய பாரார்த்ய நிலைகளும் அந்த:புர உதாஹரணத்தால் நன்கு தெளிவிக்கப்படுவன என்பதே இப்படிப் பெயர் வழங்குவதற்கு முக்கிய காரணம். பரமசேதனனான ஸ்ரிய:பதியிடத்தில் ஸாமான்ய சேதனர்களான ஜீவாத்மாக்கள் எத்தகைய ஸம்பந்தம் பெற்றோர் என்று அறிவிக்க லோகரீதியில் பதிபத்னி ஸம்பந்தத்தைக் காட்டிலும் வேறு கிடையாது. இந்த உதாஹரணத்தின் பொருத்தத்தையும் பெருமையையும் அறியாத சிலர் போலி வைராக்கிய புத்தியால் இதைக் காமிகளின் பிதற்றல் என்று அவமதிப்பாராயின் "பகவத்காமமென்றறிந்திலர் பாக்யஹானியாலே" என்று அவர் திறத்துப் பச்சாத்தாப படுவதுதான் நாம் செய்யக்கூடியது. பரமபுருஷனிடத்தில் ப்ரேமை மிகுந்த ஆழ்வார்களைப் போன்ற பரம பரிசுத்த ஹ்ருதயமுடையோர் பெண்ணுடையுடுத்துப் பெண்பேச்சுப் பேசி உயர்ந்த ரஸத்தை தாமும் அனுபவித்து நமக்கும் காட்டிப் போந்திருக்கிறார்கள். அவர்களுள் ஒருவரான நம்மாழ்வாருக்கு தத்துவத்தை விளக்கும் ஆசார்ய பரம்பரையில் முதன்மையான ஸ்தானம் நல்கப்பட்டிருக்கிறது நம் ஸம்ப்ரதாயத்தில். இதிலிருந்தே பகவத் சாஸ்திரத்தில் பகவத் காமத்துக்கு ஏற்பட்ட பெருமை ஒருவாறு தெரியலாம். அவ்வாழ்வாருடைய திவ்யப்ரபந்தங்களில் மலிந்து கிடக்கும் ச்ருங்காரம் அவருடைய பக்தியின் பரிணாமமேயன்றி வேறல்ல என்று நம் தேசிகோத்தமன் ஸித்தாந்தித்திருக்கிறார்.

ஸர்வேச்வரனுடைய அந்த:புரத்தில் நமக்கு இடம் கிடைக்குமாவென்று சந்தேஹிக்கவேண்டாம். **दत्ताः प्रजाजनकवत्तव देशिकेन्द्रैः पत्याभिनन्द्य भवता परिणीयमानाः** என்ற ஸ்வாமி தேசிகன் அருளிச்செயலால் ப்ரபதனத்தை ஒரு விவாஹமென்றே எண்ணவேண்டும் என்று தெரிகிறது. ஆசார்யர்கள் நம் ஆத்மஸமர்ப்பணத்தை எம்பெருமான் திருவடியிற் செய்தபோது, அது எம்பெருமான் திருக்கையிற் செய்யப்பட்ட கன்னிகாதானமாக வர்ணிக்கப்பெறுவது அழகு. உபாயானுஷ்டானத்தை ஏதோ ஒரு அசுபம் போல் கருதிவரும் அறிவிலிகளுக்கு அது விவாஹம்போல் பரம மங்களகரமான ஒரு காரியம் என்று காட்டப்பட்டிருப்பது ஒரு ரஸம்.

ஞானனுஷ்டான சீலர்களாய், பரமாத்மாவுக்கும் அந்தராத்மாக்களாய் விளங்கும் ஆசார்யர்களால் எம்பெருமானுக்கு மணம் செய்விக்கப்பட்ட ப்ரபந்நர்களிடத்தில் அவ்வெம்பெருமான் எப்படி ப்ரீதி செய்து பாதுகாப்பன் என்றதை ஸ்ரீமத் ராமாயணத்தில் இரண்டு இடங்களில் பிராட்டி விஷயமான ச்லோகங்களால் அறிகிறோம்.

**प्रिया तु सीता रामस्य दाराः पितृकृता इति**
**गुणाद्रूपगुणाच्चापि प्रीतिर्भूयोऽभ्यवर्धत ॥**

(பாலகாண்டம்)

பெருமாள் பிராட்டியிடத்திற் ப்ரீதி செய்ததற்கு முதற் காரணம் தர்மதாரம் என்பதாயினும் தகப்பனர் செய்துவைத்ததென்பதே முக்கிய காரணம் போலும். இங்கே பிதாவென்பது தசரத சக்ரவர்த்தியையும் குறிக்கும்; ஜனகமஹாராஜனையும் குறிக்கும். அவள் தகப்பன் கன்னிகாதானம் செய்ய, இவர் தகப்பன் பாணிக்ரஹணத்திற்கு அனுமதி கொடுத்தார். சக்ரவர்த்தி அனுமதி கொடுத்ததே விவாஹம் செய்து வைத்ததாய்க்கொண்டு ப்ரீதி செய்தான் என்னவுமாம்; அன்றி கன்னிகாதானம் செய்தவர் பெருமையை யெண்ணி ப்ரீதி செய்தான் என்னவுமாம். பெருமாளுடைய இந்த திருவுள்ளத்தை யறிந்துதான் ஸ்ரீ ஆளவந்தார் "**पितामहं नाथमुनिं विलोक्य प्रसीद**" வென்றுமன்றாடுகிறார். ஸ்ரீகூரத்தாழ்வானும் "**रामानुजाङ्घ्रिशरणोऽस्मि**" என்று தொடங்கி தமக்கு ஸ்ரீபாஷ்யகாரர் திருவடி ஸம்பந்தத்தால் பெருமாளுடைய கடாக்ஷத்திற்கு உரிமையுண்டு என்று அவனுடன் வழக்குப் பேசுகிறார்.

பெரியோர் ஸம்பந்தத்தை யிட்டுத்தோன்றும் ப்ரீதி, பிறகு (பிராட்டியின்) ப்ரியையின் (**गुणात्**) ஆத்மகுணங்களாலும் (**रूपगुणात्**) ஸௌந்தர்யம் முதலிய தேஹத்தைச் சேர்ந்த குணங்களாலும் வ்ருத்தியாகிறது—மேலும்



(பூய:) வளருகிறது. சேர்ந்திருந்த காலத்தில் மிகுந்த ப்ரீதிக்குப் பாத்திரமானவள் பிரிந்த காலத்தில் அவ்வளவுக்கவ்வளவு துன்பத்திற்கே காரணமாயிருப்பளன்றோ? பிராட்டி பிரிந்தபோது பெருமாள் இப்படியே மிகவும் பரிதபித்தாரென்றும், அது நான்கு விதமாயிருந்ததென்றும் தார்க்கிக ச்ரேஷ்டரான திருவடி தக்க காரணங்களுடன் நமக்குக் காட்டுகிறார். "**कारुण्येनानृशंस्येन शोकेन मदनेन च**" பிரிந்தவள் ஸ்திரீ யென்பதால் காருண்யம் தோற்றுகிறதாம். தன்னை ஆச்ரயித்தவள் நஷ்டத்தால் ஆந்ருசம்ஸ்யமாம். பத்னீ நஷ்டத்தால் சோகமாம். ப்ரியை யென்றதால் காமவேதனையாம் ஆக நான்கு விதமாகப் பெருமாள் பரிதபிக்கிறாராம் (**चतुर्भिः परितप्यते**).

சற்று ஊன்றிக் கவனித்தால் ப்ரீதிக்குக் காரணமாக முன் பாலகாண்ட ச்லோகத்தில் சொல்லப்பட்ட (1) **दाराः** (2) **पितृकृता दाराः** (3) **गुणम्** (4) ரூபகுணம் ஆகிய இந்நான்கையே (1) ஸ்த்ரீ (2) ஆச்ரிதா (3) பத்னீ (4) ப்ரியா என்று முறையே துன்பத்தை விளைவிக்கும் காரணங்களாகப் பேசியிருப்பதாகத் தோன்றுகிறது. தக்க பெரியோரால் நம்மிடம் அடைக்கலப் பொருளாய்க் கொடுக்கப்பட்ட ஒரு ஸ்திரீ, தனது உயர்ந்த ஆத்ம குணத்தால் ஸஹதர்மசாரிணியான பத்தினியாயிருந்தவள், தனது ரூப யௌவன அலங்காராதிகளால் நம்மைக் களிப்பித்தவள், நஷ்டமாய்ப் போய்விட்டனளே என்று பெருமாள் திருவுள்ளம் பரிதபித்ததாம்.

தமது திருவடியில் ப்ரபத்தி செய்து பரமைகாந்திகளாயிருப்பவர் விஷயத்தில் தாம் ப்ரீதி செய்யும் விதங்களைக் காட்ட பெருமாள் இறையுமகலகில்லாத பிராட்டியை புதிதாய் அடைந்தவர் போலவும், இழந்தவர் போலவும் நடித்து விளக்கியுள்ள பொருள்கள் இவை. நம்மொவ்வொருவருக்கும் அவனது அந்த:புரத்தில் அவனுக்கே உரிய நாயகியாய் இருந்துவர இடமுண்டு. நமது பாரதந்திரிய புத்தியால் நாம் ஸ்திரீ. ஸதாசார்ய கடாக்ஷத்தினுல் அவனிடம் ஒப்படைக்கப்பட்டபடியால் ஆச்ரிதா. தேவதாந்தர ஸம்பந்தம் போன்ற தோஷங்களில்லாமையால் ஏற்ற பத்னி பாரார்த்யம் என்கிற அழகு பொருந்திய தன்மையால் ப்ரியா. நாம் அவனை அடையாதவகையில் அவன் பரிதபிக்கிறான். அடைந்தபோது அவன் இன்புறுகிறான். அவன் இன்புறுவதால் நாமும் இன்புறுகிறோம். சுத்தாந்த ஸித்தாந்தத்தின் மர்மமான இந்த ரஸத்தைத்தான் ஸ்வாமி தேசிகன் மேலே முதலில் குறிக்கப்பட்ட ச்லோகத்தில் **अप्रार्थितः परिहरन्** அனுபவிக்கிறார். பதிவிரதைகளின் ஸித்தாந்தந்தானே பரமைகாந்திகளின் ஸித்தாந்தம். ஒரே ச்லோகத்தால் இரண்டையும் அழகுபட வர்ணிக்கிறார்.

ஸர்வேச்வரனை யொழியத் தானும் பிறரும் தனக்குத் தஞ்சமன்று; அவனே உபாயம். ஆகையால் தானும் பிறரும் தன்னை ரக்ஷிக்கக்கூடியவர்கள் என்ற எண்ணம் ஒழிகிறது. முக்கரணங்களாலும் பரபுருஷஸ்பர்சலேசத்தை விலக்குபவள் பதிவ்ரதையாவதுபோல், எக்காலத்திலும் தேவதாந்தர ஸம்பந்தத்தை ஒழித்தவர்களே பரமைகாந்திகள். இந்த அந்யோபபோக விரஹத்தால் ஏற்படும் தோஷராஹித்யம் அத்யவச்யம். அந்யோபபோகமென்றது. அந்யர்களை அனுபவித்தல், அந்யர்களால் அனுபவிக்கப்படுதல் இரண்டையும் சொல்லும். பரபுருஷர்கள் தன்னைக் கண்டபோதும் அவர்கள் மனதில் விகாரத்தை விளைவியாத நிலைதான் உயர்ந்த பதிவ்ரதா தர்மத்துக்கடையாளம். அதுபோல் நாம் மறந்தும் புறந்தொழாமலிருப்பது நிற்க, நம்மை தேவதாந்தரங்கள் நினைக்கவும் மாட்டாத நிலையில் நம் உறுதி விளங்க வேண்டும்.

மேற்குறித்தபடி எம்பெருமானைப் பற்ற பாதந்த்ரராயிருத்தல், அதன் மற்றொரு ப்ரகாரமான தேவதாந்தர வ்யாவ்ருத்தி இவ்விரண்டையும் ஜீவாத்மாவின் ஆத்மகுணங்களாயும், பாரார்த்யம் என்னும் சேஷத்வ ஞானத்தை ரூபயௌவனாதிகள் போன்ற தேஹகுணமாயும் சொல்லலாம்போல் தோன்றுகிறது. விடபுருஷனுக்குக் காமினியின் ரூபம்போல் பரம புருஷனுக்குச் சேதனனுடைய பாரார்த்யம் ஆகர்ஷகம். "உனக்கே நாமாட்செய்வோம்" என்று சொல்வாரைத் தேடித்திரிகிறான். "எனக்கே ஆட்செய் எக்காலத்தும்" என்றல்லவோ அவன் அருள்புரிவது?. நாம் பிறருக்கு ஆட்செய்யலாகாது, நமக்கும் அவனுக்கும் (எம்பெருமானுக்கும்) ஆட்செய்யலாகாது. (ஸ்வபரார்த்தபாவம் - தனக்கும் அவனுக்குமென்ற எண்ணம்) அவனுக்கே யாட்செய்யவேண்டும். பதிவ்ரதை பூணும் ஆபரணமும், உடுக்கும் உடையும், செய்துகொள்ளும் சிங்காரங்களும், தன் அலங்காரார்த்தமாகவல்ல. நாயகனுடைய முகோல்லாஸத்திற்காகவே. அவனுடைய முகோல்லாஸமே இவளுடைய மனமுவப்பு. பதிபோகத்துக்கு உருப்பான அளவில் ஸ்வபோகமேயன்றி மற்ற அம்சத்தில் ஸ்வபோக ருசியில்லாத தன்மையில் அசேதனதுல்யந்தான். என்ன உயர்ந்த மனோபாவம் இது? பதிவ்ரதையிடத்திலும் பரமைகாந்தியிடத்திலும் தவிர்த்து வேறு எங்கேயாவது இவ்வரிய மனோநிலையைக் காண இயலுமா? பதிபோகசேஷமான ஸ்வபோகந்தான் சுத்தாந்தத்தின் பரம ரஹஸ்யம், நமது ஸித்தாந்தத்தின் உட்பொருள்.

---



ஸ்ரீ:

# கம்பர் களித்த கருப்பொருள்

[ரே. திருமலை அய்யங்கார், திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்]

இவ்வுலகத்தில் ஐசுவரியங்களை யெல்லா மடைந்து அரசு செய்து கொண்டிருந்தாலும், தேவலோகத்தில் கற்பகச் சோலையின் மிகுந்த நிழலின்கண் இந்திரனாய் வீற்றிருந்தாலும், வீட்டு நூல்களைக் கற்ற அறிஞர்க்கு, செம்பொன்னாலாகிய மேருமலையை யொத்த தோள்களின் வெற்றியமைந்த ஸ்ரீராமபிரானது திவ்ய சரிதங்களுள் கம்பநாட்டாழ்வான் செய்த தமிழ்க் கவிகளில் களிப்பதுபோல வேறொன்றில் மனம் களிப்படையாது.

இவ்வுலகில் அநேக மதங்களிருப்பினும், வ்யாஸ ஸூத்ரத்துக்கே பெரியார் இட்ட உரைகள் பலவிருப்பினும் "ஸ்ரீபாஷ்யம்" ஒன்றே அவ்வேத வியாஸபகவான் விளக்கியருளிய ஸர்வ ஜகத் சரீரக பரமாத்ம தத்வத்தை உணர்த்தும் சாரீரகம் எனும் சாஸ்த்ரார்த்த உண்மையை உள்ளவாறே விரித்துரைக்கும் சீர்த்தியைக் கணிசித்து, அந்த வ்யாஸ தர்சனத்துக்கு அந்யதாஸித்தத்வாதிகள் அணுகாது அஃதையே பேரறிஞர்கள் "ஸ்ரீராமானுஜ ஸித்தாந்தம்" எனப் பெயரிட்டுக் காத்தருளினார்கள். இது மிகவும் பொருத்தமுடையதே. 'இதி ஸர்வம் ஸமஞ்ஸம்' என்றே திருப்பாடியத்தைத் தலைக்கட்டி மறையைத் தலைகாத்தார் இவர் ஒருவரே.

இச்சாரீரக சாஸ்த்ரார்த்த உண்மையே கருப்பொருள். இதனைப் பங்குனி யுத்தரமான பகற்போதில் கண்ணியவரங்கர் முன்னே கவியரங்கேற்றி கவிச்சக்ரவர்த்தியாய்த் திகழ்ந்த கம்பநாட்டாழ்வார் களித்தவாற்றை ஒருவாறு விளக்கப் புகுவதே இக்கட்டுரையின் நோக்கு. முறையினாலணர்ந்த முதியோர் முனியார். குற்றங்களைந்து குணங்கோடலே கற்றறிந்தார் கடன்.

கல்வியிற் பெரியராய கம்பர் ஈடுமெடுப்பு மில்லாத உத்தம நாயகனையே வாழ்த்தல்வேண்டிக் காண்டந்தோறும் அவ்விராமன் விஷயமாகவே கடவுள் வாழ்த்துக் கூறத் துணிந்து, பாலகாண்டத்தில் சுவரூபோபாய புருஷார்த்தங்களைச் சொல்லுகிற முறையாலே "உலகம் யாவையும்"; "சிற்குணத்தர்"; "ஆதியந்தமரி" என்ற முக்கவிகளாற் கடவுள் வாழ்த்துக் கூறி அயோத்யா காண்டத்தின் முதற் கவியால் ஸ்ரீராமபிரான் ஜகத்சரீரகனை ஸர்வேசுவரரென்கிறார்.

கூனியும், சிற்றன்னையாகிய கைகேயியும் கொடுமையான காரியத்தைச் செய்தமையால் தனக்குரிய அரசியலைவிட்டுக் காட்டையுங் கடலையுங் கடந்து சென்று தேவர்களுடைய துன்பத்தைப் போக்கி யருளிய திருவடிகளை யுடைய வேந்தனாகிய இராமபிரானை, மூலப்ரகிருதியினின்றுந் தோன்றி அளவற்றனவாய், ஐம்பெரும் பூதங்களின் காரியமாய்ப் பரவியிரானின்றுள்ள பொருள்களோடும் உடலும் உயிரும் போலவும், உயிரும் உணர்வும் போலவும் உள்ளும் புறத்தும் இருப்பானென்று ஆப்தர்கள் கூறுவர் என்ற பொருள் தரும்

"வானின்றிழிந்து வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பெங்கும்
ஊனுமுயிரு முணர்வும் போலுள்ளும் புறத்துமுளனென்ப
கூனுஞ்சிறிய கோத்தாயுங் கொடுமையிழைப்பக் கோற்றுறந்து
கானுங்கடலுங் கடந்திமையோரிடுக்கண் காத்தகழல் வேந்தை"

என்பதே அவ்வாதி கவி.

இதன் உட்பொருளைச் சற்று விளக்குவாம் :—

வான் என்பது மூலப்பிரகிருதி. இதன் இயல்பு உரைக்க வந்த இடத்து ஆழ்வாரும் "சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த முடிவில் பெரும்பாழ்" என்று அருளினார். இதனை இக்கவியே "மூன்றுருவெனக்குண மும்மையாமுதல்" என்று கிட்கிந்தா காண்டத் தொடக்கத்துங் கூறுவர். 'மூன்றுருவெனக் குணமும்மையாம்' என்ற சொற்கள் 'முதல்' என்பதற்கு அடைமொழியாய் நின்றன. முதல் - மூலப்பிரகிருதி. உலகிற்குக் காரணமாயிருத்தலான் இதற்கு 'முதல்' என்று பெயர் வழங்கலாயிற்று. 'அநாதியாயும் உற்பத்தி நாசமில்லாததாயும், ஸத்வரஜஸ்தமஸ் ஸென்கிற மூன்று குணங்களுடன் கூடினதாயுமிருக்கிற பிரகிருதியானது ஜகத்திற்குக் காரணமாயிருக்கிறது' என்பது ப்ரமாண வாக்கியப் பொருள். எனவே மூலப்பிரகிருதி முக்குணமுடையதென்பதும், ஜகத்திற்குக் காரண மென்பதும் பெறப்பட்டன. பிரகிருதிக்கு முக்குணங்கள் இயற்கை. 'மூன்றுரு' என்பதிலுள்ள 'உரு' என்ற சொல் ஈண்டு நிறத்தைக் குறித்து நின்றது. இம்முக்குணங்கட்கு முறையே வெண்மை, செம்மை, கருமை நிறங்களென நூல்கள் கூறும். இம்மூன்று குணங்களும் ப்ரக்ருத்யவஸ்தையில் வெளிப்படையாகத் தோற்றாது, விகாராவஸ்தையில் வெளிப்படையாகத் தோற்றும். முக்குணங்களும் ஸமமாகவிருக்கின்ற நிலைமை ப்ரக்ருத்யவஸ்தை. மஹாந் முதலிய தத்வங்கள் தோன்றும் ஸ்தூலாவஸ்தை விகாராவஸ்தை. குணந் தோன்றாதிருக்கும் நிலை ஸத்ருச விகாரம். குணந்தோன்றுகின்ற நிலைமை



விஸத்ருச விகாரம். மேலும் 'முதல் தோன்றாரு எவையும் அம்முதலைச் சொல்லுதற்கு ஏன்றுரு அமைந்தவும்' என்று அவ்விடத்து மேலே கூறுதலால் மூலப்ரக்ருதியினின்றும் தோன்றிய தத்வங்களனைத்தும், அந்த மூலப்ரகிருதியே ஜகத்திற்குக் காரணமென்று சொல்லுதற்கு வடிவமைந்த பிரபஞ்சமும் என்க. "சுவையொளியூறோசை நாற்றமென்றைந்தின், வகை தெரிவான் கட்டே யுலகு" என்ற குறட்பாவால் அவ்வைந்தின் வகையாகிய ப்ரக்ருதி தத்வம் இருபத்துநான்கைக் காட்டிலும் உலகு வேறில்லை என்பது பெறலாம். இவற்றால் மூலப்பிரகிருதி தன் கார்யவர்க்கங்களைச் சூழ்ந்து முடிவற்றதா யிருக்குமென்பது வெளிப்படை.

உலகிற் காணப்படும் பௌதிகப் பொருள்களெல்லாம் மூலப்பிரகிருதியினின்றுந் தோன்றினவாதலால் "வானின்றிழிந்த மாபூதத்தின் வைப்பு" என்றும் இப்பிரபஞ்சகாரணமாகிய அதுவும் அளவற்றதா யிருக்கின்றமையின் "வரம்பிகந்தவைப்பு" என்றும் கூறினார். இனி, "வானின்றிழிந்த மாபூதத்தின் வைப்பு" என்பதற்கு ஆகாயத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்கினியும் அக்கினியிலிருந்து அப்பும், அப்பிலிருந்து பூமியுமெனப் பூதங்கள் தோன்றும் முறையை மறை உரைக்கின்றபடி ஆகாசத்தினின்றுந் தோன்றிய பூதங்களாலாக்கப்பெற்ற இடமெங்கும் எனப்பொருள் கொள்ளவுமமையும். இதனை "வானுநிலனும் முதலீறில் வரம்பில் பூதம்" என நகர் நீங்கு படலம் 120ஆஞ் செய்யுளிலுங் கூறுவர். ஐம்பெரும் பூதங்களுள் முதலதாகிய நிலத்தையும் ஈற்றதாகிய வானையுங் கூற அவற்றுள் உற்பத்திக் கிரமம்பற்றி வான் முதலில் வைக்கப்பட்டது. ஆற்றொழுக்குப்போல நித்தியமாதலால் 'ஈறில் பூதம்' என்றார் என்க.

இனி, இறைவன் அனைத்திடத்திலும் வியாபித்துள்ளான் என்பதை உவமைமுகத்தான் விளக்கத் தொடங்குகிறார். ஊனுமுயிரும் உணர்வும் போல - சரீரமும் அதனுள்ளிருக்கும் உயிரும், அவ்வுயிரிலிருக்கும் அறிவும் போல். உள்ளும் புறத்தும் உளன் என்ப - உள்ளினும் வெளியினும் இருக்கின்றவனாகிய ஸ்ரீமந்நாராயணன் என்று ஆன்றோர் உரைப்பர். இங்கு உள் வியாப்திக்கு ஊனுள் உயிர் என்பதையும் வெளி வ்யாப்திக்கு உயிரில் உணர்வு என்பதையும் உவமை கூறியவாறு காண்க. இறைவன் பிரத்யக்ஷத்தாலும் அநுமானத்தாலும் அறியப்படாதவனாய்ச் சாஸ்த்திரத்தாலேயே அறியத்தக்கவனாதலால் அவனுடைய வியாப்தியை அறிதற்குச் சாஸ்திரத்தாலறியத்தக்கவற்றையே உவமையாகக் கூறினார் என்க. இஃது "உவமப் பொருளினுற்றதுணரும் தெளிமருங்குளவே திறத்தியலான" என்ற இலக்

கணமதுக்கு விரோதமின்மை தெளிக. இதனால் உலகிற்கும் இறைவனுக்கும் சரீரசரீரிபாவ ஸம்பந்த முண்டென்று காட்டினார் என்பது போதரும்.

'ஊனும் உயிரும்போல்' என்பதில் தாரகத்வ (தாங்குதல்), நியாமகத்வ (ஏவுதல்), சேஷித்வ (தலைமையாயிருத்தல்) என்ற மூன்றும் பொதுத் தன்மைகளாம். ஆத்மாவானவன் சரீரத்திற்குத் தாரகனும் நியாமகனும், சேஷியாயுமிருப்பதுபோல இறைவன் அந்தராத்மாவாயிருந்து எல்லாவற்றுக்கும் தாரகனும், நியாமகனும் சேஷியாயு மிருக்கிறானென்பது பெறப்படும். உயிரும் உணர்வும் போல் என்பதில் விட்டுப்பிரியாமை பொதுத் தன்மையாம். அறிவானது ஆத்மாவை விட்டுப் பிரியாமலிருப்பது போல இறைவன் சேதனாசேதனங்களை விட்டுப் பிரியாதிருக்கிறானென்பதாம். மேலும் இங்கு ஊன் என்றதனால் ப்ரக்ருதிதத்வமும், உயிர் என்றதனால் ஜீவதத்வமும், உள்ளும் புறத்தும் உளன் என்பதனால் ஈசுவரதத்வமும் பெறப்பட்டதோடு, இறைவன் சேதனா சேதனங்களைச் சரீரமாகக் கொண்டுள்ளா னென்பதும் விளங்குகின்றன.

உணர்வென்பது - தர்மபூதஜ்ஞாநம். "ஊனுமுயிரு முணர்வும்போ லுள்ளும் புறத்தும் உளனென்ப" என்பது,

"திடவிசும் பெரிவளிநீர் நிலமிவைமிசைப்
படர்பொருண் முழுவது மாயவை யவைதொறு
முடன்மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்"

என்னும் ஆழ்வார் பாசுரத்தை அடியொற்றி என்க.

கம்பர் எம்பெருமானுடைய குணங்களை அநுபவிக்கப்புக்கு விராதன் வாயிலாகக் கூறுவது மிகவும் சிலாக்கியமானது.

"வேதங்களறைகின்ற வுலகெங்கும் விரிந்தனவுன்
பாதங்களிவை யென்னிற் படிவங்களெப்படியோ
வோதங்கொள் கடலன்றி யொன்றினோ டொன்றொவ்வாப்
பூதங்கடோறு முறைந்தாலவையுன்னைப் பொறுக்குமோ"

எல்லா வேதங்களாலும் துதிக்கப்படுகின்ற இந்த உனது திருவடிகளே உலக முழுவதும் பரந்தனவென்றால் மற்றைத் திருவவயவங்கள் எத்தன்மையனவோ? குளிர்ச்சியைக் கொண்ட கடலில் மாத்திரமே யல்லாமல் ஒன்றோடொன்று தம்மில் ஒத்திராத மற்றைப் பூதங்களிலும் நீ வாசஞ் செய்வதால் அப்பூதங்கள் உன்னைத் தாங்க வல்லனவோ? என்பது இதன் பொருள்.



'வேதங்களறைகின்ற' என்றதனால் ஸகல வேத ப்ரதிபாத்யனாதலும், 'உலகெங்கும் விரிந்தன' என்றதனால் 'ஸர்வவியாபியாதலும்' 'பாதங்களிவை' என்றதனால் பத்துடையடியவர்க் கெளியவனாதலும், 'படிவங்களெப்படியோ' என்றதனால் மன மொழி மெய்கட்கு எட்டாதவனாதலும், 'ஓதங்கொள் கடலன்றி' என்றதனால் வியூக நிலையும், 'பூதங்கடோறு முறைந்தால்' என்றதனால் ஸர்வாந்தர்யாமியாதலும், 'அவை யுன்னைப் பொறுக்குமோ' என்றதனால் அனைத்துக்கும் ஆதாரமாதலும், ஸர்வ சக்தித்வமும் கூறப்பட்டுள்ளன தெளிக.

பகவான் இந்தப் பிரகிருதியிற் சம்பந்தப்படாமலே இதனுட் புகுந்து நடக்க வல்லவன் என்றும், நமது ஊனக்கண்ணுக்கு வந்து தோன்றாமலே ஞானக் கண்ணுக்கு வந்து தோன்றவல்லவன் என்றும், பரமபதத்தினின்றும் நீங்காமலிருந்தே இங்கே திருவவதரிக்க வல்லவன் என்றும், கர்மவசமாகப் பிறக்கும் பிறவிபோலாகாமே அருள்பற்றி யுளதாகின்ற இச்சாமாத்திரத்தால் அவதரிக்க வல்லவன் என்றும் பொருள் பொதிந்துள்ள

"தாய்தன்னை யறியாத கன்றில்லை தன்கன்றை
யாயுமறியு முலகின்றா யாகினைய
நீயறிதி யெப்பொருளு மவையுன்னை நிலையறியா
மாயையிது வென்கொலோ வாராதே வரவல்லாய்"

என்ற கம்பர் பாட்டால் அவதார ரஹஸ்ய உண்மை நன்கு வெளியிடப் பெறுகின்றது காண்க. இஃதும் கம்பர் களித்த கருப்பொருளாம்.

கம்பருக்கு விசிஷ்டாத்வைதமே உடன்பாடென்பது ஒருவாறு விளக்கப்பெற்றது. விரிவஞ்சி இத்துடன் நிறுத்துவாம். பின்னர் அவ்வப்போது இதனையே நன்கு தெளிவிப்பாம்.

---

# இந்தளூரில் இந்துமுகி

(S. T. ஸ்ரீநிவாஸாச்சாரியார் M. A. L. T., கல்யாணபுரம்)

வஸந்தகாலம். திருவிந்தளூரின் விசாலமான வீதிகளில் இனிய மல்லிகைகளின் மணத்தைக் கொண்டுவரும் தென்றல் வீசுகிறது—பகலில், சூரியனின் வெப்பம் ஓங்க முடியாமல் வானம் கறுத்துக் குளிர்ந்த மழைத்

துளிகள் விழுந்தன. சித்திரை மாதத்தில் இனிய சுக்லபக்ஷத்து இரவில் நிலவு பகல்போல் ப்ரகாசிக்கிறது—காவிரி நதியின் கரையிலுள்ள சோலையொன்றில் "முல்லை முறுவலிக்கும்" என்றபடி முல்லைமலர்கள் பூத்து முத்துச் சொரிந்தாற்போலிருக்கும் ஓர் கொடி வீட்டில் நிகரற்ற அழகு வாய்ந்த ஓர் யுவதி ஒரு ஸௌந்தராங்கனது கையைப் பற்றி நிற்கிறாள். அவளுடைய முகத்தில் இன்பமும் நாணமும் ப்ரகாசித்தது. அவளுடைய மருண்ட பார்வை அந்த, மன்மதன் போன்ற வாலிபனை வசப்படுத்தியது நீலமேகம் போல் இருண்ட இனிய வடிவையுடைய அவன் அப்பெண்மணியை வாரி அணைத்து "பேதாய் நின்னைப் பிரிவனோ? பிரியில் தரிப்பனோ?" என்றான். புன்னகை தவழும் முகத்துடன் அப்பெண்மணி "என்னை மறக்கவேண்டாம்" என்று குயில் கூவுவது போன்ற குரலா சொன்னாள். அவள் கண்களில் நீர் தளும்பியது.

* * *

திருவிந்தளூரில் பங்குனியுத்திரத் திருநாள் நடைபெறுகிறது—விழாவின் ஓசை நான்கு திக்குகளிலும் அதிருகிறது—திருவீதிகளில் உலாவ வந்து திருவந்திக் காப்பிற்காக நின்றருளும் இந்தளூரப்பனைக் காண்பதற்கு ஆண் பெண் அனைவரும் விரைகின்றனர். ஓர் தென்னைமரத்தின் அடிப்புறம் நின்று ஓர் ஸௌந்தரி தேவாதிதேவனைக் கைகுவித்து நோக்கி நின்றாள்—அவளது வடிவழகைக் கண்ட யாவரும் "இவ்வளவு வடிவழகார்ந்து தெய்வத் தன்மை பொருந்திய இவள் "திருமகள்கொல்?" "நப்பின்னைகொல்? நிலமாமகள் கொல்"? என்று பக்தியும் ஆச்சரியமும் கொண்டு நின்றனர் கறுத்து சுருண்டு பளபளப்புற்ற அவளது கூந்தல் அழகிய பின்னலாக அவள் பின்புறம் தொங்கியது. வீசும் தென்றலில் அவளது முன்னுச்சிமயிர்கள் அசைந்து ஆடின. அந்தப் பெண்மணி திடீரென்று காணாது கண்டவள் போல் திடுக்கிட்டாள். தன் நெற்றியில் விழுந்து அசைந்து கண்களைச் சிறிதே மறைத்த அளகங்களைத் தன் கையால் உயர நீக்கிக்கொண்டு இந்தளூர் நாதனை உற்று நோக்கினாள். அவள் கண்களில் ஆனந்தம் ததும்பியது. தான் நெடுநாளாய்த் தேடியலையும் தன் ப்ராண காந்தன் தன் முன்னால் நிற்பதைக் கண்டாள். அவள் மனதில் சொல்லொணாத சோகம் ஏற்பட்டது. "ஆகா அன்று என்னை யணைந்து சென்ற அன்பன் இவனேயன்றோ—காதல் மயக்கத்தால் இதனை நான் அறிந்து கொள்ளவில்லையே—குலபர்வதம் போன்ற விசாலமான அவனது திருமார்வில் ஒரு திவ்ய ஸௌந்தரி மின்னி மறையக் கண்டேனே. அவனது வலிய புஜங்களால்



158717

என்னை யணைக்கும்பொழுது அவன் ஆழியும் சங்கையும் காட்டியருளினானே! அவனது தோள்களில் தலை சாய்க்குங்கால் என்னை யறியாமலேயே மயக்கும் ஓர் குளிர்ந்த மாலையின் ஸம்பந்தம் பெற்றேனே. அய்யகோ கெட்டேன். அது வனமாலை யென்று அறியாமற் போனேனே!! அந்தத் திருத்தோள்களில் மாதராரணியும் வளைகளின் சின்னமிருந்தது கண்டு "நீ தூர்த்தன்—என்னை யொழியப் பிற மாதர்பால் காதல் கொண்டவன்" என்று அவனுடன் ஊடினேனே--இருக்கட்டும். இன்று அவனைக் கண்டு இன்புறுவேனோ" என்று அவள் புலம்பி அம்மரத்தடியில் மூர்ச்சையானாள்.

* * *

கண் விழித்துப் பார்த்த பெண்மணி தான் வெகுநேரம் மூர்ச்சித்துக் கிடந்துவிட்டதை உணர்ந்தாள். பேரவாவுடன் கோயிலை நோக்கி நடந்தாள். எங்கும் நிச்சப்தமாயிருந்தது. கோபுர வாயிலையும் மண்டபங்களையுங் கடந்து மஹாமண்டப வாயிலை யடைந்தாள். இவளது வேகத்தைக் கண்டு கூட்டிலுறங்கிய கிளிகளும் கண்விழித்துக் கீச்சிட்டன. அந்தப் பக்கம் எப்படியும் தன் காந்தன் வருவான் என்று அங்கே படிக்கட்டுகளில் நின்றாள். சிலம்புகளின் கிண்கிணி சப்தமும் இனிய முழவின் ஓசையும் ஒலித்தது. "சரி, ப்ராணகாந்தன் மிதமான பரிஜனங்கள் புடைசூழ வருகிறான். என்னைக் கண்டதும் அவர்களை விடை கொடுத்தனுப்பி என்னுடனே உட்புகுவான்" என்று யோசித்தாள். குழல் ஒலியும் முழவின் ஒலியும் நின்றது. கட்டழகியின் மார்பு படபட வென்றடித்தது. "அவன் வந்து அணுகுங்கால் அவனை எதிர்பாராதவள் போல் மிடுக்காய் இருக்க வேண்டும். அவன் தன்னை வலிய வந்து கைப்பற்றி இனிய சொற்கள் சொல்லி உள்ளே அழைத்துப் போகச் செய்கிறேன்" என்று நினைத்து அவனைப் பாராது முகந் திருப்பி உட்கார்ந்தாள். தன் அரையில் தரித்திருந்த அழகிய சேலையின் மடிப்புக்களை அவனறியாது திருத்தி நன்கமைத்தாள். தன் "செப்பன்னமென்முலை"யின் ஸன்னிவேசங்கள் தெரியுமாறு தன் உத்தரீயத்தை மார்பில் இறுக இழுத்துக்கொண்டாள். செங்காந்தள் போல் சிவந்த மெல்லிய விரல்களால் தன் இருண்ட கூந்தலைக் கோதியமைத்துக் கொண்டாள்.

யாரோ நெருங்குகிறார். மருவினியமைந்தனே! பெண்மணி தன் புருவங்களை நெறித்துப் பராமுகமாய் வீற்றிருக்கிறாள். "என்ன! உடம்பெல்லாம் முன்னமேயே குளிரச் செய்து இன்பந்தருமே அவன் வரவு—அந்தக் குளிர்ச்சி யென்னுடலிற் காணோமே" என்று நடுங்கிய வண்ணம் திரும்பி

ளுள்! ஒருவரையுங் காணோம். "ஹா கெட்டேன்" என்று சுவற்றில் சாய்ந்தாள். எழுந்தாள், கண்களைத் துடைத்துக்கொண்டாள். ஓடினாள், சுற்றிச் சுற்றி வந்தாள். உட்கார்ந்தாள். உடற் குலுங்க விம்மி விம்மி யழுதாள். "இந்தளூரெந்தாய்! அகன்றனையே" என்றலறினாள். நள்ளிரவில் ஊரெல்லாம் துஞ்சுகிறது. இவ்விந்துமுகி மாத்திரம் இடருற்றாள் "உத்தமனே! பொன்னார் சார்ங்கமுடைய உன்னை இன்னாரென் றறியாமற் போனேனே! உன்னுடன் ஊடி, ஊழ்வினைக்காளானேனே!" என்று தன் தலையிற் கைவைத்துப் புலம்பினாள். "ஹிமஹதநளினீவ நஷ்டசோபா," என்றபடியும், "ஸஹசரரஹிதேவ சக்ரவாகீ என்றபடியும் அவள் மனம்" புழுங்கியது. மாமலராள் கேள்வா! மருவினியமைந்தா! உம்மைத் தொழுதோம் நல்ல பயன் பெற்றோம்!

"நும்மைத் தொழுதோம் நுந்தம்பணி செய்திருக்கின்ற நும்மடியோம்
இம்மைக் கின்பம் பெற்றோம் எந்தாய் இந்தளூரீரே—
எம்மைக் கடிதாக் கருமமருளி ஆவா வென்றிரங்கி
நம்மை யொருக்கால் காட்டி நடந்தால் நாங்கள் உய்யோமே."

என் இந்தளூர் வாழும் கற்பகமே! உன்னை யடைந்து நான் நலிவுற்றால் பிறர் ஏசாரோ? உன்னைப் பிறர் ஏச அடியாள் தரிப்பேனோ? வண்டுகள் சப்திக்கின்ற கண்ணியையுடைய முடியினால் அழகாக விளங்குபவரே! நீர் ஸர்வக்ஞராயிற்றே! நல்லாறறிவீர், தீயாரறிவீர், எல்லாமறிவீர். எனக்கு அருள் செய்யவேண்டிய ஈதொன்றே அறியீர். ஆசை தவறாது உம்மைத் துதிக்கின்றவரும் உம்முடைய தாஸர்கள் என்று உலகமறிய மதித்துத் திரிகிற எங்களுக்கு உம்முடைய திவ்ய மங்கள விக்ரஹத்தைக் காட்டியருளாது நின்றீர். அப்படி உம்முடைய அடியார்க்கென்றே இருப்பதாக அடியேன் ப்ரமித்திருந்த திருமேனியைக் கட்டிக்கொண்டு நீர் வாழ்ந்து போம்.

"ஆசை வழுவாதேத்து மெமக்கிங் கழுக்காய்த் தடியோர்க்குத்
தேசமறிய வுமக்கேயா ளாய்த்திரிகின்றோமுக்குக்
காசின் ஒளியில் திகழும் வண்ணம் காட்டீ ரெம்பெருமான்!
வாசி வல்லீர்! இந்தளூரீர்! வாழ்ந்தே போம் நீரே!"

என்று அப்பெண்மணி புலம்பினாள். பொழுது புலரக் கொஞ்சம் நேரமிருக்கலாம். வாடிய தாமரைக் கொடி போன்ற அந்த மங்கையை மாதவன் தன் மடிமீதிருத்தினான். தன் நீருண்ட மேகம் போன்ற திருமேனி வடிவழகைக் காட்டியருளினான். அவளுக்குத் தன்னை (ஸர்வஸ்வதானம்) அறவே



கொடுத்தருளினான். அவனது திருவுருவமும் நீர்மையையுங் கண்ட பெண்மணி ஊழிதோறூழி தான் பெற்ற வெந்துயரெல்லாம் ஒருங்கு நீங்கி குளிரப் பெற்றாள். மூவுலகையும் வசப்படுத்தும் ஓர் புன்னகையால் 'மருவினிய மைந்தனை' மலர்ந்து நோக்கினாள்.

ஒப்புயர்வில்லாத இந்த ஸ்த்ரீ புமான்களின் சேர்க்கையானது இம் மூவுலகும் மகிழ்வதற்கு ஏதுவாயிற்று. இந்தப் பெண்மணி தான் பரகால நாயகி. அந்த ஸௌந்தராங்கன் மாயவரத்திற் கருகாமையில் திருவிந்தளூரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் மருவினிய மைந்தன். இவ்வாழ்வார் இந்த எம்பிரானை அநுபவிப்பது அத்தியாச்சர்யகரமானது! இது ஸ்ரீசடகோபனின் "மின்னிடை மடவார்" என்ற தசகம்போல் ஸர்வேச்வரனுடன் ஊடும் முறையை உடையது. பெண் தன்மையை யடைந்து ஊடலாகப் பேசும் சிறு விளம்பமும் ஸஹிக்க முடியாதவராய் உத்கடமான காதலால் தானான தன்மையிலேயே ஊடுகிற விலக்ஷணமான இன்பங் கொண்டது.

சிலர் "ஆழ்வார் இத்திருப்பதி எம்பெருமான்மீது வெறுப்புற்று "வாழ்ந்துபோம்" என்று பாடியதாக நம் "செவி சுடுமாறு" சொல்லுவர். அதை அநுவதிப்பதுகூட தவறுதான். பெண் தன்மை விஞ்சிக் காதல் வெள்ளங் கரைகடந்து தலைமகனுடன் ஊடும் தலைவியின் நிலையை ஆழ்வார் அடைந்து பேசுகிறபடி. உதடு துடிக்கக் கோவித்துக் கண்ணீர் மல்கும் குழந்தைகளின் இனிய வடிவழகைக் கண்டு பரவசமாகும் தாய் போல இந்த ஊடலில் ஸர்வேச்வரனது திருவுள்ளம் குளிர்ந்தே களிக்கும் "வேம்பின் புழு வேம்பன்றி யுண்ணாது" என்றும் "கறவாமடநாகு தன் கன்றுள்ளினாற் போல்" என்றும் ஸர்வேச்வரனை எந்த நிலையிலும் காதலிக்கும் கலியனுக்கா கண்ணனிடம் சலிப்பு? இந்த எம்பெருமானுடன் ஊடி அதனால் கலந்த ஓர் எல்லையில்லா இன்ப வெள்ளம் மேலிடவே ஆழ்வார் பரம ப்ரீதராய் அவனையே திருவெள்ளியங்குடி முதல் அநேக திருப்பதிகளில் பேசிப் பேசி மகிழ்கிறார்.

# ஆப்ததமர்

[திருமலை நல்லான் T. ராமகிருஷ்ணய்யங்கார் சிரோமணி, ஆழ்வார்திருநகரி]

ஆழ்வார்கள் அருளிச் செயல் ஆரணஸாரம். ஆரணத்திற் காணவொண்ணு நாரணனை இதன்மூலம் நாம் நேரே காணலாம். "**प्रत्यक् प्रत्यक्षयेद्यः प्रतिनियतरमासन्निधानं निधानं**" என்று நம் ஆசிரியர் அருளிச் செய்கின்றனர். ஏனைய ஆசிரியர்கள் பெரியார் வாய்க்கேட்டும், நுண்ணுணர்வின் துணைகொண்டும், கற்பநாசக்தியால் கவியுலகைக் களிப்பிப்பர். ஆழ்வார்களோ வெனின், "தஸ்யைஷ ஆத்மா" என்கிறபடியே பரமாத்மா, தன் ஸ்வரூப ரூபகுணவிபவங்களைக் காட்டக் கண்டவர்களாகையாலே உள்ளதை உள்ளபடியே நாமும் காணலாம்படி திவ்ய ப்ரபந்தங்களை இட்டுவைத்தனர். ஆகையால் தான் வேதங்களையோ.ரிஷிகளையோ விட ஆழ்வார்களை ஆப்ததமர் ஆக நம்பூருவர்கள் போற்றி வருகிறார்கள். நேரே கண்டமைக்கு உதாரணமாக நம்மாழ்வாருடைய ஒரு பாசுரத்தை நோக்குவோம்:—

"வண்ணம் சிவந்துளவானுடமரும் குளிர்விழிய
தன்மென் கமலத்தடம்போல் பொலிந்தன தாமிவையோ
கண்ணன் திருமால்திருமுகந் தன்னொடும் காதல்செய்தேற்
கெண்ணப் புகுந்து அடியேனொடு இக்காலமிருக்கின்றவே"

ச்ருதியிலே "**तस्य यथा कप्यासं पुण्डरीकमेवमक्षिणी**" என்று தாமரைக் கண்ணனைக்கேட்டார் வாய்க் கேட்டிருந்தபடியே, கண்கள் இருக்கும்படியைக் கண்டு "தாமிவையோ" சுருதியிற் கூறப்பட்ட கண்கள் இவைகள்தானோ? என்று ப்ரத்யக்ஷமாகப் பேசுகிறார். அல்லாதபோது தாமிவையோ வென்று நேரே காட்டி நிர்தேசிப்பது கூடாதேபோம். இப்படி நேரே கண்டறிந்து பேசும்பெரியார் நமக்கு ஆப்ததமர் என்பதற்கு ஐயம் என்ன?

ஆழ்வார்களையே ஆப்ததமராய் நம்பூர்வர் ஒப்புக்கொண்டமைக்கு ஒரு சான்று தருகிறோம். தத்வத்ரயம் என்ற ரஹஸ்ய க்ரந்தத்தில் ஜீவஸ்வரூப நிர்ணயத்துக்காக "சென்று சென்று பரம்பரமாய்" என்கிற ஆழ்வார் ஸ்ரீஸூக்தி ப்ரமாணமாக எடுக்கப்பட்டுள்ளது. இவ்விடத்து வியாக்யானத்தில் ஸ்ரீமணவாள மாமுனிகள் சுருதிஸ்மிருதி ப்ரமாணங்களை எடுக்காமல் ஆழ்வார் ஸ்ரீஸூக்தியை எடுத்ததற்கு கருத்துக் கூறுவதைக் காணுங்கள்.

"சுருதிஸ்மிருத்யாதிகளிலே ஒன்றைச் சொல்லாயிருக்க, இப்போது ஆழ்வார் அருளிச் செய்த சந்தையை எடுத்தது தத்வப்ரதிபாதகங்களான ச்ருத்யாதிகளிலுங் காட்டில் தத்வதர்சிகளில் ப்ரதானரான ஆழ்வாருடைய வசநமே தத்வநிர்ணயத்துக்கு முக்ய ப்ரமாணம் என்று தோற்றுகைக்காக."



இதனால் நம் ஆசார்யர்கள் ஆழ்வாரை எவ்வளவு ஆப்ததமராகக் கொண்டனர் என்பது உங்களுக்கு விளங்கவில்லையா? வேதாந்த தேசிகனும் வேதார்த்த நிர்ணயத்துக்கு மற்றச் சுவடிகளைவிட ஆழ்வார் திருவாய்மொழியே தலைசிறந்து விளங்குவதாகத் திருவுள்ளம் பற்றுகிறார். "**यत्तत्कृत्यं श्रुतीनां मुनिगणविहितैस्सेतिहासैः पुराणैः, तत्रासौ सत्त्वसीम्नः शठमथनमुनेस्संहिता सार्वभौमी**" என்று ரத்நாவளியில் உள்ள பொன்னுரை காண்க. இங்கு ஸத்வஸீமா என்று சடகோபமுநியை வேதாந்த தேசிகன் விசேஷித்திருக்கு மழகு வியக்கத்தக்கதா யிருக்கிறது. சடகோபர் சடவசமான உலகத்தைவிட விலக்ஷணம். மேலும், ஸத்வகுணத்திற்கு எல்லை நிலம். இத்தகைய பேராசிரியரிடமிருந்து அவதரித்த நூல் பரம ஸாத்விகமா யிருக்க வேண்டுமன்றோ? இருக்கவே, ஸாத்விக உபப்ருஹ்மணங் (வேதவிரிவு)களுக்குள் பரம ஸாத்விகமானவருளிச் செயல் சிறக்கும் என்று குறிப்பு. இவ்வளவு ஆழ்பொருளைக் காட்டும் கவிகளை வாய்க்கப்பெற்ற நம் ஸம்பிரதாய பாக்யமே பாக்கியம்.

---

# ஸ்ரீ ராமாநுஜ தர்சன ஸபா, தஞ்சாவூர்

[வீ. ஸீதாராம ராமாநுஜதாஸன், காரியதரிசி]

சென்ற ஜூலை மீ 2வ ஞாயிற்றுக்கிழமை ஷை ஸபையின் ஆதரவின் கீழ் நடந்துவரும் உபன்யாஸ கோஷ்டியின் நூறாவது கூட்டம் நடந்தேறிய ஸமயத்தில் ஷை தினத்தை ஒரு உத்ஸவமாகக் கொண்டாடப்பட்டது காலையில் ஸ்ரீபெருந்தேவி ஸமேத ஸ்ரீவரதராஜபெருமாளுக்கு திருமஞ்சனம் முதலியவை செய்வித்து விசேஷ அலங்காரத்துடன் ஸிம்மாஸனத்தில் வீற்றிருந்து பக்த கோடிகளுக்கு ஸேவை ஸாதித்து தன் ஸன்னிதியில் நடந்துவந்த உபன்யாஸங்களை தானும் கேட்டு ஸந்தோஷத்துடனிருந்து விசேஷ வரபிரசாதங்களை தந்தருள ஸித்தமாக விருப்பதுபோல் விளங்கப் பெற்றார். ஸாயங்காலம் நூறாவது உபன்யாஸம் ஆரம்பிக்கப்படுமுன் ஸபையின் சார்பாக எல்லாரையும் வரவேற்று ஸபையின் அறிக்கை வாசித்து வழங்கப்பட்டது. பின்பு ஸ்ரீரங்கம் ஸ்ரீ. உ. வே. ரங்கஸ்வாமி அய்யங்கார் உபன்யஸித்தார். ஷை மஹோத்ஸவத்தை அத்யக்ஷராக விருந்து நடத்திவைத்த நாச்சியார் கோவில் நடாதூர் கிருஷ்ணமாசார் ஸ்வாமியும் லக்ஷ்மி நரஸிம்மவைபவம் என்னும் விஷயத்தை உபன்யஸித்

தார். பிறகு ஷை ஸபையின் அத்யக்ஷர்களுக்கு உபசார பத்திரங்கள் வாசித்து கொடுக்கப்பட்டு ஸன்னிதியில் விசேஷ உத்ஸாகத்துடன் சாத்துமுறை முதலியது நடந்து உத்ஸவம் பூர்த்தி பெற்றது.

## நூறுவது உபந்யாஸ விழாவில் சபையோர்களின் அறிக்கை

ஸ்ரீ இராமாநுஜாசார்ய திவ்ய ஆக்ஞையால் அபிவிருத்தியாகிவரும் ஸத் ஸம்பிரதாயத்தைச் சேர்ந்த ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய ஸமூகத்திற்குத் தஞ்சை மாமணிக்கோயில் எம்பெருமான் கடாக்ஷத்தால் ஏற்பட்ட கிருபா விசேஷ பரீவாஹமாக அடியோங்களுடைய ஸபை சென்ற 1933ஹு ஏப்ரல் மாதத்தில் ஏற்படுத்தப்பட்டு நடந்துவரும் விஷயம் நாடும் நகரும் நன்கறியும். ஆரம்பித்த காலத்தில் ஷை சபை, தஞ்சை மாமணிக்கோயிலென்னும் திவ்ய தேசத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமந் நாராயணனை கருடாரூடராகவும், கண்ணனாகவும் ஸேவித்து, அதன் மூலமாக சகல ஜனங்களும் உஜ்ஜீவிக்கவேண்டுமென்றதான ஏகதேச உத்தேசத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், நாளடைவில் ஸ்ரீ பகவத் ராமாநுஜ முனியின் பரிபூர்ண கடாக்ஷத்தால் ஸபையோர்களும் இதர ஆஸ்திகர்களும் விசேஷ க்ஞானம் பெறவேண்டுமென்பதாக ஸ்ரீ வரதராஜப் பெருமாளுடைய நியமனம் இருந்தபடியால் ஷை நியமனத்தை சிரஸாவகித்து ஷை பெருமாள் கோவிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பெருந்தேவித் தாயார் ஸந்நிதியில் பிரதி வாரமும் ஞாயிற்றுக்கிழமைதினம் சபையோர்கள் கூடி சகல சாஸ்த்ர அர்த்தங்களையும் பண்டிதர்களைக் கொண்டு உபந்யாச மூலமாய்க் கேழ்கப்பெற்று கிருதார்த்தர்களாக ஆனோம். இவ்விதம் தாது ஹு மாசி ஸ்ரீ 17உ முதல் நடந்தேறிய உபந்யாசங்களுடைய விவரங்கள் இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நூறுவது. உபந்யாசம் நடக்கிற இந்த சமயத்தில் உபந்யாசங்களின் மூலமாக உபய வேதாந்தங்களிலும் உள்ள சர்வ அர்த்தங்களையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எங்களுக்குக் காட்டியருளிய ஆச்சார்ய உத்தமர்களுக்கு அடியோங்களுடைய நன்றியைக் காட்டிக்கொள்ளுகிறோம். அத்தகைய ஆசார்யவர்யர்களை மேன்மேலும் தந்தருளி அடியோங்களுடைய மனோரதத்தைப் பூர்த்தி செய்து உபகரித்த எம்பெருமான் கடாக்ஷத்தை இந்த தினத்தில் ஒரு மஹோத்சவமாகக் கொண்டாட முன் வந்துள்ளோம். இந்த உத்சவத்தில் தலைமை வகித்து நடத்தியருளவும் சம்மதித்து இந்த சபையையும் அனுக்ரஹிக்க எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ உபய வேதாந்தாசார்ய ஸிம்ஹாசனாதிபதி வித்வான் அபிநவ சரஸ்வதீ வாங்முக ரத்னகோச வித்வத் சிரோமணி பண்டித ராஜ குருவர்ய நடாதூர் ஸ்வாமி கிருஷ்ணமாசார்ய ஸ்வாமிக்கு அடியோங்களுடைய பிரணாம பூர்வமான நமஸ்காரங்களை ஸாதரம் சமர்ப்பிக்கிறோம்.



சென்ற நூறு வாரங்களில் உபந்யஸிக்கப்பட்ட விஷயங்களும் உபந்யஸித்த பண்டிதர்களும் அடங்கிய விவரங்களைக் கடாக்ஷித்தால் இப்படிப்பட்ட உபந்யாசங்களை சிரவணம் செய்தவர்கள் மகா பாக்கியசாலிகள் என்று தோன்றும். அப்படிப்பட்ட பாக்யத்தைப் பெற்ற ஸபையோர்களிடத்தில் இப்பேருபகாரம் செய்து உபகரித்த ஸ்வாமிகளுக்கு எங்களுடைய கிருதக்ஞதையை அஞ்சலி ரூபமாகக் கொடுத்ததைத் தவிர யாங்கள் ஒன்றும் பிரத்யுபகாரம் செய்தறியோம். அப்படியிருந்தும் தயாளுக்களான வித்வான்கள் இந்த சபைக்கு அழைத்த பிரகாரம் விஜயஞ் செய்து விஷயப் பிரதானத்தை உத்சாகத்துடன் வந்து செய்துகொண்டிருப்பது அடியோங்களுடைய பாக்ய விசேஷமேயாகும்.

காலக்ஷேப கோஷ்டிகளில் சேர்ந்து ஆசார்யர்களிடம் கிரந்த காலக்ஷேபம் செய்து க்ஞானத்தைச் சம்பாதிப்பதற்குச் சக்தியற்ற எங்கள் பேரில் கிருபை செய்து எங்களுக்கு இன்னும் மேலும் மேலும் ஞானோபதேசம் செய்துகொண்டு வரும்படி பல ஆசார்யர்களை நியமிக்க வேண்டும்படி நாங்கள் எப்பொழுதும் ஸ்ரீமந் நாராயணனைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறோம்.

மேலும், இந்த சபை இதை நிருவியவர்கள் விரும்பிய அளவுக்கு விசேஷ அபிவிருத்தியடையவில்லை. இந்நகரத்திலும் சுற்றுப்பட்ட சமீப கிராமங்களிலும் உள்ள வைஷ்ணவ மஹா ஸமூகத்திலுள்ள அனைவரும் இந்த ஸபையில் அங்கத்தினர்களாகக் கலந்துகொண்டு பரிபூரண பலனையடைந்தால் தான் எங்களுடைய மனோரதம் பூர்த்தியடையும். சமூக அபிவிருத்தி பல துறைகளிலும் அடையவேண்டியிருப்பினும் முதன் முதலாக நம் விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தின் தத்துவங்கள் இப்பூமண்டலம் முழுவதும் பரவவேண்டியதாகையால் இது விஷயமாய் நம் ஸபை செய்துவரும் கைங்கரியத்தின் பலன் அளவிடமுடியாது. இந்தத் துறையில் எல்லா வைஷ்ணவர்களுக்கும் சிரத்தை ஏற்பட்டு ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீ மேன்மேலும் ஓங்கும்படியாக அனுக்ரஹிக்கவேணுமாய் ஸ்ரிய:பதியான ஸ்ரீமந் நாராயணனை அனவரதம் பிரார்த்திக்கிறோம்.

---

## சுற்றத்தாரிடம் பக்ஷம்

[ஒரு நண்பன்]

பிறருடைய ஸஹாயமின்றி நன்மை பெறுவது அஸாத்யம். அரசனும் ஸைந்யமும் சேராவிடில் ராஜ்யமில்லை. ஆசிரியனும் சிஷ்யனும் சேராவிடில் வித்யை இல்லை. தாயும் தகப்பனும் சேராவிடில் ஸந்ததி இல்லை. இப்படி எல்லாப் பொருளிலும் காணலாம். தர்மம் தலை எடுக்க வேணு

மானால் சக்தன் அசக்தனிடம் பக்ஷம் வைக்கவேணும். தநிகன் தரித்திரனிடம் பக்ஷம் வைக்கவேணும். ஆகையால் நாம் நமது சுற்றத்தாரிடம் சேராவிட்டால் ஒரு கார்யமும் நடைபெறாது. ப்ரபுக்கள் தங்களது பக்ஷத்தை சுற்றத்தாரிடம் பரவச் செய்யும்போது சிற்சில நுட்பமான ந்யாயங்களை கவனிக்கவேணும். தனது உறவினர் வருந்தும்போது அவரை அசட்டை செய்து மற்ற பொதுஜனத்தினிடம் நட்பு காட்டுவது உசிதமல்ல. இக்காலத்தில் ஒவ்வொரு கூட்டத்தவரும் தங்கள் தங்கள் கூட்டத்தைச் சேர்ந்தவருக்கு ஒத்தாசை செய்ய முன்வந்திருப்பது போற்றத்தக்கதே. ஆனால் இச்செயலை சிலர் குற்றமாகக் கூறுகின்றனர். மநு முதலிய ஸ்மிருதிகளை பார்த்தால் இதன் உண்மை வெளிவரும். தன்னுடைய சுற்றத்தார் பசித்துக் கிடக்கும்போது பிறரை போஷிக்கக் கூடாது என்பது மநுவின் அபிப்ராயம். இதில் மற்றொரு தத்துவமும் உண்டு. ஒவ்வொரு ப்ரபுவும் தன்னிடம் உபகாரம் பெறக்கூடியவருடைய முன் பின் யோக்யதைகளையும் மற்ற நடத்தைகளையும் நன்கு அறிந்து பிறகு உபகாரம் செய்யவேணும். முன் பின் தெரியாதவருக்கு நன்மை செய்து அதனால் பலர் துன்பமுறுகின்றதைப் பார்க்கிறோம். பெண் கொடுத்துப் பெண் வாங்குவது முதலான ஸம்பந்தங்களும் அப்படியே. இக்காலத்தில் எண்ணிறந்த நபர்கள் தர்ம கார்யத்தை மேற்கொண்டு புறப்படுகின்றனர். அவரில் சிலர் கபடமற்று தர்மம் செய்பவரா யிருக்கக்கூடும். ஆனால் அப்படிப்பட்டவருடைய சங்கியை ஸ்வல்பமேயாகும். அப்படிப்பட்ட உண்மையான மனிதரையும் போலி மனிதரையும் கண்டுபிடிக்க முடியாமல் சிலர் ஏமாந்து போகின்றனர். ஆகையால் அனைவரும் பூர்வீகமாய் தங்களுக்குத் தெரிந்த யோக்யதையுள்ள மனிதருக்கு உபகாரம் செய்வது யுக்தமாகும். சிலர் குடும்ப ஸம்ரக்ஷணத்தில் சக்தியற்றவரா யிருந்து தநிகராதரவைத் தேடும்போது குடும்ப வ்ருத்திக்கென்று சொல்லுவதற்கு அஞ்சி வெளியான பொதுக் கார்யங்களை மேற்கொண்டு செல்லுகின்றனர்.

தநிகர்களும் குடும்ப ஸம்ரக்ஷணத்துக்காக தானம் கொடுப்பதில் பயனில்லை என்றும், கோயில் குளம் முதலியவற்றுக்கு கொடுத்தலே தர்மம் என்றும் எண்ணி ஜனங்களுடைய உண்மையான வறுமையை மறைத்துச் சொல்லுவதற்கு காரணமாகின்றனர். இது தவறு. கெட்ட கார்யங்களை செய்தாவது குடும்பத்தை ரக்ஷிக்க மநு விதிக்கிறார். கோயில் குளம் முதலியவையோ வெனில் கிருஹஸ்தர்கள் தனது குடும்ப ஸம்ரக்ஷணத்துக்கும் விவாஹாதி வைதிக கார்யத்துக்கும் போக, மிஞ்சின த்ரவியங்களை சிலவிட இடமாகும். ஆகையால் தநிகரனைவரும் இப்படிப்பட்ட தர்ம ஸூக்ஷ்மங்களை அறிந்து தர்மம் செய்ய முன்வரவேணும் என்று வேண்டுகிறோம்.

---



# ஸ்ரீ வைஷ்ணவ ஸமரஸ ஸபை

நமது ஸ்ரீவைஷ்ணவ சமூகத்திற் சேர்ந்தவர்களில் உள்ள சிலவகுப்பாருள் அதிலும் முக்கியமாக தென்கலையாருக்கும் வடகலையாருக்கும் கொஞ்ச நாளாக வீண் மனஸ்தாபங்கள் ஏற்பட்டு ஒருவரையொருவர் அனுவசியமாக தூஷிப்பதும் கோர்ட்டு நடவடிக்கைகள் நடத்துவதும் ஆக ஏற்பட்டிருப்பதும் அதனால் நமது சமூகத்திற்கே அனேகவிதமான கெடுதல்கள் உண்டாய் வருவதும் எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இப்போது ஏற்பட்டிருக்கும் மனஸ்தாபங்களை நீக்கவும் இனிமேல் அப்படி ஒன்றும் ஏற்படாமல் இருக்கும்படி செய்யவும் உடனே வேண்டிய முயற்சிகள் செய்ய வேணுமென்று பல பிரமுகர்கள் சில நாளாக பிரயத்தனப்பட்டு வருகிறார்கள் என்பதும் எல்லாருக்கும் தெரியும். இது விஷயத்தில் வேண்டிய முயற்சிகள் செய்து ஸ்ரீ வைஷ்ணவ சமூகத்திற் சேர்ந்த எல்லோருக்குள்ளும் உள்ள மனஸ்தாபங்களை நீக்கி சிநேக பாவமும் ஐக்யமும் உண்டாக்குவதற்காக வேண்டிய காரியங்களை அப்போதைக்கப்போது செய்வதற்காக உடனே ஒரு ஸபையை ஏற்படுத்தவேண்டியது அவசியமென்று பல பிரமுகர்கள் அபிப்பிராயப்படுவதால் அந்தப்படி ஒரு ஸபையை ஸ்தாபிப்பதற்கு ஸ்ரீவைஷ்ணவர்கள் கூட்டம் ஒன்று 1939௵ ஜூலை௴ 30௳ மாலை 3 மணிக்கு திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமியின் தவன உத்ஸவ பங்களாவில் ஸ்ரீ வைஷ்ணவ ஸ்வாமிகள் கூட்டம் ஒன்று கூடிற்று. ஏராளமான ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டிக்குச் சேர்ந்த வைதீகர்களும் லௌகீகர்களுமாக வக்கீல்கள், உத்தியோகஸ்தர்கள், பென்ஷனர்கள், பத்திராதிபதிகள், வித்வான்கள், பண்டிதர்கள் உள்பட பலர் வந்திருந்தார்கள். குறித்த நேரத்தில் ஸபை ஆரம்பிக்கப்பட்டது. மதராஸ் அட்வகேட்டும் ஸ்ரீ பார்த்தஸாரதி கோவில் தர்மகர்த்தாவுமான ஸ்ரீ உ. வே. சி. நரசிம்மாச்சாரியார் ஸ்வாமி இந்த ஸபைக்கு ஸ்ரீ உ.வே.வி. வி. ஸ்ரீனிவாசய்யங்கார் ஸ்வாமி அக்கிராசனம் வகிக்க வேண்டும் என்று பிரேரேபித்ததின்பேரில் எல்லோராலும் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு ஷை ஸ்வாமியும் அக்கிராசன பதவியை வகித்தார்.

பிறகு அக்கிராசனர் இந்த ஸபையை கூட்டுவதற்கு முக்கிய காரணஸ்தராயிருந்த ஸ்ரீ உ. வே. சி. வி. வெங்கடரமணய்யங்கார் ஸ்வாமியை இந்த ஸபையைப் பற்றி சில வார்த்தைகள் சொல்லும்படிக்கும் அவசியமான தீர்மானங்களை பிரேரேபிக்கும்படியாகவும் சொன்னதின்பேரில் அவரும் இந்த விஷயத்தில் தனக்கு 45 வருஷமாக சிநேகிதரான அக்கிராசன ஸ்வாமியுடனும் புதியதாக சிநேகம் ஏற்பட்ட ஸ்ரீ உ. வே. அண்ணங்கராச்சாரியார் ஸ்வாமியுடனும் காகிதங்கள் எழுதி அவர்களிடமிருந்து வந்த ஸ்ரீமுகங்களின் விவரங்களையும் அதின்பேரில் ஸ்ரீமான் உ. வே. சி. நரசிம்மாச்சாரியார் ஸ்வாமி முதலானவர்களுக்கு காகிதங்கள் எழுதி அவர்களிடமிருந்து வந்த காகிதங்களின் விவரங்களையும் எடுத்துச்சொல்லி இந்த ஸபை ஏற்பட்டால் அதற்கு எல்லோரும் உதவி செய்யவேண்டும் என்றும் அப்படி செய்தால் சீக்கிரம் அனுகூலம் கிடைக்குமென்று தனக்கு நிச்சயம் உண்டாயிருக்கிறதென்றும் சொல்லி முடித்தார்.

அதின்பேரில் அடியில்கண்ட தீர்மானங்களை ஸ்ரீ உ. வே. ஸி. வி. வெங்கடரமணய்யங்கார் ஸ்வாமி பிரேரேபித்தார் :—

1. ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் இருக்கும் விரோதங்களை ஒழிக்கவும் இனிமேல் ஸமரஸம் விர்த்தியாவதற்கும் ஒரு ஸபை ஏற்படுத்தவேண்டியது அவசியம் என்றும் அப்படியே அதை இன்றையதினம் ஸ்தாபித்து அதற்கு ஸ்ரீவைஷ்ணவ ஸமரஸ ஸபை என்று பெயரிட வேண்டியதென்றும் ஷை.யாரால் பிரேரேபிக்கப்பட்டு எல்லோராலும் ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டது.

2. ஷை ஸபையின் முக்கிய கருத்து ஸ்ரீவைஷ்ணவர்களில் உள்ள மனஸ்தாபங்களை போக்கடிப்பதும் பரஸ்பர ஐக்கியமத்யத்தையும் ஸ்நேக பாவத்தையும் உண்டாக்க வேண்டியதும் என்பதுதான்.

3. இந்த ஸபைக்கு அங்கத்தினர்களாக ஸ்ரீ இராமானுஜ ஸித்தாந்தத்தைச் சேர்ந்த எல்லா ஸ்ரீ வைஷ்ணவர்களும் யாதொரு வித்தியாசமும் இல்லாமல் சேரலாம் என்றும் அதற்காக அவர்கள் சந்தா ஒன்றும் கொடுக்க வேண்டியதில்லையென்றும் மேலேகண்ட ஸபையின் நோக்கத்தை அங்கீகரிப்பதாயும் அதற்கு விரோதம் ஒன்றும் செய்வதில்லையென்றும் அந்த நோக்கத்தை அதிகமாகக் கைகூடும்படி தாங்கள் கூடியமட்டும் உழைப்பதாகவும் அங்கத்தினராகும் ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ள வேணுமென்றும் ஷையார் பிரேரேபித்து எல்லோராலும் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

4. இந்த ஸபைக்கு அடியிற்கண்ட ஸ்வாமிகள் கொண்ட ஒரு நிர்வாக ஸபை நியமிக்கப்படுகிறதென்றும் இன்னும் வேண்டியவர்களையும் நிர்வாக ஸபை மெம்பர்களாக சேர்த்துக்கொள்ள ஷையார்களுக்கு அதிகாரம் உண்டென்றும் ஷையாரால் பிரேரேபிக்கப்பட்டு எல்லோராலும் ஒரே மனதாக அங்கீகரிக்கப்பட்டது.

அக்கிராசனாதிபதி

(1) ஸ்ரீ உ. வே. வி. வி. ஸ்ரீனிவாசய்யங்கார் ஸ்வாமி.

உப அக்கிராசனாதிபதிகள்

(1) ஸ்ரீ உ. வே. வி. பாஷ்யமய்யங்கார் ஸ்வாமி.
(2) ஸ்ரீ உ. வே. எம். சக்கரவர்த்தி அய்யங்கார் ஸ்வாமி.

காரியதரிசிகள்

(1) ஸ்ரீ உ. வே. ஸி. வி. வெங்கடரமணய்யங்கார் ஸ்வாமி.
(2) ஸ்ரீ உ. வே. ஸி. நரஸிம்மாச்சாரியார் ஸ்வாமி.

உதவி காரியதரிசிகள்

(1) ஸ்ரீ உ. வே. பா. ரே. திருமலையங்கார் ஸ்வாமி.
(2) ஸ்ரீ உ. வே. தி. கோ. ஆராவமுத அய்யங்கார் ஸ்வாமி.

பொக்கிஷதார்

(1) ஸ்ரீ உ. வே. வ. ராம அய்யங்கார் ஸ்வாமி, சென்னை.

(இதைப்பற்றின ஸ்ரீமுகங்கள் எல்லாம் திவான்பகதூர் ஸி. வி. வெங்கடரமணய்யங்கார், 'தர்ம விலாஸ்', கோயமுத்தூர் என்கிற விலாசத்துக்கு அனுப்பவேணும்.)

---



## உபயகலா ஸாமரஸ்யம்

[ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார்]

ஸ்ரீபகவத் ராமானுஜ ஸ்ரீவைஷ்ணவ மதத்தைச் சார்ந்தவர்களுக்கும், வடகலையாரென்றும், தென்கலையாரென்றும் சென்ற அநேக வருஷங்களாக பேதம் ஏற்பட்டு, அதுகாரணமாக கோவில்களிலும், கோர்ட்டுகளிலும் மிகவும் அஸஹ்யமான சண்டை சச்சரவுகள் நடந்துகொண்டு வந்திருப்பது எல்லோருக்கும் தெரிந்ததே. அதுகாரணம் பற்றி இருவகுப்பினர்களிலும் தடஸ்தர்களாயிருக்கும் அநேக விவேகிகளுக்கு அதனால் இருகலையாருக்கும் ஏற்பட்டிருக்கும் அவமானத்தை உத்தேசித்து தாங்கள் ஸ்ரீவைஷ்ணவர்களென்று தங்களை சொல்லிக்கொள்ளக்கூட லஜ்ஜையடைவதும் தெரிந்த விஷயமே. இவ்வவாந்தர பேதங்களால் உண்டாயிருக்கும் த்வேஷங்களும், மாத்ஸர்யங்களும் சென்ற 50 வருஷ காலமாய் அநேக காரணங்கள்பற்றி குறைவடையாமல் அதிகரித்து வந்திருப்பதும் பிரஸித்த விஷயமே. இவ்விதம் வைஷம்யங்கள் அதிகமாய் ஏற்பட்டுவிட்டதற்கு காரணங்களை விசாரித்தறிவது அனுவச்யகமாகத் தோன்றுகிறது. அதனால் • பிரயோஜனம் ஏற்படுமென்றும் நினைக்க இடமில்லை.

சுமார் 50 வருஷத்துக்கு முன் கலாபேதம் ஏற்பட்டிருந்தும், கலா வைஷம்யங்கள் விசேஷமாய் உண்டாயிருக்கவில்லை. இருகலையாரும் பரஸ்பரம் ப்ராத்ருபாவத்துடனும் ஹிதைஷிகளுமாகவுமே இருந்திருக்கிறார்கள். சுபாசுப கார்யங்களிலும், போஜனாதிகளிலும், பெண் கொடுத்து பெண் வாங்கி சம்பந்தம் செய்துகொள்வதிலும், ஒருவிதமான ஐயுறவுமில்லாமல் சகஜமாகவே நடத்திவந்தனர்.

ஆனாலோ வரவர இவ்வித விஷயங்களிலும் ஒருவிதமான அவிச்வாஸம் அதிகரித்து வந்திருக்கிறது. இப்பொழுதும் பரஸ்பரம் போஜனாதிகளில் ஒன்று சேர்ந்தபோதிலும் கூடியவரையில் தவிர்ப்பதற்கே மனோபாவம் உடையவர்களா யிருக்கிறார்கள். அவ்விதமே தத்காலத்திலும் பெண்கள் கொடுத்து வாங்கிக் கலியாணங்கள் நடந்தபோதிலும் அவரவர்கள் கலையில் தகுந்த சம்பந்தம் கிடைக்கவில்லையென்று தோன்றினாலே பிறகு மற்ற கலையில் தேடுகிறார்கள்.

ஆழ்ந்து யோசிக்குங்கால் ஸித்தாந்த ஆசார விஷயங்களில் இருகலையாருக்கும் சில பேதங்கள் ஏற்பட்டிருந்தபோதிலும் அவைகள் இவ்வளவு வைஷம்யத்திற்குத் தகுந்த காரணமாகச் சொல்ல முடியாது. அநேகமாய் யோசனாபேதங்களே யாகும். ஒரே கலையார்களுக்குள்ளும் சிற்சில ஸித்தாந்த ஆசார பேதங்கள் ஏற்பட்டிருக்கவில்லையா? ஆனால் முக்கியமாய் உபயகலையாருக்கும் ஏற்பட்டிருக்கும் வைஷம்யங்களுக்கு ப்ரபலமான காரணம்

இரண்டே யென்று தோன்றுகிறது. அவையாவெனில், கண்ணுக்கு பளி
சென்று தெரியும்படியான ஊர்த்வபுண்ட்ரத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கு
ரூபபேதம். மற்றொன்று தேவாலயங்களில் வரும்படி, அதிகாரம், மரிய
தைகள் முதலியவைகளைக் குறித்த சச்சரவுகள்.

இவ்வித வைஷம்யங்கள் யாவற்றையும் தீர்த்து விடுவது உடனே
சாத்தியமாயில்லாவிட்டாலும் யாவச்சக்யம் ஏகமனஸ்கராய் பிரயத்தன
படுவோமானால் பகவானுடைய ஆநுகூல்ய சங்கல்பமும் அதற்கு உதவ
செய்து தலைக்கட்டி வைக்கும் என்பதில் சந்தேஹம் வேண்டுவதில்லை. ஆ
லால் ஸ்ரீமான் திவான்பகதூர் ஸி.வி. வெங்கடரமண அய்யங்காருடைய பி
பல பிரயத்தனத்தால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற மேற்கண்ட சபையான
அப்பெரியாருடைய தீரபுத்தியையும், ஹிதைஷித்வத்தையும், ஸத்ய ஸங்க
பத்தையும் கூட குறிக்கும். இவ்விதமான ஸபை ஏற்பட்டிருக்கிற தென்கி
விஷயமே உபயகலையைச் சார்ந்த எல்லாருடைய மனதிலும் ஒரு ஐகமத்திய
விஷயத்தில் அபிலாஷையையும் பிரயத்தனத்தையும் கூட தினே தினே அ
விருத்தி செய்யக்கூடும்.

ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் பரஸ்பரம் பூஜார்ஹமான பகுமானமு
பாகவத சேஷத்வமும் தவிர மற்றொரு மனோபாவத்துக்கு இடமும் உண்
டோ? அப்படி இடமுண்டாகுமாகில் ஸ்ரீவைஷ்ணவத்வம் போகாதோ

ஆதலால் இவையெல்லாம் யோசித்து இனிமேலாவது சண்டை ச
சரவுகள் இல்லாமல் தீர்த்துக்கொள்ளவும், ஸித்தாந்த ஆசார பேதங்க
இருப்பினும் அவைகளை யோசனா பேதங்களாகவே கருதி வைரஸ்யத்துக்கு
காரணமில்லாமல் கூடியவரையில் பகுமானித்தே வருவதும் ஸ்வரூப லக்ஷ
ணத்துக்கு ஏற்கும். ஸ்ரீபகவத் ராமாநுஜ தர்சனத்திற்கு மிகவும் ஏற்
முள்ளதாகும். ஆதலால், அத்தர்சனத்தில் ஆஸ்தையுள்ள எல்லோரு
மேற்படி சபையில் அங்கத்தினர்களாகச் சேர்ந்து சபையின் கருத்துக்கள
காரியகரமாகச் செய்ய ப்ராப்தம். அதுவே இவ்வேதாந்த தீபிகையி
பேரவாவும் பிரார்த்தனையுமாம்.

---









வசோபி:) என்றபடி அந்த கண்ணன் ஸூக்திக்கும் பரிஷ்காரம், (ப்ரஸாதனம்) பண்ணியது அதன் பாஷ்யமான இவர் ஸூக்தி.

'ச்ருதிம்'—ச்ருதி தேவியை-ஜனவாதத்தை-அபதிகை யென்றும் அன்ய பதிகை யென்றும் அஸ்வாதீன பதிகை யென்றும் பிறர் பரவச்செய்யும் அபவாத ச்ரவணத்தைப் போக்கி ஸ்வாதீன பதிகை யென்ற ச்ருதியைப் பரப்புகிறார்.

குரு பரம்பரா நமஸ்காரம் இங்கே முடிகிறது. யதிராஜர் வரையில் குரு பரம்பரையில் ஒருவர் ஒருவராக ஒரொரு ச்லோகத்தால் வணங்குவது யதிராஜ ஸப்ததியில்தான். தயாசதகத்தில் शीतलां गुरुसन्ततिम् (சீதளாம் குருஸந்ததிம்) என்று பொதுவில் ஒரு ச்லோகம். ச்ருதியுடன் இந்த ஸ்தோத்ரம் தொடங்கியது. ச்ருதியையும் பாஞ்சராத்ரத்தையும் அவிரோதிகளாக்கியது. நம்மை தாந்த்ரிகர் மாத்திரமேயன்றி வைதிகரல்ல வென்பர் பிறர்; தாந்த்ரிகராயினும் வைதிகத்வத்திற்கு எள்ளளவேனும் குறைவில்லை யென்று மஹாபாரதம் மோக்ஷதர்மமும், ப்ரஹ்ம ஸூத்ரமும், ஆகம ப்ராமாண்யமும், ஸ்ரீபாஷ்யமும், அதன் டீகையும், ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷையும், அத்வைத பாஷ்ய வ்யாக்யானமான கல்பதருவும், அத்வைத ஸித்தியும், மத்வமத க்ரந்தங்களும் நிரூபித்தன. யதிராஜர் தர்சனம் ச்ருதிதர்சனம் என்பதைக் காட்ட அவரை வணங்கும் முதல் ச்லோகத்திலேயே ச்ருதியின் உண்மைப் பொருளைத்தான் யதிராஜ தர்சனம் வழிபடுகிறதென்று கூறுகிறார். 'ச்ருதிம்' என்று தொடங்கி 'भद्रवेदीं त्रिवेदीं' (பத்ரவேதீம் த்ரிவேதீம்) என்று சரம ச்லோகத்தில் ச்ருதியின் நாம ஸங்கீர்த்தனத்தோடு உபஸம்ஹாரம் செய்கிறார். மத்தியில் நெடுகிலும் 'स्थविरनिगमस्तोमस्थेयां' (ஸ்தவிரநிகமஸ்தோமஸ்தேயாம்) என்றிப்படி பல ச்லோகங்களால் இதைக் காட்டுகிறார். ச்ருதியைப் பெருமாள் சொன்னதை முதல் ச்லோகத்தில் கூறினார். பெருமாளை ச்ருதி ஆசையுடன் சொல்லுவதை பத்தாவது ச்லோகத்தில் ஸாதிக்கிறார்.

இங்கு ச்ருதி யென்று முடித்து, அடுத்த ச்லோகத்தில் ச்ருதியின் அத்யயனத்துக்கு யோக்யதையை அளிக்கும் உபநயன லப்தமான உபவீதத்தோடு நித்யமும் கூடினவர் என்று ஆரம்பிக்கிறார். ப்ரஹ்ம ஸூத்ரத்தோடு (யஜ்ஞோபவீதம் வ்யாஸ ஸூத்ரம்) நித்யம் கூடியவர் என்கிறார். 'ஸூத்ரம் து' என்று பிறர்போல் ப்ரஹ்ம ஸூத்ரத்தை விடுவதேயில்லை. ச்ருதி கூறும் பொருள் வேறு; ஸூத்ரம் சொல்வது வேறு என்பர் பிறர்!

'ச்ருதிம்' என்று ஆழ்வார்களின் த்ராவிட ச்ருதியையும் சொல்லுகிறது. அதை 'வளர்த்த தாய்' இவர். 'மாறனடி பணிந்துய்ந்தவர்' அருளிச் செயலுக்கு பெருமாள் ஸர்வ ஸ்வாதீனர்.

இங்கே ச்ருதியை யலங்கரிக்கும் ஸூக்தியையுடையவர் உடையவர் என்றார். 74-ம் ச்லோகத்தில் '**श्रुतिवतंसितसूनृतसूक्तयः**' (ச்ருதி வதம்ஸித ஸூந்ருத ஸூக்தய:) என்று யதிராஜ ஸப்ததியை ச்ரத்தையுடன் ஆதரிப்பவரைப் பேசுகிறார். ச்ருதியை அலங்கரிக்கும் வாக்ப்ரபாவமுடையவராவர் என்று ஸாதிக்கிறார். எம்பெருமானாரை இத்துதியால் த்யானம் செய்பவரும் அவர் ஸூக்திக்குள்ள ப்ரபாவத்தையுடைய வாக்கைப் பெறுவரென்கிறார். தத்க்ரது ந்யாயம்போலே. த்யானிக்கப்படும் எம்பெருமானார் ப்ரபாவத்தை த்யானிப்பவரும் ஒருவாறு பெறுவர்.

**उपवीतिनमूर्ध्वपुण्ड्रवन्तं**
**त्रिजगत्पुण्यफलं त्रिदण्डहस्तम् ।**
**शरणागतसार्थवाहमीडे**
**शिखया शेखरिणं पतिं यतीनाम् ॥ ११ ॥**

உபவீதிநம் ஊர்த்வ-புண்ட்ர-வந்தம்
த்ரி-ஜகத்-புண்ய-பலம் த்ரி-தண்ட-ஹஸ்தம் ।
ஶரணாகத-ஸார்த்தவாஹம் ஈடே
ஶிகயா ஶேகரிணம் பதிம் யதீநாம் ॥

உபவீதிநம்-யக்ஞோபவீதம் தரித்தவரும்,
ஊர்த்வ-புண்ட்ர-வந்தம் - நெற்றியில் ஊர்த்வமாகத் திருமண் தரித்தவரும்
த்ரி-ஜகத்-புண்ய-பலம் - மூவுலகும் பண்ணின புண்ணியத்தின் பலனாக அவதரித்தவரும்,
த்ரிதண்ட-ஹஸ்தம் - கையில் முக்கோலைத் தரித்தவரும்,
ஶரணாகத-ஸார்த்த-வாஹம் - பெருமாளை சரணமடைந்து உஜ்ஜீவிப்பவர்களின் கூட்டத்திற்குத் தலைவரும்,
ஶிகயா - சிகையினாலே
ஶேகரிணம் - திருமுடியலங்காரத்தை யுடையவரும்,
யதீநாம்பதிம் - ஸந்யாஸிகளுக்குத் தலைவருமான ஸ்ரீபாஷ்யகாரரை.
ஈடே - துதிக்கிறேன்.

என் நமஸ்காரத்தை லக்ஷ்மணமுனி அங்கீகரிக்கவேண்டும் என்று முன் சுலோகத்தில் சொன்னதும், தன் பக்தாக்ரேஸரரும் தன் தர்சனத்தை



158623

நிலைநிறுத்தினவருமான கவிஸிம்ஹத்திற்கு எம்பெருமா[illegible] ஸாதிக்க அவரை அனுபவிப்பதாக இருக்கிறது இந்த சுலோகம். ஸங்கல்ப ஸூர்யோதய நாடகத்தில் இரண்டாமங்கத்தில் புறச்சமயங்களோடு வாதம் செய்து நம் தர்சனத்தை ஸ்தாபிக்குமிடத்தில் ஸ்ரீபாஷ்யகாரரை ஆசார்யனாகவும் தன்னை சிஷ்யனாகவும் வைத்து அவருடைய அனுக்ரஹத்தைப் பெறும்போது இந்த சுலோகம் இருக்கிறது. ஸநத்ஸுஜாதரை விதுரர் தம் தபோபலத்தால் திருதராஷ்டிரன் முன் எழுந்தருளிவித்ததுபோல, இங்கே தம் தியானபலத்தால் எம்பெருமானாரை ஸாக்ஷாத்கரித்து **प्रत्यक्षे गुरवः स्तुत्याः** (ப்ரத்யக்ஷே குரவ: ஸ்துத்யா:) என்பதற்கிணங்க நேருக்கு நேராய் துதிக்கிறார். 'விக்ரஹா-லோகன-பர:' என்று திருமேனியை ஸேவிப்பதும் உசிதம். விஶிஷ்டாத்வைதஸித்தாந்தமே எம்பெருமானாருடைய வடிவில் அமைந்திருப்பதை அனுபவிக்கிறார்.

உபவீதிநம்—ப்ரஹ்மஸூத்ர பாஷ்யகாரர் ப்ரஹ்மஸூத்ரதாரியாக இருக்கிறார். 'யதிகளுக்கு மூன்று சுத்தங்கள் அவச்யம் ஸங்கிரஹிக்க வேணும்—யக்ஞோபவீதம், தண்டங்கள், ஜந்துக்களை விலக்கும் வஸ்திரம்' என்ற வசனத்தின் கிரமத்தையும் அனுஸரிக்கிறார்.

ஊர்த்வ-புண்ட்ரவந்தம்—ஸ்ரீசங்கராசாரியரும் ஹரிபாதாதிகேசாந்த ஸ்தோத்ரத்தின் முடிவில் இதை அனுபவிக்கிறார். ப்ரஹ்மரந்த்ரத்திலிருந்து ஆத்மஜ்யோதிஸ் மேல்நோக்கிச் செல்லுவதை ஊர்த்வபுண்ட்ரம் காட்டுகிறது. "**तत्पुण्ड्रमूर्ध्वं जनिमरणतमःखण्डनं मण्डनं च**"; 'ப்ரஹ்மஜ்யோதிஸ் மேலே போனால் ப்ரஹ்மப்ராப்தி' என்று சுருதி. ஆதிசேஷனுடைய ஆயிரம் படங்களிலும் ஹரிபாதம் இருப்பதால், அவருடைய அவதாரமான எம்பெருமானார் லலாடத்திலும் அது இருக்கிறது.

த்ரி-ஜகத்-புண்ய-பலம்—மூவுலகும் பண்ணிய புண்ணியத்தின் பலனாக இங்கே அவதரித்தார். சித்-அசித்-ஈச்வரன், அல்லது பத்த-முக்த-நித்யர் என்ற மூவகையானவர்களின் பாக்யத்தால் அவதரித்தவர்.

த்ரிதண்டஹஸ்தம்—முக்கோல் வைஷ்ணவ ஸந்யாஸிகள் மட்டும் தரிப்பது. பாஸ்கராசாரியரும் வைஷ்ணவராதலால் அவரும் த்ரிதண்டியே. நம் ஸித்தாந்தம் வியாஸஸித்தாந்தம் மட்டுமல்ல, அவருக்கும் முந்தினவரான மனுவின் ஸித்தாந்தமும் அதுவே என்பதை குல்லூகபட்டர் மனுஸ்மிருதி வியாக்யானத்தில், 'த்ரிதண்டிவேதாந்திகளின் மதம்தான் மனுவின் அபிப்பிராயம்' என்று கூறியிருக்கிறார். மனோ வாக்கு காயங்கள் என்ற மூன்றையும் அடக்கினவர்கள் என்றும் சொல்லலாம். த்ரயீ என்ற வேதங்களை உத்

தாரணம் செய்யும் பொருட்டு வந்த விஷ்ணுவின் அவதாரமான தத்தாத்ரேயருக்கும் திரிதண்டம், சிகை, யக்ஞோபவீதம் எல்லாம் உண்டு. மேலே 63ம் சுலோகத்தில் இவரோடு எம்பெருமானாரை ஒப்பிடப்போகிறார்.

ஶரணாகத-ஸார்த்தவாஹம்—பிரபன்னரான அடியார்குழாங்களை ஸம்ஸாரத்தைத் தாண்டுவித்து பரப்ரஹ்மத்தை அடையும்படி செய்பவர்.

ஶிகயா ஶேகரிணம்—திருமுடிக்கு சிகை ஆபரணம்; யதிராஜருக்குக் கிரீடம் சிகை. தலையிருந்தும் முண்டம் என்ற பெயர் வரலாகாது என்று ஸூசகம்,

பதிம் யதீநாம்—'யதிகட்கிறைவன்,' 'யதித்தலைநாதன்'. முன்சொன்ன எல்லா விசேஷணங்கள் யதியாய் தலைவராயிருந்த ஆளவந்தாருக்கும் ஒக்குமாயினும், அவர் யதிகளுக்குப் பதியில்லையாகையால் யதீநாம் பதிம் என்பது எம்பெருமானாரையே குறிக்கும். '700 யதிகளாலும், 74 ஸிம்ஹாஸனாதிபதிகளாலும், மற்றும் எண்ணிறந்த விஷ்ணு பக்தர்களாலும் சூழப்பட்டு ஸ்ரீரங்கத்தில் யதிஸார்வபௌமர் எழுந்தருளியிருக்கிறார்' என்பர். இந்தப் பரிவாரங்களோடு பிக்ஷைக்கு எழுந்தருளுவதை 64ம் சுலோகத்தில் அநுபவிக்கிறார். கீதோபநிஷத்தின் சுலோகங்கள் 700, அதை ஓதுவார்களும் எழுநூற்றுவர்.

இங்கு 'உப' என்று தொடங்குவது 'ஔபச்சந்திகம்' என்னும் சந்தம் என்பதைக் காட்டுவதாகலாம். உபச்சந்தநம்—துதியால் ஆவர்ஜநம் செய்வது, குளிரச் செய்வது என்று பொருள். இதற்கு ஓரெழுத்துக் குறைவான வைதாளிகம் என்னும் சந்தம். இனி மேல் சந்தங்களின் அக்ஷர ஸங்கியை அதிகமாகிக்கொண்டே போகின்றன. ஶார்தூலவிக்ரீடிதத்திலுள்ள 61 முதல் 68 வரையிலுள்ள சுலோகங்கள் பரமத விஜயத்தைக் கூறுவன; 69, 70, 71 மூன்றும் ஸ்ரக்தரை. மாலாஹஸ்தைகளான மதிமுக மடந்தையரால் வீடு சேர்ப்பிக்கும் ஸித்தாந்தத்திற்கு அநுகுணமான பெயரையுடைய சந்தஸ்ஸோடு முடிவு.

ஸ்ரீபாகவதம் ஏகாதசத்தில் 'பிக்ஷுகீதை' ப்ரகரணத்தில், 'பிக்ஷுவின் (ஸந்யாஸியின்) மூன்று மூங்கிற்கோலை சிலர் பிடுங்கினார்கள்' என்று பகவான் ஸ்பஷ்டமாக ஸந்யாஸிகளுக்கு 'த்ரிவேணு' என்று கூறிய லக்ஷணத்தை, திருமழிசையாழ்வார், "சிற்றெயிற்று முற்றல் மூங்கில் மூன்று தண்டர் ஒன்றினர் அற்ற பற்றர் சுற்றி வாழும் அந்தணீரங்கமே" (52) ‖ என்று அருளிச் செய்ததையும் நினைக்கவேணும்.



प्रथयन् विमतेषु तीक्ष्णभावं
प्रभुरस्मत्परिरक्षणे यतीन्द्रः ।
अपृथक्प्रतिपन्नयन्मयत्वैः
ववृधे पञ्चभिरायुधैर्मुरारेः ॥ १२ ॥

ப்ரதயந் விமதேஷு தீக்ஷ்ண-பாவம்
ப்ரபு: அஸ்மத்-பரிரக்ஷணே யதீந்த்ர: ।
அப்ருதக்-ப்ரதிபந்ந-யந்-மயத்வை:
வவ்ருதே பஞ்சபி: ஆயுதை: முராரே: ‖

அப்ருதக்-ப்ரதிபந்நயந்மயத்வை: - வேறில்லாமல் எந்த உடையவருடைய ஸ்வரூபத்தைப்பற்றிய

முராரே: - விஷ்ணுவினுடைய

பஞ்சபி: ஆயுதை: - ஐந்து ஆயுதங்களாலே

வவ்ருதே - விருத்தியடைகையோ

விமதேஷு - எதிர் மதங்களின் பேரில்

தீக்ஷ்ணபாவம் - கூர்மையை

ப்ரதயந்-ப்ரகாசப்படுத்திக்கொண்டு

யதீந்த்ர: - அந்த யதிராஜன்

அஸ்மத்-பரிரக்ஷணே - நம்மை ஸர்வவிதத்திலும் ரக்ஷிப்பதில்

ப்ரபு: - ஸமர்த்தர்.

பெருமானுடைய திவ்யமங்கள விக்ரஹம் பஞ்சோபநிஷன்மயம் என்பர்; எம்பெருமானார் திருமேனி பஞ்சாயுதமயம். இதையே அமுதனாரும்

"அடையார் கமலத்தலர்மகள் கேள்வன் கையாழியென்னும்
படையொடு நாந்தகமும் படர்தண்டு மொண்சார்ங்கவில்லும்
புடையார் புரிசங்கமும் இந்தப் பூதலம் காப்பதற்கென்று
இடையே யிராமாநுசமுனியாயின விந்நிலத்தே" (33)

என்று அருளிச்செய்தார். பகவானைப் போலவே ஆசார்யனும் ஸாதுபரித்ராணார்த்தமாக வருகிறார். இங்கு சார்ங்கம் முதலிய ஆயுதங்களே எம்பெருமானாராக வந்தன; அவருடைய புத்தி அஹங்காரங்களோடு ஒன்றாயின. 'கதை' என்பது புத்திதத்வத்திற்கும், 'சங்கம்' என்பது பூதங்களுக்குக் காரணமான தாமஸாஹங்காரத்திற்கும், 'சார்ங்கம்' என்னும் வில் இந்திரியங்களுக்குக் காரணமான ஸாத்விகாஹங்காரத்திற்கும் 'சக்ரம்' மனதுக்கும், 'நந்தகம்' ஞானத்திற்கும் அபிமானியான தத்வங்கள் என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் அஸ்த்ர பூஷணாத்யாயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

அதையொட்டியே ஸ்ரீதேசிகனும் "மான் தண்டாகத் தெருள்மருள் வாள் மறைவாக வாங்காரங்கள் சார்ங்கம் சங்காக மனம் திகிரியாக இருடீகங்களீரைந்தும் சரங்களாக......கண்ணன் கரிகிரிமேல் நின்றனைத்தும் காக்கின்றனே." என்றருளிச்செய்தார். 'இராமாநுசமுனியிடையேயாயின்' என்பதுபோல இங்கும் 'யந்மயத்வ' என்பதற்கு ஸ்வரூபத்வம் (ஸ்வார்த்தம்), ஆவிஷ்டத்வம் (ப்ராசுர்யம்) என்ற இரண்டு பொருள்களையும் கொள்ளலாம்.

ஞானமென்னும் கத்தியால் அஜ்ஞானத்தைச் சேதிக்கவேண்டும். நந்தகம் என்னும் திருநாமமே ஆநந்தத்தைத் தருவது என்பதையும், கௌமோதகம் என்பது பூமியைக் களிக்கும்படி செய்வது என்பதையும் காட்டும். மனம் என்பது திகிரி (ஸுதர்சநம்); அங்குமிங்கும் சுற்றிச் சுழன்று ப்ரமிக்கும் மனம் ஸுதர்சன ரூபமாகும். சங்கத்தின் சப்தம் பிறருடைய ஹ்ருதயத்தைப் பிளந்து ஸ்வகீயருக்கு ஆநந்தத்தை அளிப்பதாகும். இந்திரியங்களுக்குக் காரணமான சார்ங்கம் எல்லா இந்திரியங்களையும் ஈச்வரமார்க்கத்தில் செலுத்தும்.

**அப்ருதக்-ப்ரதிபந்ந-யந்மயத்வை:**—இதனால் 'எல்லாம் ப்ரஹ்மாத்மகம், எல்லாம் ப்ரஹ்மாப்ருதக்-ஸித்தம், ப்ரஹ்மாநந்யம்' என்னும் நம் தர்சனத்தின் கொள்கைகள் ஸூசிப்பிக்கப்படுகிறது.

**பஞ்சபி: ஆயுதை:**—பஞ்சராத்ரம், பஞ்சகாலங்கள், பரவ்யூஹாதி பஞ்சகம், அர்த்தபஞ்சகம், பஞ்சாங்கமான உபாயம், பஞ்ச ஆசார்யர்கள் என்பது போல பஞ்ச ஆயுதம். ஸ்ரீசங்கராசாரியாரும் பாஞ்சராத்ரீதியாக அபிகமநாதி பஞ்சகால பராயணர்; ஸாளக்ராமாராதகர். கபிலரூபியான பகவான் தம் தாயாரான தேவஹூதிக்கு உபதேசிக்கையில், ஸ்ரீபாகவதம் 3-29-15 "**निषेवेतानिमित्तेन स्वधर्मेण महीयसा। क्रियायोगेन शान्तेन नातिहिंस्रेण नित्यशः**" என்று தொடங்கும் சுலோகங்களில் கூறினதை, ஸ்ரீதரஸ்வாமியும் 'நிஷ்காமமாக சிரத்தையோடுகூடிய பஞ்சராத்ராத்யுக்த பூஜாப்ரகாரத்தால் என் பிரதிமைகளின் தர்சன-ஸ்பர்சன-பூஜா-ஸ்துதி-அபிவந்தனங்களோடுகூடிய பக்தியோகத்தால்' என்றுரைத்தார். பிராசீனமான அத்வைதாநுஷ்டானமும் இப்படியே. 'பரபுருஷனைப்போல என் பஞ்சாயுதங்களால் ஸமயங்களில் ஸத்வவான்களை ஜயிக்கிறேன்' என்று ஸங்கல்பஸூர்யோதயத்தில் காமன் சொல்லுகிறான். காமனைப் பயந்த காளையான ஸர்வேச்வரன் தன் பஞ்சாயுதங்களால் தன்னிடமே காமுறும்படி செய்கிறான்; பஞ்சாயுத ஸ்வரூபரான எம்பெருமானார் நம்மை பகவானிடம் காமுறும்படி செய்கிறார்.



**விமதேஷு தீக்ஷ்ணபாவம் ப்ரதயந்**—எதிர்மதத்தை எதிர்ப்பதேயொழிய மதத்தினரை எதிர்ப்பதில்லை; "**पापीयानयं पक्षः**" என்று கூறுகிறவர். "பிற மதத்தினரும் பண்டிதர்கள்தான், ஆனால் அவர்கள் புத்தியெல்லாம் ப்ராசீநகர்மவாஸனைகளால் மூடப்பட்டுவிட்டது" என்று ஸாதிப்பது வழக்கமாம். பகவதவதாரம்போல பரமதநிரஸநம் நம் ரக்ஷணத்திற்காகவே யொழிய ஸ்வயம் பிரயோஜனமல்ல.

ராமாநுஜார்ய திவ்யாக்ஞையின் விருத்தி அபிவிருத்திகளை மேலே பேசப்போகிறார். இங்கே அதற்கு வேண்டிய ஞானஸாமக்ரியின் விருத்தியைப் பேசுகிறார்.

**शमितोदयशङ्करादिगर्वः**
**स्वबलादुद्धृतयादवप्रकाशः ।**
**अवरोपितवान् श्रुतेरपार्थान्**
**ननु रामावरजः स एष भूयः ॥ १३ ॥**

ஶமிதோதய-ஶங்கராதி-கர்வ:
ஸ்வ-பலாத் உத்-த்ருத-யாதவ-ப்ரகாஶ: ।
அவரோபிதவாந் ஶ்ருதே: அபார்த்தாந்
நநு ராமாவரஜ: ஸ ஏஷ: பூய: ॥

ஶமிதோதய ஶங்கராதி கர்வ: - சங்கரர் (ருத்ரன்) முதலியவருக்கு கர்வமுதிக்காமல் சமநம் செய்தவரும்
ஸ்வபலாத் - தன் பலத்தால்
உத்-த்ருத-யாதவ-ப்ரகாஶ: - யாதவர்களின் (யதுகுலத்தின்) தேஜஸ்ஸை உத்தரணம் செய்தவரும்
ஶ்ருதே: - சுருதியினுடைய (சுருதியிலிருந்து அல்லது காதிலிருந்து)
அபார்த்தாந் - தப்பர்த்தங்களை (பார்த்தரென்னும் பாண்டவர்களின் விரோதிகளை)
அவரோபிதவாந் - இறக்கி நீக்கினவருமான
ஏஷ: - இவர்
ஸ: ராமாவரஜ: - அந்த (பல) ராமனுக்குத் தம்பியே;
நநு பூய: - மறுபடியும் (அவரே அவதரித்தாரோ என்னலாம்).

லக்ஷ்மணமுனி சேஷனின் அவதாரமான லக்ஷ்மணன்; ஆனால் செய்த கார்யங்களைப் பார்த்தால் மற்றோர் ராமனின் தம்பியான ராமாநுஜனோ இவர் என்று நினைக்கும்படி யிருக்கிறது. இருவர் செய்த கார்யங்களின் ஒற்றுமையைக் காட்டுகிறார்.

"கார்த்திகையானும் கரிமுகத்தானும் கனலும் முக்கண்
மூர்த்தியும் மோடியும் வெப்பும் முதுகிட்டு மூவுலகும்
பூத்தவனே! என்று போற்றிட வாணன் பிழைபொறுத்த
தீர்த்தனை" (22)

என்று இராமாநுச நூற்றந்தாதி.

"நீணிலத்தொடு வான்வியப்ப நிறைபெரும் போர்கள் செய்து
வாணனாயிரந்தோள் துணித்ததும் உட்பட மற்றும் பல"

என்று பாணாஸுர யுத்தத்தில் ருத்ரனை ஜயித்ததைக் கூறுவர். மதுஸூதன ஸரஸ்வதியும் கீதாவ்யாக்யானத்தில் ஒரு பெரிய சூர்ணிகையில் "**बाणयुद्ध-विजितशशाङ्कशेखरे निरुपमश्यामसुन्दरे**" என்று இதில் ஈடுபட்டார்.

ஶமித......கர்வ:—எம்பெருமானார் பிறருடைய கர்வத்திற்கு உதயம் வராததை மட்டுமே செய்பவர். பிறர் பாஷ்யங்களில் பல அம்சங்களை அப்படியே நம் பாஷ்யத்தில் ஏற்றுக்கொண்டிருக்கிறார்; ஆனால் த்வேஷிக்கு அடையாளமாக 'ஈஶ்வரோஹம்' என்று கீதையில் சொன்ன ஈஶ்வராபேதாஹங்காரத்தை மட்டும் தீக்ஷ்ணயுக்திகளால் தலையெடுக்க முடியாமல் சமனம் செய்கிறார்.

ஸ்வபலாத்-உத்த்ருத-யாதவப்ரகாஶ:—ராமானுஜனை கண்ணனால் யாதவ குலத்தின் தேஜஸ் உத்தரணம் செய்யப்பட்டது; ராமானுஜரான உடையவர் தம் ஸ்வந்த பலத்தினால் தம் குருவாகிய யாதவப்ரகாசரைத் திருத்தி நம் தர்சனத்தில் புகுத்திக் கரையேற்றிவைத்தார்.

அபார்த்தாந் அவரோபிதவாந்—கண்ணன் பார்த்தரென்னும் பாண்டவர் பக்ஷத்திலிராதவர்களை சுருதியிலிருந்து விலக்கினார்—காதால் கேட்பதற்குமில்லாமல் யுத்தத்தில் மாளவைத்தார்; சுருதிக்கு ஏற்பட்ட தப்பர்த்தங்களையும் தம் கீதையால் நீக்கினார். ஆனால் அந்த கீதைக்கும் விபரீதமான அர்த்தங்கள் உண்டாகவே, அவற்றை நீக்கி சுருதிகளுக்கும் ஸரியான அர்த்தத்தை எடுத்துக் காட்டவே எம்பெருமானார் தோன்றினார்.

" यतिपरिवृढो यद्गीतानां अदर्शयत् अञ्जसा
निगमपरिषद्वेदीयांसं निरामयं आशयम् ॥"

வவ்ருதே—"பொலிக பொலிக பொலிக" என்றும் "ஆழியெழச் சங்கும் வில்லும் எழ திசைவாழி யெழத்தண்டும் வாளும் எழ" என்றும் பல்லாண்டு பாடத் திருவுள்ளம்.

அவரோபிதவாந்—என்பதால் முன்பு தப்பர்த்தங்கள் ஆரோபிதர் என்பதாக ஸூசிப்பிக்கப்படுகிறது.



## सू—हस्तादयस्तु स्थितेतोनैवम् ॥ २-४-५ ॥

हस्तादयोपि इन्द्रियाणि । जीवे देहान्तरस्थिते उपकारकत्वाविशेषात् । अतो न सप्तैव । अपित्वेकादश । " दशेमे पुरुषे प्राणाः आत्मैकादशः " " इन्द्रियाणि दशैकञ्च " इति श्रुतिस्मृतिभ्याम् । बुद्ध्यादयः मनोवृत्तिभेदाः । सप्तानां गतिश्रवणं विशेषणञ्च तेषां प्राधान्यात् ॥

இந்திரியங்கள் ஏழுதான் உண்டு என்று சொல்லுவது சரியல்ல. கை முதலான கர்மேந்திரியங்களும் சரீரத்தினுள் வஸிக்கும் ஆத்மாவுக்கு உபகாரம் செய்வதால், அவையும் இந்திரியங்களே. இந்திரியங்கள் பத்து. மனது ஒன்று ஆக பதினொன்று என்று ச்ருதியிலும் ஸ்மிருதியிலும் கூறப்பட்டிருக்கிறது. கடச்ருதியில் ஏழு இந்திரியங்களே ஜீவனோடு ஸஞ்சரிக்கின்றன என்று சொன்னதுக்குக் கருத்து அவற்றுள் இவை முக்கியமானவை என்று.

---

ப்ராணாணுத்வாதிகரணம்

## सू—अणवश्च ॥ २-४-७ ॥

तानि चाणूनि । " प्राणमनूत्क्रामन्तं सर्वे प्राणा अनूत्क्रामन्ति " इति गतिश्रवणात् ॥

அந்த இந்திரியங்களும் அணு. ப்ராணன் வெளியே போகும்போது இந்திரியங்களும் அநுஸரித்துச் செல்லுகின்றன என்று கூறியிருப்பதால்.

## सू—श्रेष्ठश्च ॥ २-४-७ ॥

श्रेष्ठः—पञ्चवृत्तिप्राणोप्युत्पद्यते । उत्तरचिन्तार्थोयमनुवादः ॥

இந்திரியங்களைக் காட்டிலும் சிறந்ததாகச் சொல்லப்பட்ட ப்ராணனும் பிறக்கிறவனே. மேல் சூத்திரத்தில் தொடரவேண்டியதுக்காக இது தனித்து சொல்லப்பட்டது.

### வாயுக்ரியாதிகரணம்

### सू—न वायुक्रिये पृथगुपदेशात् ॥ २-४-८ ॥

पञ्चवृत्तिप्राणः न वायुमात्रम्। तत्क्रिया वा। "एतस्माज्जायते-प्राणः खं वायुः" इति पृथगुपदेशात् ॥

ஐந்து வ்யாபாரங்களை உடைய ப்ராணன் வாயுமட்டுமல்லன். வாயுவின் சேஷ்டையுமல்லன். ப்ராணனைக் காட்டிலும் வாயுவைத் தனிப்பொருளாகக் கூறியிருப்பதால்.

### सू—चक्षुरादिवत्तु तत्सहशिष्ट्यादिभ्यः ॥ २-४-९ ॥

वायोः पृथग्भूतोयम् नाग्न्यादिवत् भूतान्तरम्। वायुरेव देहधारणयोग्याकारमापन्नः चक्षुरादिवत् जीवोपकरणम्। चक्षुरादिभिस्सह उपदेशतत्तुल्योपकारतन्मुख्यत्वेभ्यः ॥

வாயுவைக் காட்டிலும் வேறு பொருளான இந்த ப்ராணன் அக்னியாதிகளைப்போல் வேறு பூதமல்ல. சரீரத்தை தரிக்க வல்லமை வாய்ந்த வாயுவேயாகும். கண் முதலியவற்றைப் போல் ஜீவனுக்கு உபகரணமுமாகும். சக்ஷுராதிகளோடே கூட உபதேசித்திருப்பதாலும், அவற்றைப் போலவே உபகாரம் செய்வதாலும், முக்கியமாயிருப்பதாலும்.

### सू—अकरणत्वाच्च न दोषस्तथाहि दर्शयति ॥ २-४-१० ॥

करणं क्रिया। न जीवोपकाररूपक्रियारहितत्वे दोषः। यतः श्रुतिरेव देहेन्द्रियाद्यशैथिल्यकरणं दर्शयति। प्राणोत्क्रमणे देहेन्द्रियादिशैथिल्याभिधानात् ॥

கரணம் - செயல், ஜீவனுக்கு உபகாரமான செய்கை இல்லாதது கொண்டு சிலர் தோஷம் கூறுவதுண்டு. அது தவறு. ச்ருதியே தேஹேந்திரியாதிகளை சிதிலமாகாமல் காக்கும் செயல் உண்டென்று கூறுகிறது. ப்ராணன் வெளியே போன பிறகு தேஹேந்திரியாதிகள் பாபிஷ்டமாகின்றன என்று சொல்லியிருக்கிறது.



### सू—पञ्चवृत्तिर्मनोवद्व्यपदिश्यते ॥ २-४-११ ॥

प्राण एक एव स्ववृत्तिभिः पञ्चभिः प्राणापानादि नामभाग्भवति। कामादिभिर्यथैकमेव मनः "कामस्संकल्पः" इत्यारभ्य "एतत्सर्वं मन एवे"ति ॥

ப்ராணன் ஒன்றே தனது ஐந்து வ்ருத்திகளால் ப்ராணன் அபானன் முதலான பெயரைப் பெற்று நிற்கிறது. மனது ஒன்றே தனது காமம் முதலான செய்கைகளைக் கொண்டு காமம் ஸங்கல்பம் தொடங்கி இதெல்லாம் மனமே என்று கூறப்பட்டதுபோல்.

---

### ச்ரேஷ்டாணுத்வாதிகரணம்

### सू—अणुश्च ॥ २-४-१२ ॥

"प्राणोनूत्क्रामति" इत्युत्क्रान्तेः अणुः ॥

ப்ராணனும் ஜீவனுக்குப் பின்னே வெளியேறுகிறது என்று சொல்லியிருப்பதால் ப்ராணன் அணுவாகும்.

---

### ஜ்யோதிராத்யதிஷ்டாநாதிகரணம்

### सू—ज्योतिराद्यधिष्ठानं तु तदामननात् प्राणवता शब्दात् ॥ २-४-१३ ॥

जीवेन सह अग्न्यादेः इन्द्रियाद्यधिष्ठानं परमात्मसङ्कल्पादेव भवति। "योग्नौ तिष्ठन् योग्निमन्तरो यमयति", इत्यादिशब्दात् ॥

அக்னி முதலிய பூதங்கள் ஜீவனோடு கூடி இந்திரியம் முதலான கருவிகளை தூண்டுவதும் பரமாத்மாவின் ஸங்கல்பத்தாலேயே என்று ச்ருதி கூறுகிறது.

அக்நியாக ரூபிக்கப்பட்ட பர்ஜந்யனை அடைந்து வர்ஷதாரைகளோடுகூட அக்நியாக ரூபிக்கப்பட்ட பூமியை அணுகி நெல்லு முதலான ஓஷதிகளோடு சேர்ந்து அந்நமாக பரிணமித்த அந்த ஓஷதியுடன் புருஷனை அடைந்து, புருஷ வீர்யமாக பரிணமித்த அந்த நீரோடு கலந்து, பெண்ணினுள் புகுந்து, அங்கு கர்ப்பமாக பரிணமித்து புருஷன் என்று பெயர் பெற்ற அப்புக்களோடு சேர்ந்து வினைப்பயனுக்கொத்தபடி, ப்ராம்மணாதி உருவம் கொண்டு பிறக்கிறான்.

### सू—त्र्यात्मकत्वात्तु भूयस्त्वात् ॥ ३-१-२ ॥

सर्वस्य त्रिवृत्करणेन त्र्यात्मकत्वात् भूतान्तरसंसृष्टा एवापो भूयस्त्वेनाप्शब्देनोच्यन्ते ॥

பொருளெல்லாம் மூன்றின் கலப்பு ஆதலால் மற்ற பூதங்களோடு கலந்த அப்புக்களை பெரும்பான்மையைக் கொண்டு அப்பு என்று கூறப்படுகின்றன.

### सू—प्राणगतेश्च ॥ ३–१–३ ॥

"प्राणमनूत्क्रामन्तं सर्वे प्राणा अनूत्क्रामन्ति" इति जीवेन सह इन्द्रियगतेः तदाश्रयत्वेन देहगमनं प्रतीयते ॥

ஜீவன் வெளியே போகும்போது இந்திரியங்கள் எல்லாம் அநுஸரித்துச் செல்கின்றன என்று ஜீவனோடுகூட இந்திரியங்களுக்கு கதி சொல்லப்படுகிறது. இந்திரியங்களுக்கு ஆச்ரயமாக தேஹமும் செல்லவேண்டியது அவச்யம்.

### सू—अग्न्यादिगतिश्रुतेरिति चेन्न भाक्तत्वात् ॥ ३–१–४ ॥

अग्निं वागप्येति, इतीन्द्रियाणामग्न्यादिगतिश्रुतेः न जीवेन गमनमिति चेत्, न—वागाद्यभिमानिदेवतासु भाक्तत्वात् वागादिशब्दानाम् । "ओषधीर्लोमानि" इत्यनपियद्भिः लोमादिभिस्सह पाठात् ॥

ஜீவன் இறக்கும்போது வாக்கு அக்நியை அடைகிறது. இது முதலான வாக்யங்களால் இந்திரியங்கள் அக்ந்யாதி தேவதைகளை அடைகின்


# अमृतांजनम्

# அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முதுமொழி கூறுகிறது.

"अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् ।"
"अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः ।"




தலைவலி, ஜலதோஷம், சுளுக்கு முதலான சகல நோய்களையும் தீர்க்கவல்ல ப்ரஸித்தமான லேபனம்—

## அம்ருதாஞ்சனம் லிமிடெட்

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

Registered No. M. 3778.

சீரும் சிறப்பும் செழித்துப் பெருமையாய் வாழ
அழகிய ஆபரணங்களை அணிவது அவசியம்.
ஆபரணங்களுக்கெல்லாம் அரசனாயிருப்பது
வைர நகையே.

சீமைக் கமலங்களைச் செம்மையாகத் தேடியணிபவரிடம் ஸ்ரீதேவி தானே வந்து தாண்டவமாடுவள். இது விளம்பரக் கட்டுரையென்று வீணில் நினைத்துவிடாதீர்கள். வைரம் முதலிய இரத்தினங்களின் அருமை பெருமைகளைப் பகுத்தறிந்த பண்டைக் காலத்திய பண்டிதோத்தமர்கள் நிர்ணயித்து நிரூபித்துள்ள வசனங்களையும் வாசித்துப் பாருங்கள்.

षड्भिर्वाष्टभिरस्रैर्यत् बहुभिर्वा समन्वितम् ।
अम्बुदेन्द्रधनुर्वारिधरं वज्रं प्रशस्यते ॥
वज्रस्य सर्वदा तादृग्गुणयुक्तस्य धारणम् ।
शोभाकरं श्रेयसां च साधकं दोषघातकम् ॥



"ஆறு பட்டைகள், எட்டு பட்டைகள், அநேகம் பட்டைகள் உள்ள வைரங்கள் குணத்தில் ஒன்றுக்குமேல் ஒன்று உயர்ந்தவை, நீர் கொண்ட மேகத்தில் தோன்றும் இந்திர தனுஸ்ஸுக்கு ஒப்பான நிறங்களோடுகூடி நிரம்ப நீரோட்டமுடைய வைரக்கல் வெகுப்பிரசஸ்தமானது. அவ்வாறு உயர் குணமுள்ள வைரத்தை எப்பொழுதும் அணிவதால் அழகும் ஒளியும் ஓங்கி வளரும்; சீரும் சிறப்பும் செழிக்கும்; பீடையும் பிணிகளும் பற்றறவே ஒழியும்."

உத்தம குணம் பொருந்திய வைரங்களை அணிபவருக்கு அவ்வித அழகையும் ஐச்வர்யத்தையும் அளித்திடுமென்பதை ஆற அமர யோசித்து அவ்வித வைரங்களை வாங்கியணிய முயலவேண்டும். அவ்வகை வைர நகைகளை நாகரிகமான மோஸ்தரில் நன்றாகச் செய்து நம்பிக்கைக்குப் பாத்திரமாய் பெரும் வியாபாரம் செய்பவர் ஸூராஜ்மல் கம்பெனியாரே.



SURAJMAL'S
The Jewellers
313 ESPLANADE, MADRAS.



Printed by M. Satyanarayana, at the Hindi Prachar Press, T. Nagar, and Published by V. Ananthachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras.



266

OFFICE OF THE ... 11 OCT 1939


# SRI VEDANTA DIPIKA


Vol. 28] SEPTEMBER 1939 [Part 9


# ஸ்ரீ வேதாந்த தீபிகை

பிரதி இங்கிலீஷ் ௴ 25உ வெளிவரும்

விளம்பரக் கட்டணைகள் :

மானேஜிங் எடிட்டருக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

பிரமாதி ௵ :: புரட்டாசி ௴


பத்ராதிபர்கள் :

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

வி. அனந்தாசாரியர் (*Managing Editor*)
கிருஷ்ணபுரம், கோடம்பாக்கம் Post, Madras.

○

உப-பத்ராதிபர்கள் :

வேதாந்த சிரோமணி T. வேணுகோபாலாசாரியர்

எ. ஸ்ரீநிவாஸராகவன், M.A., [மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை.]



CONDUCTED BY
SRI VAISHNAVA SIDDHANTA PRACHARA SABHA, Ltd.,
Vani Vilas, 4—5, Badriah Garden St., Park Town, Madras.

# THE
# MODERN HINDU HOTEL
## MADRAS

*(Registered No. 776 of 1927 under the Trade Mark Act.)*



"ARNI HOUSE"

**No. 6, HALLS ROAD, EGMORE.**

*The best equipped Hotel for Indians in India.*

WHOLESOME FOOD
SPACIOUS AND AIRY ROOMS
ELECTRIC LIGHTS AND FANS
SPECIAL BATHS WITH HOT & COLD WATER
ON THE BUS ROUTE

**HOTEL GUIDES MEET ALL TRAINS**

TELEPHONE No. 3325.


OFFICE ... 11 OCT 1939 ... MADRAS

## விஷயங்கள்.

பக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | வேண்டுதலின் வேதாந்தம்—*ஸம்பாதகர்* (V. V. S.) | .... | 213 |
| 2. | தேவாலயங்களின் மகிமை—*ஒரு ஆஸ்திகன்* | .... | 216 |
| 3. | ஸனாதன தர்மம்—*தி. ஈ. வீரராகவாசார்யர்* | .... | 218 |
| 4. | ராஜநீதியில் மதாசாரங்கள்—*ஒரு வைதிகன்* | .... | 220 |
| 5. | ஸ்ரீவைஷ்ணவமதமும் பஞ்சமஜாதியும்—*வி. அநந்தாசாரியர்* | .... | 222 |
| 6. | ஆதாரமற்ற ஆசாரங்கள்—*ஒரு விமர்சகன்* | .... | 223 |
| 7. | ப்ரபந்ந பதிவ்ரதா தர்மம்—*ஒரு சுத்த வைஷ்ணவன்* | .... | 224 |
| 8. | கோயில்களில் வழிபாடுகள்—*ஒரு தார்மிகன்* | .... | 226 |
| 9. | விச்வநாம ஸந்தேசம்—T. *ஸுந்தராசாரி* B.A., B.L. | .... | 227 |
| 10. | அர்ச்சகர்களும் புரோஹிதர்களும்—*ஒரு ஹிதைஷீ* | .... | 229 |
| 11. | துண்டு நீதிகள்—*ஸம்பாதகர்* | .... | 230 |
| 12. | மந்தாரவதியும் மூன்று காதலர்களும்—*லக்ஷ்மி அம்மாள்* | .... | 231 |
| 13. | புந்தல்குடி ராமஸ்வாமி ஐயங்கார் காலம் சென்றார் K. *ஸுதர்சநாசாரியர்* | .... | 232 |
| 14. | அறிவித்தல் | .... | 233 |
| 15. | ஸ்ரீபாஷ்ய முத்ரணம்; புஸ்தக விமர்சம் | .... | 234 |






ஆயுள், ஆரோக்கியம், அஷ்ட ஐஸ்வரியம்
இவற்றை முன் கூட்டி அறிவிப்பவர்

**புரொபஸர் முரளி**

(20-ம் நூற்றுண்டின் மேதை, சமூக
தீர்க்கதரிசி, வரப்பிரஸாதி)

**ரேகை சாஸ்திர ஜோதிஷ நிபுணர்**

B-1/192, ராயப்பேட்டை ஹைரோட், (*மார்க்கட் அருகில்*) *சென்னை.*

*விதியை மதியால் வெல்லலாம். ஆனால் விதி உங்களுக்கு என்ன வைத்திருக்கிறதென்பது தெரிய வேண்டுமல்லவா? தெரிந்து கொள்ளுங்கள்.*

# L. G. பெருங்காயம்

**हिंगु** அல்லது பெருங்காயம், உணவு பொருள்களுக்கு ருசியைத் தருவது மாத்திரம் அல்ல, பிரதிதினம் சாப்பிடக்கூடியதான ஔஷதமாயும் கருதப்படுகிறது. அடியில் கூறப்படும் குணங்கள் இதன் ஔஷதத் தன்மையை நன்கு விளக்கும். ராஜ நிகண்டு என்னும் ப்ராசீன வைத்திய சாஸ்திரத்தில் அடியில் கண்டபடி பெருங்காயத்தின் குணங்கள் வர்ணிக்கப்படுகின்றன. ஹ்ருதயத்திற்கு பலத்தைத் தரும். காரமாயிருப்பதால் உஷ்ண வீர்யமுள்ளது. வயிற்றில் உண்டாகும் கிருமிகளை போக்கும். வாயுவை கண்டிக்கும், கபத்தை தொலைக்கும், மலச்சிக்கலை நீக்கும், வயிற்று பொருமலை அகற்றும், சூலவியாதியை கொல்லும், நேத்திர ரோகத்தையும் போக்கும், குல்மம் என்னும் வியாதியை வேரோடு அறுக்கும்.

हृद्यं हिंगु कटूष्णं च क्रिमिवातकफापहम् ।
निबन्धाध्मानशूलघ्नं चक्षुष्यं गुल्मनाशनम् ॥

இக்குணங்களையெல்லாம் பெற்ற பெருங்காயம் எல். ஜி. குறியுள்ளதைத் தவிர உண்மையில் வேறு எதுவுமன்று. இதை கவனித்து எப்பொழுதும் காயம் வாங்குங்கள்.

**லால்ஜி கோது & கம்பெனி**
பிரபல பெருங்காய வியாபாரிகள்,
பம்பாய் சென்னை கும்பகோணம்

| | |
|---|---|
| **அபலா கல்பம்** | மாதவிடாய்க் காலத்தில் ஸ்திரீகளுக்குண்டாகும் "ப்ரதரம்" அல்லது "பெரும்பாடு" என்கிற ரக்தப்பெருக்கு, வெட்டைச் சூட்டினால் மர்ம ஸ்தானத்திலிருந்து வெண்மையான திரவப் பொருள் சிறுகச் சிறுக வெளிப்படுதல், கர்ப்பம் அடிக்கடி சிதறுண்டுபோதல் முதலிய கர்ப்பாசய சம்பந்தமான வியாதிகளை அறவே யொழிப்பதில் ஒப்புயர்வற்ற சக்தி வாய்ந்தது. 1 பாட்டில் விலை ரு. 2 8 0 |
| **ஸித்த கல்ப மகரத்வஜா** | நரம்புத்தளர்ச்சி, இளமைப்பருவத்திலுண்டான துர்பழக்கங்களினாலேற்படும் அநேக விதமான வியாதிகள், வீர்யக் குறைவு, ஹ்ருதயத் துடிப்பு, ரக்தக் குறைவு, இரத்த அசுத்தம் முதலானவைகளுக்கு "அபாரசக்தி வாய்ந்த டானிக்" "ஸர்வரோக நிவாரிணி" என்று ஆயிரக்கணக்கான வைத்திய நிபுணர்களால் சென்ற 25 வருடங்களாகப் போற்றப்படுகிறது. 60 மாத்திரை ரு. 10 30 மாத்திரை ரு. 5 |

தபால் பெட்டி 151 | மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி, லிமிடெட் | மதராஸ்



श्रीः

त्रिभुवनकमनं तमालवर्णं रविकरगौरवरांबरं दधाने ।
वपुरलककुलावृताननाब्जे विजयसखे रतिरस्तु मेऽनवद्या ॥

# ஸ்ரீ வேதாந்த தீபிகை

ஸம். 28. | பிரமாதி ஞூ புரட்டாசி மீ 12உ 25-செப்டெம்பர் 1939 | ஸஞ். 9


## வேண்டுதலின் வேதாந்தம்.

ஸம்பாதகர் (V. V. S.)

பகவத் ஸ்ருஷ்டியில் இருக்கிற ஆச்சர்யங்களைவிட விசேஷித்த ஆச்சர்யங்கள் இல்லையென்றே நிச்சயமாய்ச் சொல்லலாம். அவ்வித ஆச்சர்யங்களில் மனுஷ்யர்களாகிய நமக்கு அவ்வப்பொழுது மனதில் உண்டாகும் விருப்பம் வேண்டுதல் முதலான மனோபாவங்களின் வேதாந்தத்தைக் குறித்து நாம் தெரிந்து கொள்ளவேண்டியது அதிகமுண்டு. விஷயமோ பெரிது. ஆனால் அதைப் பற்றி சுருக்கி எழுதுவதும் சாத்தியம்.

மனுஷ்யக்குழந்தை பிறந்தவுடன் பேசமுடியாது. ஜாடை செய்யவும் தெரியாது. அழுவது ஒன்றே அதனுடைய பாஷை. பசி, தாகம் உண்டானால் அழுவது. வயிற்றில் அஜீர்ணத்தினால் நோவெடுத்தால் அழுவது. கொசு, எறும்பு கடித்தால் அழுவது. தாய் வரவேண்டுமானால் அழுவது. இவ்விதமாயெல்லாம் சிறு வயதில் மனுஷ்ய சிசுக்கள் தங்களுக்கு வேண்டிய காரியங்கள் யாவற்றையும் அழுதே சாதித்துக் கொள்ளுகின்றன. குழந்தை அஜீர்ணத்தால் அழுதால், பசியால் அழுகிறதென்று பால் போட்டும் தாயார்களும் அநேகர் உண்டு. அவ்வித தாயார்களுக்கும், ஓடி விளையாடும் சிறு பிள்ளைகளை மிரட்டி பயமுறுத்தும் தகப்பன்மார்களுக்கும், பாடத்தில் சந்தேகம் கேட்டால் அதிகப்ரசங்கி என்று அடிக்கும் உபாத்தியாயர்களுக்கும் ஒரு வித்தியாசமுமில்லை.

விருப்பமும் வேண்டுதலும் இருவகைப்படும். ப்ரக்ருதியில் உண்டாவது கெட்ட வழக்கங்களால் உண்டாவதன்று, துரப்யாசத்தினால் உண்டாகும் வேண்டுதலைப்பற்றி இப்பொழுது எழுதப் புகவில்லை. ப்ரக்ருதியில் தாமென முன்பாகும் விருப்பம் வேண்டுதலைப்பற்றியே எழுதப் புகுந்தோம்,

முதலில் நம்முடைய சரீரத்தைக் குறித்த சில விஷயங்களைப்பற்றி யோசிப்போம். நம்முடைய தேகத்தில் உண்ட உணவு ஜீர்ணமாகிவிட்டு தேகமாகிற தாசில் தேகத்திலிருந்து வெளிப்படும் அம்சங்கள் அதிகமாகிறபொழுது தேஹத்தினுடைய ஸம்ரக்ஷணைக்கு உணவு அவச்யமான காலம் வந்துவிட்டதென்று தெரிவிக்கும் சூசனையே வாசி யெனப்படும். அவ்விதமே நம்முடைய இரத்தத்தில் நீர், வியர்வை முதலானவைகளால திரவ பதார்த்தம் குறைவுபட அப்பொழுது நம்முடைய தேகம் தெரிவிக்கும் சூசனையே தாகம் எனப்படும். எப்படி அலாரம் கடியாரங்கள் குறித்த காலத்தில் மணியடித்துத் தெரிவிக்கின்றனவோ, அவ்விதமே நம்முடைய தேகத்திலும் உணவு வேண்டும்போது பசியும், தீர்த்தம் வேண்டும்போது தாக அலாரம் மணி யடிப்பதுபோல் தெரிவிப்பதாகும். இதனால் பசி யெடுத்தபோது சாப்பிட வேண்டுமென்பதும், தாக மெடுத்தபோது தீர்த்தம் அருந்த வேண்டுமென்பதும், அவச்யமென்று தெரியவருகிறது. அதைக்கொண்டே நாமனைவரும் பசி யெடுக்காத பொழுது சாப்பிடுவதும், தாக மில்லாதபோது குடிப்பதும் தேகத்திற்குத் தீமையையே உண்டாக்கக்கூடும் என்று நிர்த்தாரணம் செய்யக்கூடும். தினவெடுத்தால் அவ்விடத்தில் சொறிந்து கொள்ள வேண்டுமென்பது இயற்கையாய் நம்முடைய தேகத்தில் ஏற்பட்டிருக்கிறது. தினவெடுத்தவன் தானே சொறிந்து கொள்ளவேண்டுமென்பது தனக்கு ஒருவனுக்கே தெரியுமன்றி இதரர்கள் ஒருவருக்கும் தெரியாதல்லவா? சொறிந்து கொள்வதென்பது தினவுக்குக் காரணமானதை அப்புறப்படுத்தவும், சொறிந்து கொள்வதால் அவ்விடத்தில் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்து அப்புறப்படுத்தப்பட்ட காரணத்தால் ஏதாவது விஷமோ, விஷதுல்யமான அசுத்த பதார்த்தமோ தேகத்தினுள் பிரவேசித்து இருந்தபோதிலும் அதை வெளியிலோ தேகத்தினுள் ஏற்பட்டிருக்கும் சாதனங்களினாலோ அப்புறப்படுத்தலை சாதிக்கவேயாகும். அப்படி யிராவிட்டால் தேகத்தில் ஓரிடத்தில் ஒரு எறும்போ கொசுவோ கடித்துக்கொண்டிருந்தால், நமக்குத் தெரியாமலே அது கடித்துக் கொண்டேயிருந்து தேகத்தில் உபாதியை அதிகரிக்கச் செய்யுமல்லவா? இன்னம் ஜல, மல, விஸர்ஜனத்திற்கு ஆவச்யகதை நமக்குத் தெரியாவிட்டால் அவைகள் தேகத்தின் உள்ளேயே இருந்து நம்முடைய தேகம் முழுவதையும் கெடுத்து விடுமே. அவைகளை தத்கால நாகரீக ரீதியில் அடக்கிக் கொள்வது அநேக கெடுதிகளுக்கும் வியாதிக்கும் ஆஸ்பதமாகிறது. அதே விதமே உஷ்ண காலத்தில் குளிர்ந்த தீர்த்தமும் குளிர்ந்த காற்றும் வேண்டியிருக்கிறது. குளிர்காலத்தில் உஷ்ண தீர்த்தமும் உஷ்ணத்தைக் காப்பாற்றிக் கொள்ளக்



கூடிய போர்வைகளும் தேவையாயிருக்கின்றன. ஜ்வரம், அஜீர்ணம் முதலானதுகள் உண்டாயிருக்கும் காலத்தில் ருசியான அன்னங்களும் திகட்டிவேண்டாது வெறுக்கப்படுகின்றன. இவ்வுதாரணங்களினால் எல்லாம் ஏற்படும் தத்வம் யாதெனில் இயற்கையில் பகவானால் நமக்குக் கிருபையாய் அளிக்கப்பட்டிருக்கும் சரீரத்திலும், மனதிலும் வேண்டுதலும் வேண்டாமையும் நமக்குப் பரமஹிதத்தை சூசிப்பிக்கிறதற்காகவே ஏற்பட்டுள்ளன. ஆனால் இவ்விஷயத்தில் பரமஜாக்கிரதையுடன் இருக்கவேண்டிய அவச்யம் ஒன்றுண்டு. அது யாதெனில் எக்காரணத்தினாலாவது ஒருவனுக்கு துரப்பியாசம் நேரிட்டுவிட்டால் அந்த துரப்பியாசத்தினால் உண்டாகும் வேண்டுதலை மற்ற வேண்டுதல்போல் நமக்கு ஹிதமாகக் கருதக்கூடாதென்பதே. அதற்கு திருஷ்டாந்தம் ஒரு குடியனுக்கு மேலும் மேலும் குடித்துக்கொண்டிருக்க வேண்டுமென்று ஒரு விதமான தாகம் உண்டாகிறது என்கிறார்களே அதுதான். ஆதலால் நம்முடைய சரீரம், இந்திரியங்கள், மனசு, புத்தி இவைகள் துரப்பியாசத்தால் கெடாதவரையில் நம்மால் வேண்டுவன யாவும் நம்முடைய பரமஹிதத்துக்காகவே ஏற்படுத்தப்பட்டவை என்கிற வேதாந்தம். மனுஷ்யனுக்கு ஸ்திரீ விஷயத்தில் காமமும், ஸ்திரீக்கு மனுஷ்யன் விஷயத்தில் காமமும், அவ்விதமே பிரஜோத்பத்தியினால் மனுஷ்ய ஜாதி குறைவடையாமல் விருத்தியாவதற்கேயாம். தனத்தில் பேராசை உண்டாவதற்கும் காரணம், தனமும் ஒரு சக்தி விசேஷமானதாக மனுஷ்யனால் கருதப்படுகிறது. அவ்விதமே நல்ல யசஸ்ஸை வேண்டுமென்று ஆசைப்படுகிறவர்களுக்கும், ஆத்ம குணங்களின் அபிவிருத்தியை உத்தேசித்தே. பந்து மித்திரர்களிடத்தில் ஆத்ம பாவமும் விரோதிகளிடத்தில் த்வேஷமும்கூட இந்த தத்வத்தின் உட்கருத்தையே அனுசரித்ததாகும். இந்த வேண்டுதலின் வேதாந்த ரகசியத்தை நாம் அனைவரும் யோசித்து அறிந்து அதற்கு அனுகுணமாக நடந்துகொள்ள வேண்டிய தவச்யம். மனுஷ்யர்கள் யாவருக்கும் ஆநந்தத்தில் ஆவேசம் இருக்கிற ரீதியில் இந்த ஜீவகாலத்துக்குப் பிறகு நாம் பிரம்மாநந்தத்தைப் பெறவேண்டுமென்கிற அவாவும் ஆசையும் இந்த தத்வத்தை உணர்த்துவதாகும். இது நம்முடைய எல்லாக் காரியங்களிலும் அனுசரிக்கத்தக்கது. சில தேக தத்வத்துக்கு சில பதார்த்தங்கள் ருசிப்பதும், அவாவுடன் வேண்டுவதும் அந்த தேகத்தினுடைய தத்கால ஹிதத்தை உத்தேசித்தே யாகும்.

ஒரு குழந்தைக்கு சர்க்கரை பிடிக்கிறதென்றாலும், மற்றொரு குழந்தைக்கு நெய் வெண்ணெய் பிடிக்கிறதென்றாலும், அவை யெல்லாம் அந்தந்த தேகத்துக்கு அந்தந்த காலத்தில் வேண்டுபவைகளையே சூசிப்பிக்கும். அதனால் தான் இயற்கைக்கு விரோதமாக அடமாய் ஒரு காரியத்தையும் செய்யக்

கூடாது. ஒருவருடைய வழக்கம் காலையில் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்வதாக யிருப்பினும், ஜ்வரம் வந்திருக்கும்பொழுது அடாத்தாய் வழக்கம்போலவே ஸ்நானம் செய்வதென்பது இந்த சரீர தர்மத்துக்கு விரோதமான பரம அதர்மமே யாகும். அதே விதமே ஒருவன் அந்தக்கரணத்தில் ஒரு காரியம் கர்த்தவ்யமான தர்மமாகத் தோன்றும் பக்ஷத்தில் அதை மறுத்து அயலாருடைய ப்ரீதிக்காக வேறுவிதமாகச் செய்வது அதர்மந்தான் என்பதில் சந்தேகம் இல்லை. அதனாலேயே இவ்வித விஷயங்களை யெல்லாம் தீர்க்கமாய் யோசித்து நம்முடைய மனோவாக்குக் காயங்களாகிய த்ரிகரண சுத்தி யென்னும் ரீதியில் துரப்பியாசம் ஒன்றுமில்லாமல் பாதுகாக்கப்பட்டு வந்தால் அவைகளால் நமக்கு அவ்வப்பொழுது குசிப்பிக்கப்படும் குணதோஷங்களின் வித்தியாசத்தைக்கொண்டே கண்டுதெரி விடலாம்.

---

# தேவாலயங்களின் மகிமை.

ஒரு ஆஸ்திகன்.

இப்பரத கண்டத்தில் தேவாலயங்கள் சிறந்த தேசாலங்காரமாகும். மற்ற தேசங்களிலும் பற்பல தேவாலயங்கள் செல்வத்திலும் மகிமையிலும் மேன்மை பெற்றனவாயிருக்கின்றன என்பது உண்மையே. ஆனாலும் இவ்விந்தியாவிலுள்ள தேவாலயங்களின் மகிமை மிகச் சிறந்தது என்பதை விவேகிகள் எளிதில் அறியலாம். இதர தேசங்களில் ஜாதிமதக் கொள்கைகளுக்கும், ஜாதிமதச் சடங்குகளுக்கும் தேவாலயங்களுக்கும் நெருங்கின ஸம்பந்தமுண்டு. விவாஹாதி ஸம்ஸ்காரங்கள் நடக்க வேணுமானால் அவற்றை கோயில்களுக்குச் சென்று அவ்விடத்திலேயே நடத்தவேணும் என்று நியமம் இருப்பதாய் தெரியவருகிறது. இங்கு நமது தேசத்தில் அந்த நியமமில்லை. மதச்சடங்குகளுக்கு வேண்டிய தேவதாஸாந்நித்யத்தை எங்கே வேணுமானாலும் யார் வேணுமானாலும் ஸம்பாதித்துக்கொள்ளலாம். என்பது நம்முடைய முன்னோர்களின் கருத்து. ஆகையால் ஒரு இந்தியன் மதத்தில் அதிகப் பற்று உடையவனா யிருந்த போதிலும் கோயிலுக்குப் போகாமலே தனது ஸகல கர்மங்களையும் நடத்தலாம். ஆனால் தேவாலயங்களாலே நமக்கு என்ன அவச்யமான உபயோகம் என்றால் கேளுங்கள்— தேவாலயங்கள் விக்ரஹாராதனக் கொள்கையை ஆதாரமாகக்கொண்டு ஏற்பட்டவை. விக்ரஹாராதனங்களில் பற்பல பேதங்கள் உண்டு, க்ருஹார்ச்சை, க்ராமார்ச்சை, தேசார்ச்சை, இவை முதலியனவாம். க்ருஹார்ச்சை



யாவது ஒவ்வொரு வீட்டிலும் நடக்கவேண்டிய தேவதா பூஜை. இது அவச்யம் நடத்தியே ஆகவேண்டிய கார்யமாகும், அந்தந்த வீட்டின் யோக க்ஷேமாதிகளை அந்தந்த க்ருஹார்ச்சையை பூஜித்தும், அர்ச்சித்தும் ப்ரார்த்தித்தும் நிறைவேற்றிக்கொள்ளவேண்டியது. மோக்ஷ பர்யந்தமான ஸமஸ்த புருஷார்த்தங்களையும் இந்த க்ருஹார்ச்சையைக்கொண்டே பெறலாம். க்ராமார்ச்சையாவது ஒரு க்ராமத்துக்குப் பொதுவான தேவதை. ஒரு க்ராமத்தினுடைய க்ஷேமலாபாதிகளைப் பெறவேணுமானால் இந்த க்ராம தேவதையை வழிபாடு செய்து பெறலாம். இந்த கோயில் கார்யங்கள் க்ராமத்தினுடைய பொது ஜனங்களால் அளிக்கப்பட்ட த்ரவ்யங்களைக்கொண்டு நடத்தப்பட வேண்டியவை. இந்த பூஜையை பிராம்மணர், சூத்திரர், பஞ்சமர் முதலிய எல்லா ஜாதியாரும் செய்ய அதிகாரம் வாய்ந்தவர். ஆனாலும், எந்த ஜாதியினர் ப்ரதிஷ்டை, பூஜை, உத்ஸவம் முதலான வழிபாடுகளைச் செய்கின்றனரோ, அந்த ஜாதியின் வர்ணாச்ரம நிபந்தனைகளுக்கு உட்பட்டே வழிபாடுகள் நடைபெற வேண்டுவது உசிதம். ஒரு க்ராம நன்மைக்காக ஒரு பஞ்சமன் விக்ரஹாராதனையைச் செய்யலாம். அதற்கு பிராம்மணனும் பொருள் உதவி செய்யலாம். ஆனால் அப்படிப்பட்ட தைவங்களை பிராம்மணர் தொழுவது, சாஸ்திர ஸம்மதமாகாது. தைவத்துக்கும் ஜாதி வ்யத்யாஸமா? என்று மனம் உருகப் பேசுகிறார்களே. ந்யாயத்தையும் ஔசித்யத்தையும் பாருங்கள். அதுபோல் தேசார்ச்சையும் ஒரு தேசத்தின் நன்மைக்காக சிற்சில யோகீச்வர மகான்களாலும் அரசர்களாலும் உண்டாக்கப்பட்டு பூஜிக்கப்பட்டு வருமது. அதில் நடைபெறும் பூஜாக்ரமங்களும் எந்த ஆகமோக்த ரீதியில் செய்யப்படுகின்றனவோ, அந்த ஆகமங்களில் சொல்லப்பட்ட நியமங்கள் விடக்கூடாதவை. முன் காலங்களில் ஜனங்கள் தேச க்ஷேமத்துக்காகவும், அநாவ்ருஷ்டி முதலான ஈதிபாதைகளைத் தவிர்ப்பதற்காகவும் யாகங்களையும், யாகம் செய்ய அதிகார மில்லாதவர் இந்த்ரத்வஜோத்ஸவம் முதலான திருவிழாக்களையும் செய்து வந்தனர் இக்காலத்தில் அந்த வழக்கம் மறைந்துபோய் எல்லா நன்மைகளையும் தேவாலயங்களைக்கொண்டே பெற முயலுவது வழக்கமாய் ஏற்பட்டது. ஆகையால் இப்போது காணப்படும் பெரிய தேவாலயங்கள் எல்லாம் நமது தேசத்தின் பொது நன்மையை ஸம்பாதித்துக் கொள்ளுவதற்கு இன்றியமையாத ஸாதனமாகும். இதை அரசர்களும் மற்ற ப்ரபுக்களும் வைதிகர்களும் ஸாமாந்ய ஜனங்களும் தங்களால் இயன்ற வரை உதவிபுரிந்து பாதுகாக்கவேணும். அதனால் நமது தேசம் சுபிக்ஷமாய் வாழும் என்பதில் ஸம்சயமில்லை.

---

# ஸனாதன தர்மம்.

தி. ஈ. வீரராகவாசார்யர், திருவாதி.

அபௌருஷேயமாயுள்ள வேதத்தினாலும் அதை அனுஸரித்து ஸ்ம்ருதிகளாலும் ஸகல க்ஷேமஸாதனமாக விதிக்கப்பட்டு மஹா ஜனங்களால் தங்களது அனுஷ்டான பர்யந்தமாய் ஆதரிக்கப்பட்டிருக்கும் நமது ஸனாதன தர்மம்.

அவ்வோ மதஸ்தர்களாலே லோகஹிதம் என்பதாகக் கண்டு பிடிக்கப் பட்டிருக்கும் மற்ற தர்மம். இதுவோ ஒருகால விசேஷத்தில் ஒருவராலே ஏற்படுத்தப்பட்டதாக இராமல் அனாதியான வேதத்தினால் விதிக்கப்பட்டுளது. ஆகவே இந்த தர்மத்திற்கு புருஷதோஷம் ஒன்றும் சொல்லுவதற்கில்லை.

வேதத்தை பகவான் உண்டுபண்ணார் என்கிறவர்களும் உலகத்தின் க்ஷேமத்திற்கே ஈச்வரனால் வேத மூலமாய் தர்மம் ப்ரவர்த்திக்கப்பட்டது என்று கொள்ளுகிறார்கள்.

பரலோகம் ஒன்று உண்டு. அவரவர் புண்ய பாபங்களுக்கு ஏற்றவாறு அந்த லோகத்தில் பலனை அனுபவிக்க வேண்டும் என்பது ஆஸ்திகர் எல்லோருடையவும் கொள்கை.

அந்த பரலோகத்தை நாம் சாஸ்திரங்களைக்கொண்டே இசைய வேண்டுமே அல்லது இதில் சிறிதேனும் ப்ரத்யக்ஷமோ யுக்தியோ கிடைக்காது.

ஆகவே அதற்கு இன்ன வழிதான் ஸாதனம் என்பதையும் அந்த சாஸ்திரங்களைக்கொண்டே அறியவேண்டும். அந்த வழியே ஸனாதன தர்மம்.

இந்த தர்மத்தை தாங்கள் அனுஷ்டித்தும் அனுஷ்டிப்பித்தும் வருகின்றதற்குக் காரணம் மேலே காட்டிய வழி இதுவே என்கிற தீர்மானமே அன்றி ஆலஸ்யத்தினாலோ வேறு கதி யில்லாமையினாலோ க்யாதி பூஜை முதலியவற்றில் ஆசையினாலோ இதை மஹனீயர்கள் அனுஷ்டிக்கவில்லை.

சரீர ச்ரமம் அர்த்தவ்யயம் இவற்றைப் பொருள்படுத்தாமல் கர்மானுஷ்ட்டானத்தைச் செய்ய விதிக்கிறது நமது சாஸ்த்ரம். ஆகவே ஆலஸ்யத்தினால் இதைப் பின்பற்றுவதாகக் கொள்ளுவதில்லை.

பிற மதத்தில் சேருவதற்கு கதியில்லாமல் இம்மதத்தைப் பெரியோர்கள் தழுவினார்களில்லை. மதாந்தரஸ்தர் கொண்டாடக் கூடியவர்களே இம்மதத்தை அனுஷ்டிப்பவர்கள்.



ஆஹாரம் முதலியவற்றில் நியமத்தை விதிக்கிறது நமது சாஸ்த்ரம். ஆகவே ராகத்தினால் இதைப் பின்பற்ற முடியாது. ஆசார்யன் மாதா பிதாக்கள் பாகவதர்கள் இவர்களிடம் பக்தி செய்ய விதிக்கிறது நமது சாஸ்த்ரம். ஆகவே யதேச்சையாக இருக்கலாம் என்கிற எண்ணத்தினால் இதைப் பின்பற்றமுடியாது.

இவ்வாறான வழியில் யாதொரு விதமுமான த்ருஷ்டபலனும் இல்லாதிருக்கச்செய்தே பரலோக பயத்தினாலேயே சாஸ்திரப்படி நடக்க வேண்டியிருக்கிறது.

“ नास्ति चेत् नास्ति नो हानिः
अस्ति चेत् नास्तिको हतः” ॥

என்று ஒரு வசனம் உண்டு. இதன் கருத்தாவது—சாஸ்திரத்தில் சொல்லியதை நம்பி பரலோகத்தை இசைந்து அதற்கு அந்த சாஸ்திரத்தில் விதித்துள்ளபடி தர்மத்தை அனுஷ்டிப்பதே எந்த வழியிலும் சிறந்தது. ஏனெனில் பரலோகம் இல்லை என்றாலும் நமக்கு யாதொரு நஷ்டமும் இல்லை. அது உண்டு என்று ஸித்தித்தால் நாஸ்திகன் அழிந்துவிடுவது உண்மை என்பது.

ஆகவே எவ்வழியிலும் சாஸ்திர வழியே நமக்கு ஹிதம். மஹரிஷிகள் ஆழ்வார்கள் ஆசார்யர்கள் பின்பற்றிய மார்க்கம். காமத்தினாலோ பயத்தினாலோ லோபத்தினாலோ அல்லது ப்ராணனைக் காப்பாற்ற வேண்டியதற்காகவோ தர்மத்தைக் கைவிடக்கூடாது என்கிறது ப்ரமாணம். இப்படிப்பட்ட ஸனாதன தர்மமானது ராஜரிஷிகள் என்று கொண்டாடப்பட்ட மஹாராஜர்களால் ஆதரிக்கப்பட்டு வந்தது.

பிறகு அவ்வளவு ஆதரவு இராமலிருந்தும் அவரவர்கள் தர்மம் அனுஷ்டிப்பதில் யாதொரு தடையும் இராமலிருந்து வந்தது. இப்பொழுது கால க்ரமத்தில் பல ஆபத்துக்கள் ஒன்றன்பின் ஒன்றாக நேரிடுகின்றன என்பது ப்ரஸித்தம்.

காலத்தின் கொடுமையினால் ஏற்படும் ஆபத்தர்மத்தை சாஸ்த்ரீய ஸரணியில் எல்லோரும் கட்டுப்பாடாக அனுஷ்டிக்கவேண்டும். ஆனால் சாஸ்த்ர ஸம்மதம் எந்த வழியிலும் இல்லாதவற்றில் எவரும் ஒன்றும் செய்வதற்கில்லையே என்று மஹான்கள் சிலர் தங்களை மாத்திரம் ஒரு ரீதியில் ஸம்ரக்ஷணம் செய்துகொண்டு மற்றவர்கள் விஷயத்தில் உபேக்ஷை செய்வது கூடாது.

ஆகவே ஆபத்துக்கள் நேர்ந்தபிறகு அவை எவ்விதத்திலும் ஸமாதானம் செய்ய முடியாவிடில் மேலே எல்லோரும் எவ்வழி நடப்பது என்பதை அம்மஹான்களே காட்டவேண்டும். அப்படி மஹான்கள் எல்லோரும் சேர்ந்து தர்ம நிர்ணயம் செய்வது சாஸ்த்ரானுமதமாகும்.

" धर्मशास्त्ररथारूढाः वेदखड्गधरा द्विजाः ।
क्रीडार्थमपि यत् ब्रूयुरेष धर्मस्सनातनः" ॥

என்கிறபடியே தர்ம சாஸ்திரங்களாகிற ரதத்தின் மேலிருந்துகொண்டும் வேதங்களாகிற கத்திகளை தரித்துக்கொண்டும் இருக்கும் பிராம்மணர்கள் சொல்லுவது ஸனாதன தர்மமாகுமன்றோ.

ஆகவே தத்காலம் நேரும் ஆபத்துக்களை நிவ்ருத்தி செய்யவேண்டிய முயற்சியோடு அப்ரதிஹதமாயுள்ள பகவத் ஸங்கல்பத்தினாலே அபரிஹார்யமான ஆபத்து நேரிட்டிருப்பதிலிருந்து ஒரு கட்டுப்பாடான வழியில் சாஸ்த்ரரீதியில் எல்லோரும் தப்பித்துக்கொள்ளும் வழியை வ்யவஸ்தை செய்விக்கவேண்டியது வைதிகதர்மாபிமானிகளான மஹான்களின் கடமை. வித்வத் பரிஷத்து மூலமாக நிர்ணயம் செய்வது எல்லோரும் அங்கீகாரம் செய்யக்கூடியதாகும்.

---

## ராஜநீதியில் மதாசாரங்கள்.

(ஒரு வைதிகன்.)

ராஜாங்க நீதியில் பலவித பிரிவினைகள் உண்டு. முக்கியமாய் ஜனங்களுடைய மனோபாவத்துக்கும் அரசனின் குண குணங்களுக்கும் தக்கபடி அரசு வெவ்வேறு விதமாய் பிரியும். மிகச்சிறப்பு வாய்ந்த அரசாங்கத்துக்கு அடையாளம் என்னவென்றால் படிப்பாளிகளான ஜனங்களுக்கு செல்வாக்கு அதிகமாய் அளிக்கப்படுவதும், கூடியவரை ஜனங்களுக்கு ஸ்வதந்த்ர நிலைமை கொடுக்கப்படுவதுமே யாகும். நீதி என்னும் பதத்துக்கு இதுவே பொருள் என்று கூடச் சொல்லக்கூடும். ஒவ்வொரு மனிதனும் அநாவச்யகமான நிர்பந்தங்களுக்கு உட்படாமல் தனக்குரிய ஸ்வயேச்சையைச் செலுத்தி அதனால் களிப்புற்று வாழ்வதையே கருதுகிறான். ஒரு வஸ்துவை விலை கொடுத்து வாங்குகிறோம். அதன் பொருள் என்னவென்றால் பராதீனமாயிருக்கும் பொருளை நமது இஷ்டப்படி விநியோகிக்கத் தகுதியுள்ளதாகச் செய்துகொள்ளுகிறோம். இக்கருத்தையே வெளிப்படுத்தி மனு பின்வருமாறு கூறுகிறார். பரவசமானதெல்லாம் துக்கம், ஸ்வாதீனமானதெல்லாம்



ஸுகம், ஸுகதுக்கங்களுக்கு இதுவே சுருக்கமான அடையாளமாகும் என்று. இதில் மற்றொரு விஷயமும் கவனிக்கத்தக்கதாகும். ஜநஸமூகத்தில் இருந்து வாழவேண்டிய நாம் கூடியவரை பிறருக்குப் பீடையின்றி நமது கடமைகளைச் செய்யவேணும். இது மாத்திரமும் போதாது. பிறருடைய நன்மையையும் கருதவேணும். இவ்விஷயங்களை நன்கு கவனிப்பது எளிதான காரியமல்ல. இதற்காகவே பற்பல சாஸ்திரங்கள் தோன்றியிருக்கின்றன. அந்த சாஸ்திரங்களை நம்பி நமது க்ருத்யங்களை செய்து வந்தோமானால் நமது செய்கைகளில் யாதொரு குற்றமும் இருக்க இடமில்லை. இதைக் கருதியே ஸ்ரீகீதாசார்யன் கீதையில், கார்யாகார்யங்களைத் தீர்மானிப்பதில் சாஸ்திரமே ப்ரமாணமாகும். சாஸ்திர விதியில் கூறப்பட்டதை அறிந்து உனது கடமைகளைச் செலுத்தவேணும் என்று அருளிச் செய்திருக்கிறார். இதற்காக சாஸ்திரங்களை ஆராய்ந்து பார்க்கும்போது, க்ரியைகளில் பற்பல பேதங்கள் தோன்றுகின்றன. அவையெல்லாம் அநுஷ்டிக்கத் தக்கவையே. ஆனால் அவற்றுள் ஒன்றோடொன்று விரோதம் தோன்றும்போது தன்னுடைய நிலைமைக்கு ஏற்றபடி ஒன்றைக் கைப்பற்றி மற்றதை விடவேணும். ஜாதி தர்மங்களிலும் மத தர்மங்களிலும் பற்பல வேற்றுமைகள் உண்டு. அவை ஒன்றோடொன்று கலக்குமானால் சச்சரவு உண்டாகும். அவை ஒன்றோடொன்று கலக்காமல் தனித்தனியே அநுஷ்டிக்கப்பட்டு வரும்படி அரசர் கவனிக்கவேணும். முன் காலங்களில ஒன்றோடொன்று விரோதம் வாய்ந்த பல மதங்கள் ஒரு நாட்டிலோ, ஒரு நகரத்திலோ இருந்ததாகத் தெரியவில்லை. அப்படிப்பட்ட ஆசாரங்களுக்கு க்ராம நகராதிகளில் ப்ரத்யேகமான இடங்கள் அளிக்கப்படவேணும். அரசர் ஒரு மதத்திலோ ஒரு ஜாதியிலோ பக்ஷபாதம் வஹிக்கக்கூடாது. அவரவருடைய ஜாதி தர்மங்களையோ அவரவருடைய மத தர்மங்களையோ நல்ல நிலையில் நடத்தும்படி உதவி புரியவேணும். மத விஷயத்தில் ராஜநீதி தலையிடுவதில்லை என்று விக்டோரியா மஹாராணி செய்த ப்ரதிஜ்ஞையை தத்காலம் சக்கிரவர்த்தி காப்பாற்றவேண்டாமா? ராஜநீதியின் நிலைமை காலாநுகுணமாக மாறிக்கொண்டேதான் வரும் என்றால் இவ்விஷயம் அப்படி மாறக்கூடியதல்லவென்று ப்ரஸித்தமானதே. ஜனங்கள் அனைவரும் சேர்ந்து காங்க்ரஸுக்கு அதிகாரம் கொடுத்துவிட்டதால் இந்த கோபத்தை மனதில் வைத்துக்கொண்டு காங்க்ரஸ்காரருடைய கொடுஞ்செயலை உபேக்ஷிக்கிறார் போலும். மேலும் பற்பல ஸமூகத்தினரைக்கொண்டு பற்பல மதச்சடங்குகளை நடத்தி வைப்பது தேசத்தின் பொது நன்மைக்கு இன்றியமையாத காரணமாகும். மதச்சடங்குகள் பெரும்பாலும் தேவப்ரார்த்தனா ரூபமாய்

முடியும். யாரேனுமொருவன் தேவப்ரார்த்தனையைச் செய்தாலும் அதனால் பொது நன்மை பயக்கும் என்பதில் ஸம்சயமில்லை. மதச்சடங்குகளில் பல விதங்கள் உண்டு. அவற்றுள் வேதம் புராணம் ஆகமம் இவற்றில் கூறிய வகை மிகச் சிறந்தது என்று அந்ய மதஸ்தராலும் கொண்டாடப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட சடங்குகளைச் செய்ய அவற்றைக் கற்றறிந்தவரே அதிகாரியாவர். ஆகையால் வித்யை கற்பதையும், மந்த்ர ஜபாதிகளையும் தொழிலாகக்கொண்டு வம்சபரம்பரையாய் மேற் சொன்ன செயல்களை நடத்திவரும் வகுப்பினரைக்கொண்டு மதக்ரியைகளைச் சேர்ந்த தேவதாராதனங்களைச் சரிவர நடத்தி வந்தால் உலகத்தில் காலத்தில் மழை பெய்தும் கொடிய வியாதிகள் தோன்றாமலும், ஜநங்கள் அனைவரும் இன்பமுற வாழலாம்.

---

# ஸ்ரீவைஷ்ணவ மதமும் பஞ்சம ஜாதியும்.

(வி. அநந்தாசார்யர்.)

ஜாதி வித்யாஸத்தை ஒப்புக்கொண்ட வைதிக மதத்துக்குள் ஸ்ரீவைஷ்ணவ மதமே பஞ்சம ஜாதியின் தாழ்மையை விலக்கி உயர்ந்த நிலைமைக்குக் கொண்டு வருவதற்கு அநுகூலமானது. அத்வைதம், த்வைதம் முதலான பல மதங்களில் ஜந்மத்தால் ஏற்பட்ட நிலைமையை சரீர நாசத்தாலே போக்க முடியுமேயல்லாமல் வேறு மார்க்கம் இருப்பதாகத் தெரியவில்லை. ஸ்ரீவைஷ்ணவ மதத்திலோவெனில் பஞ்சம ஜாதியில் ஜநித்தவர்களுக்கு ஸ்ரீவைஷ்ணவ தீக்ஷை செய்துவைக்க அநுமதி உண்டு. பஞ்சஸம்ஸ்காரத்தால் தீக்ஷை பெற்று ஸ்ரீவைஷ்ணவ மந்த்ரங்களைப்பெற்று ஸதாசாரத்தில் நிஷ்டையுடையவனாகில் ஸ்ரீவைஷ்ணவன் என்ற ரீதியில் ப்ராம்மணரும் சூத்திரரும் பஞ்சமரும் ஒரே வகுப்பினராகக் கொள்ளவேண்டியது. ஒரு பஞ்சமன் பஞ்ச ஸம்ஸ்காரம் பெற்று ஸதாசார ஸம்பந்நனாகிவிட்டால் அவனை ஸாமாந்ய சண்டாள ஜாதியிலிருந்து விலக்கி அவனுக்கு தனிப்பட்ட உயர் நிலைமை அளிக்கவேண்டியது அவச்யம். ஜாதி வ்யவஸ்தையால் ஏற்பட்ட சாஸ்திர மர்யாதையைக் கைவிடாமல் மத விஷயத்தில் அவனுக்கு உயர்ந்த பதவி அளிக்கப்படவேண்டியது அவச்யமே. அந்த பதவி எப்படிப்பட்டது என்றால், "**विष्णवालयसमीपस्थान् विष्णुसेवार्थमागतान् चण्डालान् पतितान्वापि स्पृष्ट्वा न स्नानमाचरेत्**" என்று சொன்ன ரீதியில் அவனோடு நெருங்கி வர்த்திக்கலாம். பாவசுத்தியும் சரீர சுத்தியும் கொண்ட பஞ்சமன் தனக்கு ஸ்ரீவைஷ்ணவத்வம் வேணும் என்று அபேக்ஷிப்பானாகில் அவனை உபேக்ஷிக்



காமல் அவனுக்கு பஞ்ச ஸம்ஸ்காராதிகளை செய்வித்து முமுக்ஷுவாக்கி ப்ரபந்ந கோஷ்டியில் ப்ரவேசிப்பித்து அவனோடுகூட பகவத்பாகவத கதாஸம்லாபாதிகளால் ஸத்காலக்ஷேபம் செய்து அவனோடு நெருங்கி கூடி வர்த்தித்தல் பரமதர்மமாகும். ஒன்றுக்கொன்று விருத்தமான பற்பல சாஸ்திர வசநங்களை அநுஷ்டாநதசைக்குக்கொண்டு வரும்போது, பலவித மீமாம்ஸா ந்யாயங்களின் ஸஹாயத்தை நாடவேணும். அவற்றுள் ஸாமாந்ய விசேஷ ந்யாயம் முக்கியமானது. வசநங்களில் இது ஸாமாந்யம் இது விசேஷம் என்று நிர்ணயிப்பதற்கு நம்முடைய வித்யாப்யாஸத்தால் ஸம்ஸ்கார மடைந்தும் நிஷ்கல்மஷமாயும் பூததயை வாய்ந்ததுமான பண்டிதர்களின் அபிப்ராயமே முக்கிய ப்ரமாணம் என்னக் குறையில்லை. இப்படி ஒப்புக்கொண்ட பிறகு பஞ்சமர்களுக்கு தூர பரிஹரணீயத்வம் சொல்லும் "யுகம் ச த்வியுகம் சைவ" என்ற வசநம் ஸாமாந்ய வசநமாயும், "விஷ்ண்வாலயஸமீபஸ்தாந்" என்பது விசேஷ வசநமாயும் ஏற்படுகிறது. இப்படி ஒப்புக்கொள்ளாவிட்டால் தத்காலம் ரதாகர்ஷணாதிகளில் பஞ்சமர்களுக்கு ஸ்பர்சாதிகளை அநுமதித்திருப்பது அசாஸ்திரீயமாய்த் தீரும். நம்மால் ஆராதிக்கப்படும் பகவானுடைய ஸாந்நித்ய மஹிமையால் அஸம்ஸ்க்ருதசரீரனான பஞ்சமனுக்குத் தீண்டாமை விலகிப் போகும்போது, ஸ்ரீஸுதர்சந ரூபியான பகவான் தனக்குத் திருகோயிலாகக் கொண்டருளின அவனுடைய சரீரத்துக்குத் தீண்டாமை நீங்கிவிடும் என்பதில் ஸம்சயம் என்ன? சரீர முள்ளளவும் ஜாதி போகாது என்பது உண்மையே. ஸச்சூத்ரத்வப்ரயுக்தமான உபஸர்ப்பணார்ஹத்வம் வந்தே தீரும். வேதாத்யயநத்தில் அதிகார மில்லாமை முதலான ஜாதிப்ரயுக்தமான வ்யவஸ்தை குலையாமலே பஞ்சம ஜாதிக்கு மதாசாராநுஷ்டாநத்தில் உயர்ந்த நிலை கொடுப்பது சாஸ்த்ராநுமதமாகும்.

---

# ஆதாரமற்ற ஆசாரங்கள்.

(ஒரு விமர்சகன்)

திருப்பதி முதலான கோயில்களுக்குச் சென்று முடி வாங்காத குழந்தைகள் அரிது. இந்த ஆசாரத்துக்கு ஆதாரம் என்னவென்பதை ஆராய்ந்து பார்க்க யாரும் முன் வந்ததாகத் தெரியவில்லை. பண்டிதர், பாமரர், ஏகாந்திகள், பரமைகாந்திகள் அனைவரும் இந்த குருடர் பரம்பரையால் கையாளப்பட்ட ஆசாரத்துக்கு இணங்குகின்றனர். இது போலவே க்ருஹ ப்ரவேச ஸமயத்தில் பூஷணிக்காய் உடைப்பது, சில விவாஹாதி ஸமயங்களிலும் சூறைத்தேங்காய் உடைப்பது. இதுக்கெல்லாம் மூலகாரணம் என்ன

வெனில்—க்ஷுத்ர தேவதைகளை ஆராதித்து, அல்ப பலன்களை விரும்பும் ஸாமான்ய ஜநங்கள் க்ஷுத்ர தேவதைகளுக்கு ஜீவபலி கொடுப்பது வழக்கம். இதுக்கு சாஸ்திரங்களில் ஆதாரம் கிடையாது. க்ஷுத்ர தேவதைகளுடைய ஆராதந க்ரமத்தில் ஸமயாசார பரம்பரையில் நடைபெறுவதே இதுக்கு ப்ரமாணம். இந்த ஜீவ ஹிம்ஸைக்கு ப்ரதிநிதியாகவே சில அநுகல்பங்கள் உண்டு. நிர்ணயஸிந்துவில் தசஹரா என்னும் தேவதையை ஆராதிக்கும் விதி கூறும்போதும், விஜயாதசமீ பூஜையிலும், சதசண்டீ, ஸஹஸ்ர சண்டீ பூஜையிலும் ஜீவஹிம்ஸையைக் கொண்டு தேவதா பூஜை விதிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஆதாரம் ருத்ரயாமளம், டாமரதந்த்ரம், காலிகா புராணம் முதலான ஸாமாந்ய சாஸ்திரங்கள் ஆகும். இவை உத்தமாதிகாரிகளுக்கு அநுபாதேயம். மேற்சொன்ன சாஸ்திரங்களிலே, ஜீவஹிம்ஸைக்கு ஜந்துக்கள் அகப்படாவிட்டால் கூச்மாண்டம், நாளிகேரம் இவற்றை பேதித்தோ சேதித்தோ பூஜிக்கவும் என்று விதிக்கப்பட்டது. அதிலும் ப்ராம்மணன் கூச்மாண்டாதிகளை சேதிக்காமலே பூஜிக்கவும் என்றும், அல்லது மாஷாந்நத்தைக் கொண்டு பூஜிக்கலாம் என்னும் விதி காணப்படுகிறது. இவை யெல்லாம் ஸாமாந்யாதிகாரி விஷயம் என்று நன்றாய் தெரியவருகிறது. இந்த பலிதாந ஸம்ப்ரதாயம் கதானுகதிகரீதியில் பரவி, மநுஷ்ய பலியிலும் இறங்கி, அதோடு நிற்காமல் தன்னுடைய புத்ராதிகளையும் பலி கொடுக்கும் வழக்கம் ஏற்பட்டு அதுக்கு ப்ரதிநிதியாகத் தலைமுடியை அர்ப்பணம் செய்யும் வழக்கம் வந்தது. திருவேங்கடமுடையானை கார்யகர்மாதிகாரிகளான ஸாமாந்ய ஜநங்கள் தொழ முன்வந்து இந்த வழக்கத்தை ஊன்றச்செய்து விட்டார்கள். இதை சாஸ்திரஜ்ஞான பரமைகாந்திகளும் ஆராய்ந்து பாராமல் ஆபாதப்ரதீதியைக் கொண்டு பகவத் ஸம்பந்தமான பக்தி கார்யம் என்ற ஆகாரத்தைக்கொண்டு அநுமதித்து வருகிறார்கள். சிற்சில ஸமயங்களில் சூறைத்தேங்காய் உடைப்பதும் இதைப்போன்றதே. ஆகையால் இந்த ஆசாரங்கள் எல்லாம் உத்தமாதிகாரிகளுக்குத் தகாதவை என்பது நன்கு விளங்கும். விசேஷித்து ஸ்ரீவைஷ்ணவ பரமைகாந்திகளுக்கு ஸர்வதா அநுபாதேயம் என்பதில் ஸம்சயமில்லை.

---

## ப்ரபந்ந பதிவ்ரதாதர்மம்.

(ஒரு சுத்தவைஷ்ணவன்.)

வித்வான்கள் அளவற்ற சாஸ்திரங்களை இயற்றினர். அவற்றில் ஜாதியும் மதமும் உட்புகுந்து ஒன்றோடொன்று ஒவ்வாமல் போராடுகின்றன,



58623

சிலர் மத தர்மத்தைப் புறக்கணித்து ஜாதி தர்மத்தை ஆதரிக்கின்றனர். வேறு சிலர் ஜாதி தர்மத்தை அநாதரித்து மத தர்மத்தை மேற்கொள்கின்றனர். இவ்விஷயத்தைச் சேர்ந்ததான ஒரு ஆசாரத்தைப்பற்றி ஆராய்வோம். விதவா ஸ்திரீகளில் சில வகுப்பினர் கேசவபநம் செய்கின்றனர். சிலர் செய்வதில்லை. ஒரே குடும்பத்தில் இந்த ஆசார பேதத்தைக் காண்கிறோம். இதில் ஒன்றை ஸதாசாரம் என்றும் மற்றொன்றை அஸதாசாரம் என்னும் சொல்ல வழியில்லை. இரண்டையும் ஸதாசாரமென்றே கொள்ளலாம். ஆனாலும் அவரவருடைய மதக் கொள்கையின் தாரதம்யத்தை ஆதாரமாகக்கொண்டு இவ்விரண்டு ஆசாரங்களும் புறப்பட்டிருக்கின்றன. அதாவது-தாம்பத்யம் சுருக்கமாய் இரு வகைப்படும். அப்ரபந்நருடைய தாம்பத்யம், ப்ரபந்நருடைய தாம்பத்யம் என்று. ஒரு, ஸ்திரீ ப்ரபந்நையாய் விட்டால் அவளுடைய தாம்பத்ய தர்மம் விலக்ஷணமாகும். அப்ரபந்நையாயிருந்தால் அது ஸாமாந்யாதிகாரமாய் நிற்கும். முதன் முதல் முடிவாங்குதலின் தத்வத்தைச் சற்று விசாரிப்போம். மநுஷ்யர்களுக்கு தேவபூஜை ஸர்வாபிமத ஸாதநம். தேவபூஜையில் ஆத்மார்ப்பணம் முக்கியமான அங்கம். ஸ்ரீபகவத் கீதையில் கூறப்பட்ட த்யாக ரீதியில் இந்த ஆத்மார்ப்பணம் மாநஸிகமாகச் செய்யப்பட்டு பூஜை முடிக்கப்படுகிறது. இது விலக்ஷணாதிகாரி விஷயம். ஸாமாந்யாதிகாரிகள் இந்த ஆத்மார்ப்பணத்தை ஸாக்ஷாத் சரீரத்யாகத்தையே செய்து தலைக்கட்டவேணும் என்று அபிப்ராயப் படுகின்றனர். ஸாக்ஷாத் சரீரத்யாகத்துக்கு ப்ரதிநிதியாய் ஆடு முதலான ஜந்துக்களை விலைக்கு வாங்கி அவற்றை பலியாகக் கொடுத்து பூஜையை முடிக்கும் வழக்கம் ஏற்பட்டது. ஜந்து ஹிம்ஸை மதக் கொள்கைக்கு விரோதமானது பற்றி தனது சரீரத்தை அர்ப்பணம் செய்வதற்குப் பதிலாய் தலைமயிர் கொடுக்கும் வழக்கம் வந்தது. ஆகையால் ஸ்திரீகள் சிரோமுண்டந ஸம்ப்ரதாயம் பர்த்தாவுடன் அநுமரணத்துக்கு ப்ரதிநிதியாக வந்தது என்று கொள்ளக்கூடும். இந்த அநுமரண ஸம்ப்ரதாயம் ஸாமாந்ய ஸ்திரீ தர்மம். ப்ரபந்நையான ஒரு ஸ்ரீவைஷ்ணவ ஸ்திரீக்கு அநுமரணம் செய்யத்தக்கதன்று. ஏனெனில்—ஒரு ஸ்திரீ மரணத்துக்குப் பிற்பாடும் பர்த்ரு ஸாயுஜ்யத்தை விரும்பி, அதுக்கு ஸாதநமாக அநுமரணத்தைச் செய்ய வேண்டியவள் ஆகிறாள். ப்ரபந்நையான பதிவ்ரதா ஸ்திரீக்கு பர்த்ரு ஸாயுஜ்யம் உத்தேச்ய மில்லை. பரமாத்ம ஸாயுஜ்ய மல்லவோ உத்தேச்யமாவது. புருஷனுக்கும் இந்த ந்யாயமுண்டு. பார்யாஸாயுஜ்யத்தை லோகாந்தரத்திலும் விரும்புமவன் அஜமஹாராஜனைப்போல் அநுமரணம் செய்யக் கடமைப்பட்டவன். ஆகையால் ப்ரபந்ந பதிவ்ரதா ஸ்திரீக்கு அநு

மரணமும் தத்ப்ரதிநிதியான சிரோமுண்டநமும் ப்ராப்தமாகாது. இப்படிப்பட்ட சிரோமுண்டநத்தால் அவருடைய அப்ரபந்நாதிகாரமே வெளிப்படுத்தப்படுகிறது என்று கொள்வது உசிதம். விமர்சக வித்வான்கள் இதைப் பராமர்சித்து விசாரித்து ஸூக்ஷ்மார்த்தங்களை வெளிப்படுத்தினால் லோகோபகாரமாகும் என்று விஜ்ஞாபிக்கிறேன்.

---

# கோயில்களில் வழிபாடுகள்.

(ஒரு தார்மிகன்.)

நமது பரதகண்டத்தில் வசிக்கும் சில ஆஸ்திக தநிகர்கள் தர்மங்களில் சிறந்ததும், மிகுந்த பொருளுக்கு முக்கிய விநியோகமும், கோயில்களில் வழிபாடு செய்வதே என்று கருதி, இக்கருத்துக் கிணங்க, லோகோபகாரமான பலவழிகளில் தர்ம புத்தியைச் செலுத்தாமல் கோயில்களுக்கே வழிபாடுகளைச்செய்து வருகின்றனர். பகவானுடைய விபவாவதாரங்களைப் போலவே அர்ச்சாவதாரங்களும் தர்ம ரக்ஷணத்தையே ப்ரதானமாகக் கருத்துக்கொண்டவை என்பதை மறக்கக்கூடாது. தன்னைச் சேர்ந்தவர் வருந்தும்போது பகவான் ஸ்வகார்யபரனாய் வழிபாடுகளை ஏற்றுக்கொள்ளமாட்டார். பகவத் கைங்கர்யத்தைக் காட்டிலும் பாகவத கைங்கர்யம் சிறந்தது என்பது ஆசார்யர்களின் நிர்வாஹம். ஆகையால் தர்மம் செய்யும் மஹான்கள் தைவங்களுக்கு ஸாக்ஷாத்தாக வழிபாடுகள் செய்வதைக் காட்டிலும் பகவானுடைய மகிமையை ப்ரசுரப்படுத்த பொருளை விநியோகிப்பது சிறந்த தர்மமென்று உணரவேணும். தேவனுடையவும் தேவாலயங்களுடையவும் மகிமையை வெளிப்படுத்தக்கூடிய எண்ணிறந்த நூல்கள் வாசிப்பாரில்லாமல் பூச்சிகளுக்கு இரையாகின்றன. ஹிந்து ரிலிஜியஸ் எண்டோமெண்டு போர்டு தலைப்பட்டு வெகு நாளாய் கோயில்களை சீர்திருத்திக்கொண்டு வருகின்றன. இதுவரை அநேக கமிஷனர்களும் இன்னும் மற்ற அதிகாரிகளும் கோவில் விஷயங்களை கவனித்ததில் எவ்வளவுதூரம் சீர்பாடு ஏற்பட்டதோ? தெரியவில்லை. கோயில்களின் சீர்பாடு குலைந்து போவதற்கு முக்கிய காரணம் கோயில் தொழிலாளிகளின் அஜ்ஞானமே. தத்காலம் கோயில்கள் எல்லாம் அஞ்ஞானிகளுக்குப் புகலிடம் என்று சொல்லத் தடையில்லை. ஒரு அக்ஷரம்கூட சரிவர உச்சரிக்கத் தெரியாத பலர் கோயில்களில் திருவாராதநாதி கைங்கர்யங்களைச் செய்கிறார்கள். அவர்களுக்கு மிராசு பாத்தியம். பரம்பரை மிராசு. ஆகவே புஸ்தகங்களில்பெரும்பாலும் லோபித்து விட்டன. இன்னும் சில லோபித்துக் கொண்டிருக்கின்றன. பண்டிதர்களும் தர்க்க வ்யாகரணாதி சாஸ்திரங்களில் வாதப்ரதிவாதங்களைச் செய்து காலக்ஷேபம் செய்கிறார்களே யொழிய ஆசார ப்ரதானமான புராணாதிகளை மதிக்கின்றனரில்லை. நீதிபதிகளும் தங்களுடைய மனம் போனபடி ஒவ்வொரு கோயிலுக்கு ஒவ்வொரு நீதியாய் தீர்மானித்து கோயில் சண்டைகளை ஓயாச் சண்டையாக்குகின்றனர். இவ்விஷயத்தைக்கவனிப்பாரைக் காணோம். ஸர்வேச்வரனே தன்னைத்தான் காப்பாற்றிக் கொள்ளவேணும்.



---

# விச்வ நாம ஸந்தேசம்.

(T. சுந்தராசாரி, பீ.ஏ., பீ எல்., சிய்யாழி.)

'விச்வம்' என்பது ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமத்தில் காணப்படும் ஆரம்பப் பெயராகும். இதற்கு ஸாதாரணமாக ப்ரபஞ்சம் என்பது பொருள். இதை இட்டு, காரியத்தைச் சொல்லுவதான விச்வ சப்தத்தால் அதற்குக் காரணமான 'ப்ரஹ்மம்' இங்கு சொல்லப்படுகிறதென்று ஸ்ரீசங்கர பாஷ்யத்தில் இப்பெயர் விளக்கப்பட்டிருக்கிறது. இதை ஆக்ஷேபித்து, விச்வம் என்கிற சப்தம் பரிபூர்ணத்தைக் குறிக்குமாதலால் நேராகவே ப்ரஹ்மத்திற்குப் பேராகுமென்று ஸ்ரீபராசரபட்டர் உரை செய்துள்ளனர். இதற்குப் பின்வரும் 'விஷ்ணு' முதலிய நாமங்கள் இப்பரிபூர்ணத்தையே விசேஷிப்பனவாகும் என்பதும் அவ்வாசிரியர் அபிப்பிராயம். ஸ்ரீபட்டர் அர்த்தமே இங்கு அநுசரிக்கப்பட்டிருக்கிறது.

விச்வ சப்தத்தால் சொல்லப்படும் பரிபூர்ணத்வம் இருவகைப்படும். இப்பிரபஞ்சத்திலும் அதிற்காணப்படுவதும் கேட்கப்படுவதுமான ஒவ்வொரு வஸ்துவிலும் வேற்றுமையற உள்ளும் புறமும் பிரவேசித்து சத்தை அளிப்பது ஒரு பிரகாரம். இந்தப் பிரகாரம் தான் ஈசோபநிஷத்தில் முதல் மந்திரத்தால் நிரூபிக்கப்படும் ரகசியமும். மற்றொரு வகை யாதெனில் குற்றங் குறையாதுமற்ற ஸ்வரூப ரூபகுண விபவங்களால் ஒப்புயர்வற்று என்றும் நிறைந்திருக்கை. இவ்விதம் ஸர்வ விதத்திலும் ஈச்வரனுடைய பரிபூர்ணத்தைப் பறை சாற்றும் இந்த விச்வ நாமத்தின் அர்த்த விசேஷத்தை ஸதாசாரிய முகமாய் நன்கு கற்று, சிரத்தையுடனும் ப்ரேமையுடனும் அனவரதம் அநுசந்திப்பதினாலன்றி, மனித புத்தியிலுள்ள குன்றலும் குறையும் அகல்வதற்கு வழி வேறேது? இவ்விதமுள்ள ஈச்வர பரிபூர்த்தியின் அநுசந்தான விசேஷத்திற்குத் தக்கதோர் பயனாய் உள்ளது, தன்னுடைமை என்பதொழிந்து அவனுடைமை எனக் கருத்துடன் பிறர் பொருளைக் கவராது கிடைத்ததைப் புசித்து சுகித்திருத்தலாகும். இதை முன் சொல்லிய ஈசோப

நிஷத்து மந்திரமே நமக்குத் தெளிவுற உபதேசிக்கின்றது. மற்றொரு சித்தியும் இதற்குண்டு. அது எவ்வாறாகு மென்பதை ஸ்ரீவிஷ்ணுபுராணம் பின்வருமாறு நமக்கருளுகின்றது. "நான் ஹரி; மற்றிவை யாவும் அந்த ஜனார்த்தனனே. அவனன்றி வேறான காரண வர்க்கமோ காரிய வர்க்கமோ யாதொன்று மில்லை, என்று எவன் மனம் நிலைபெறுகிறதோ அவனுக்கு இந்த சம்சாரத்தில் உள்ளவைகளான பற்றுப் பகை முதலான உட்பிணிகள் ஒருபோதும் உண்டாவதில்லை."

மேற்கூறிய ஸ்ரீவிஷ்ணுபுராண வசனத்தை ஆழ்ந்து ஆலோசிப்போமானால் இன்பம் பெறுவதற்கு இன்றியமையாததான சாந்தி என்பதே விச்வநாமத்திலிருந்து த்வனிதமாகும் ஸந்தேசம் என்பது நன்கு புலப்படும். ஆனது பற்றியே உபநிஷத்துக்களில் சிரேஷ்டமாய் விளங்குகின்ற ப்ருஹதாரண்யத்தின் ஆரம்பத்தில் விச்வநாமார்த்தமாயுள்ள பகவத் பரிபூர்ணதையே சாந்தி பாடமாகப் படிக்கப்பட்டிருக்கின்றது. [ஓம் பூர்ணமதஃ பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணம் உதச்யதே—பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவ அவசிஷ்யதே.]

ஸ்ரீபகவத்கீதையில் ஆசுரப் பிரகிருதிகள் என்றும் தெய்வப் பிரகிருதிகள் என்றும் இரு பிரிவுகள் சொல்லப்படுகின்றன. அவற்றுள் ஆசுரப் பிரகிருதிகளின் புத்திக்கு ஈச்வர ஸ்வரூபத்திற்கு உரியதான அகண்ட நிலை ருசிப்பதில்லை. அவர்கள் அந்நிலையிலிருந்து புறப்பாட்டையும் சாந்தி ரூபமான திவ்ய சந்தேசத்தை மதியாது, இப்பிரபஞ்சத்தில் பார்க்கப்படும் சின்னஞ்சிறு துணுக்குகளான சுகப்போலிகளையே தேடித் திரிபவர்கள் ஆவர். அதற்குக் காரணம் அவருள்ளத்தில் வேரூன்றிக் கிடக்கும் பற்றுப் பகை முதலிய தீரா நோய்களே. இவர்களுடைய தன்மைகளும் தாழ்மையும் ஸ்ரீபகவத் கீதையில் பதினாறாவது அத்யாயத்தில் ஒன்பதாவது ச்லோகத்தில் ஆரம்பித்து வெகு விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இக்காலத்தில் உள்ள ஹிட்லர் என்பவரே அங்கே கூறப்பட்டிருக்கும் தீக்குண தீச்செயல்கள் யாவும் ஒன்றுகூடி வடிவெடுத்து வந்தவர் போலிருப்பது நாமிங்கு உணரத்தக்கது. "ப்ரபவந்தி உக்ரகர்மாண: க்ஷயாய ஜகத: அஹிதா:" என்று ஸ்ரீபகவான் அருளியிருப்பது அந்த ஹிட்லரால் ஆரம்பமாயிருக்கும் போர்ச்செயலை எவ்வளவு பொருத்தமாகக் குறிக்கின்றதென்பது சொல்லாமலே விளங்கும். விச்வநாம சந்தேசத்திற்கு நேர் எதிராயிருப்பது இதையுந் தவிர்த்து வேறேதேனு மிருக்குமா!

---



# அர்ச்சகர்களும் புரோஹிதர்களும்

(ஒரு ஹிதைஷீ.)

நமது தேசத்தில் ஜாதி மதங்களைக் காப்பாற்றுவதற்கு இவ்விரு வகுப்பினரே மூலாதாரம். புரோஹிதர்களுடைய நிலைமை வெகு காலத்துக்கு முன்னமே கேவல ஸ்திதிக்கு வரத் தலைப்பட்டுவிட்டது. வைதிக கர்மங்களுடைய ரீதிகள் யஜமானர்களுடைய ஸௌகர்யத்தையும் மனோபாவத்தையும் அநுஸரித்து பற்பல விதமாய் மாற்றப்படுகின்றன. எவ்வளவுக்கவ்வளவு, வைதிககர்மங்களை ஸங்க்ரஹப்படுத்துகிறானோ அவ்வளவுக்கவ்வளவு புரோஹிதன் கெட்டிக்காரனாகிறான். சாஸ்திரீயமான ரீதியில் வைதிக கர்மங்களை நடத்தவேணுமென்று வற்புறுத்தினால் அந்த புரோகிதனை யாரும் விரும்புவதில்லை. ஆஸ்திக்யமும் ச்ரத்தையும் மேலிட்டு, சாஸ்திரத்தை ஈச்வராஜ்ஞையாக நினைத்து தைவத்துக்கு பயந்து நடக்கும் காலம் போயிற்று. இதெல்லாம் காலத்தின் கூத்து. ஆனாலும் நாம் இவ்விஷயத்தில் உதாஸீநமாயிருப்பது உசிதமில்லை. அர்ச்சகர்களுடைய நிலைமைகளும் தற்காலம் கேவலஸ்திதியில் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. ஜாதி மதக்ரியைகளில் மந்த்ர தந்த்ரங்கள் எல்லாம் பக்தி ச்ரத்தைகளுக்கு அங்கமானவை. மந்த்ர தந்த்ரங்கள் குறைந்தாலும் பக்தி ச்ரத்தையால் க்ரியை பூர்த்தியாகக்கூடும். இப்போது பக்தி ச்ரத்தைகள் பெரும்பாலும் லோபித்து மந்த்ர தந்த்ரங்கள் மட்டும் அபிநய மாத்திரத்திலே நிற்கின்றன. உலகத்தில் ஒவ்வொரு தொழிலாளி வகுப்புக்கும் ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட்டு, தொழிலுக்கும் தொழிலாளிகளுக்கும் ஒரு விதமான பாதுகாப்பு நிலை அளிக்கப்பட்டு வருகிறது. இவ்விரண்டு தொழில்கள் மாத்திரம் ஒரு விதமான ஆதரவு மின்றி நிராதாரமாய் நிற்கின்றன. இதற்கு யாராவது முன் வந்து இருவரையும் ஒரு கூட்டமாகச் சேர்த்து இத்தொழில்களுக்கு ஒழுங்கான வழிகள் ஏற்படுத்தித்தந்தால் நன்று. ஒரு தொழிலை கௌரவமான நிலைக்குக்கொண்டுவரத் தொழிலாளிகளின் புத்தியும் ஊக்கமுமே முக்கிய காரணமாகும். அதற்கு மற்றவரும் ஒத்தாசை யளிக்கவேண்டியது அவச்யம். அர்ச்சகர்களுடைய நிலைமை கெடாமலிருந்தால் இப்போது நடக்கும் அக்ரமங்களுக்கு இடம் உண்டாயிருக்காது. பொது ஜனங்கள் இதில் மௌனமாயிராமல் உடனே ஊக்கம் எடுத்துக்கொள்வது நன்று.

---

# துண்டு நீதிகள்.

(ஸம்பாதகர்.)

வினா உலகத்தில் இன்பங்கள் எவை?

விடை—பொதுவாய் இன்பங்கள் ஆறுவகையாம்.

வினா—அவை எவை?

விடை—1. எப்போதும் ஓய்வில்லாமல் செல்வம் வந்துகொண்டிருப்பது.

2. நோயின்மை.

3. ப்ரியமான மனைவி.

4. எப்போதும் இன்பமுறப் பேசுந் திறமை.

5. சொன்ன பேச்சைத் தவறாது நடக்கும் புதல்வன்.

6. உலக நடவடிக்கைக்குப் பயன்படக்கூடிய வித்யை இவையாம்.

(பஞ்சதந்திரம்)

வினா—ஒரு வீட்டில் அதிக ஜனங்கள் வசிப்பது சங்கடந்தான். துணையில்லாமல் தனியாய் வசிப்பதும் ருசிக்கவில்லை. யார் இருந்தால் நல்லது?

விடை—ஒரு வீட்டில் அடியிற்கண்ட நான்கு பேர்கள் கிடைத்தால் அவரை விடாமல் வீட்டில் வசிக்கச் செய்யவும்.

1. வயது முதிர்ந்த ஜ்ஞாதி அதாவது தகப்பன் பாட்டன் முதலானவர்.

2. நிர்கதியாய் வீட்டை விட்டு வெளிவந்த நல்ல குலீநன்.

3. வறுமையால் வருந்தும் நண்பன்.

4. ஸந்ததி யில்லாத ஸஹோதரி.

இது மஹாபாரதத்தில் விதுரவாக்யம்.

III. வினா—இவ்வுலகத்திலேயே வசிக்கத் தகாதவர் எவர்?

1. ஈயாத பொருளாளியும்,

2. தவம் செய்யாத தரித்திரனும்.

உலகத்துக்கு உபயோகப்படாத இவ்விருவரையும் கழுத்தில் கல்லைக் கட்டி ஸமுத்திரத்தின் நடுவில் போட்டு விடவும். (மஹாபாரதம்)

IV. வினா—நாம் கூடிப் பழக எப்படிப்பட்ட மனிதர் தேவை?

விடை—இன்பமுறப் பேசுபவர் வேண்டாம். அப்ரியமாகவும் நன்மையைப் பயக்கக்கூடியதுமாகப் பேசுபவர் தேவை.

(வால்மீகி)

---



# மந்தாரவதியும் மூன்று காதலர்களும்.

(லக்ஷ்மி அம்மாள், கோடம்பாக்கம் புலியூர்.)

யமுனா நதிக்கரையில் ப்ரம்மஸ்தலம் என்றதொரு அக்ரஹாரமுண்டு. அதில் அக்நிஸ்வாமீ என்ற ஒரு ப்ராஹ்மணன் இருந்தான். அவனுக்கு மந்தாரவதீ என்று ஒரு பெண் உண்டு அவள் அழகில் ஒப்புயர்வற்றவள். அவளுக்கு நாளடைவில் யௌவந வயது வந்தது. அப்போது காந்யகுப்ஜத்திலிருந்து மூன்று ப்ராஹ்மண குமாரர்கள் தனித்தனியே அவளை மணம் புரிய ஆசைகொண்டு வந்தனர். மூவரில் ஒவ்வொருவனும் தனக்கே அவள் மனைவி ஆகவேணும் என்று எண்ணம் கொண்டிருந்தான். அப்பெண்ணின் தகப்பன் அம்மூவருக்கும் அவளை விவாஹம் செய்து கொடுக்க ஸம்மதிக்கவில்லை. ஏனெனில்—ஒருவனுக்குக் கொடுத்தால் மற்ற இருவருக்கும் மாத்ஸர்யம் உண்டாகும். அதனால் மணப்பிள்ளைக்குத் தீங்கு நேரும் என்று. இக்காரணத்தை மனதில் வைத்துக்கொண்டு அக்நிஸ்வாமி சாக்குபோக்குகள் சொல்லி விவாஹத்தை நடத்தாமல் காலம் கடத்திவந்தான். அம்மூவரும் இப்பெண்ணை மணம் செய்யாமல் ஊருக்குத் திரும்புவதில்லை என்று வ்ரதம் கொண்டு அவ்வூரிலேயே வசித்து வந்தார்கள். இதனுள் அப்பெண் திடீரென்று ஜ்வரம் கண்டு அதனால் இறந்தாள். அவளது தேஹம் ச்மசானத்தில் அக்நியில் போடப்பட்டது. அம்மூவரில் ஒருவன் அச்சுடுகாட்டிலேயே ஒரு மடம் கட்டிக்கொண்டு அவளது சாம்பலின்மீது படுத்துக்கொண்டு காலம் கழித்தான். இரண்டாமவன் அவளது எலும்பை எடுத்துக்கொண்டு கங்கைக்குச் சென்றான். மூன்றாமவன் ஆண்டி வேஷம் பூண்டு தேச யாத்ரை சென்றான். அவன் ஒரு க்ராமத்தில் ஒரு ப்ராம்மணன் வீட்டுக்கு அதிதியாகப் போனான். அந்த வீட்டுக்காரன் அவனைப் பூஜித்து சாப்பிடக் கூப்பிட்டான். அப்போது அந்த வீட்டில் சிசு ஒன்று அழுது கொண்டிருந்தது. அந்த வீட்டு ப்ராம்மணஸ்திரீ, அக்குழந்தையை ஸமாதானப்படுத்தினாள். அவள் ஸமாதானப்படுத்தியும் அழுகை நிற்கவில்லை. அதனால் கோபம் கொண்ட அந்த ஸ்திரீ அக்குழந்தையைக் கையைப்பிடித்து இழுத்து எரிந்து கொண்டிருக்கும் அக்நியில் தள்ளிவிட்டாள். சிசுவும் எரிந்து போயிற்று. இதைப் பார்த்துக்கொண்டிருந்த அதிதி ப்ராம்மணன். மிகவும் திடுக்கிட்டுப் போய், ஆ ஆ இதென்ன அநியாயம், இராக்ஷஸன் வீட்டில் தெரியாமல் வந்து புகுந்தேனே என்று கூக்குரலிட்டான். வீட்டுக்கார ப்ராம்மணன்—இது அடிக்கடி நடைபெறுகிற கார்யந்தான். என்னுடைய ம்ருதஸஞ்ஜீவநீ வித்யையைப் பார் என்று சொல்லி, வீட்டின் உள்ளிலிருந்து ஒரு புஸ்தகத்தை எடுத்து வந்து அதில் உள்ள மந்த்ரத்தை ஜபித்து மண்ணைக்கிள்ளி சாம்பல் மீது எறிந்தான். உடனே அக்குழந்தை தூங்கி எழுந்தவன்போல் எழுந்தான். அதைப் பார்த்து ஸந்தோஷமுற்ற அந்த அதிதி போஜநம்

செய்தான். வீட்டுக்காரன் அப்புத்தகத்தை ஒரு நாகபாசத்தின்மீது வைத்துவிட்டு இராத்திரி உறங்கச் சென்றான். இந்த மந்த்ரத்தைக்கொண்டு தன் ப்ராணநாயகியை ஜீவிப்பிக்கவேணும் என்று அதிதி எண்ணங்கொண்டான். அப்புத்தகத்தை இரவில் ஒருவருக்கும் தெரியாமல் எடுத்துக்கொண்டு தனது ப்ராணநாயகி இறந்து சாம்பலாய் கிடக்குமிடத்துக்குச் சென்றான். அப்போது இரண்டாமவனும் கங்கையில் எலும்பைப் போட்டுவிட்டு திரும்பி வந்தான். சாம்பல்மீது மடம் கட்டிக்கொண்டு படுத்துக்கொண்டிருக்கும் முதல்வனையும் இரண்டாமவனையும் பார்த்து மூன்றாமவன் சொன்னதாவது. இந்த மடத்தைப் பிரித்து எறிந்து விடுங்கள். மந்த்ர சக்தியாலே நாமது ப்ராணநாயகியை ஜீவிக்கச்செய்கிறேன் என்று சொல்லி அந்த புஸ்தகத்திற் சொல்லியபடி மந்த்ரத்தை ஜபித்து மண்ணைத் தூவினான். உடனே மந்தாரவதி எழுந்தாள். முன்னிருந்ததைவிட அதிக ஸௌந்தர்யம் வாய்ந்த அவளது மேனியைக் கண்டு மூவரும் கலகம் செய்தார்கள். முதல்வன் நான் சாம்பலைக் காற்றில் பறந்து போகாமல் காப்பாற்றினேன். அதனால் உயிர்த்தாள். ஆகையால் நானே அவளுக்குக் கணவன் என்றான். இரண்டாமவன்—நான் கங்கையில் அஸ்தியைச் சேர்த்தேன். அதனாலேயே தான் அவள் ஜீவித்தாள். நானே விவாகத்துக் குரியவன் என்றான். மூன்றாமவன்—மந்த்ரசக்தி என்னுடையதல்லவா? நானே கணவன் என்றான். இந்த ஸந்தேகத்தை தீபிகா வாசகர்கள் தீர்க்கவேணும் என்று வேண்டுகிறோம்.

---

# பந்தல்குடி ராமஸ்வாமி ஐயங்கார் காலம் சென்றார்.

[K. ஸுதர்சநாசாரியன்.]

இராமநாதபுரம் ஜில்லா பந்தல்குடி என்னும் ஸ்ரீக்ராமத்தில் அவதரித்துத் திருநெல்வேலியில் வெகு காலம் லௌகிக வ்ருத்தியில் ஸப்-ரிஜிஸ்த்ராராக எழுந்தருளி யிருந்த வேலாயூர் ஸ்ரீ ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி தமது 85வது திருநக்ஷத்ரத்தில், நிகழும் ப்ரமாதி வருஷம் ஆவணிமீ 14உ புதன்கிழமை தினம் பரமபத மடைந்தாரென்பதை நமது ஸஹ்ருதக்களுக்கு அடியேன் விஜ்ஞாபநம் செய்து கொள்ளுகிறேன். அடியேன் அறிந்த வரையில் அந்த ஸ்வாமி ருஜுவான பகவத் பக்தர்; கடுத்த முகமாவது க்ரூரமான சொல்லாவது அவரிடம் ஒருபொழுதும் இருந்ததில்லை. அவரது மஹிமையையும் அவரிடமிருந்த பகவத்-பாகவத ஆசார்ய பக்தியையும் அவருடன் நெருங்கிப் பழகினவர்களே நன்கறிவர். நமது தர்மம் உருமாறி நிலை குலைந்து வரும் இந்நாளில், இம் மஹான் நவநாகரிகப் பகட்டில் அகப்பட்டு ஆத்மோஜ்ஜீவனத்தை மறந்து ஸம்ஸாரத்தில் உழலாமல் தமது லௌகிகவ்ருத்தியை நேர்மையுடன் பழுதின்றிச் செவ்வனே நடத்தி அதினின்றும் விரதரான பின்னர் ஒழிவில் காலமெல்லாம் ஸ்ரீமந் நாராயணனையே த்யாநம் செய்துகொண்டு வேதாந்த க்ரந்தாநுஸந்தாநத்தில் காலங்கழித்து வந்தார்.



இந்த ஸ்வாமி ஸ்ரீ மதஹோபில மடத்தில் 40வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளி யிருந்த ஸ்ரீவண்சடகோப ஸ்ரீரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் ஸந்நிதியில் உபாயாநுஷ்டானத்தைச் செய்துகொண்டு ஷை ஸ்ரீஸ்வாமி ஸந்நிதியிலும் ப்ரக்ருதம் 41-வது பட்டம் ஸ்ரீவண் சடகோப ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் ஸந்நிதியிலும் வேதாந்த க்ரந்த காலக்ஷேபத்தைச் செய்து வந்தார்.

அவரது மேன்மைக்குத் தக்கவாறு ஜ்ஞானத்திலும் தமக்கு அநுரூபமாகவும் பரம விதேயர்களாகவு முள்ள இரண்டு ஸத் புத்திரர்களை அந்த ஸ்வாமி அடைந்திருந்ததும் அவரது ஸுக்ருத விசேஷமே. "அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்பதற்கிணங்கி அந்த ஸ்வாமிக்கு நித்ய விபூதியின் அவாப்தி ஸுநிஸ்சிதம் என்பதற்கு, அவருடைய அந்திம தசையில் ப்ராண வியோக பர்யந்தம் அவருக்கிருந்த பகவத் த்யாநமும் ஜ்ஞாபக பூர்வகமான மந்த்ர ரத்நாதி ஜபமும் முக்ய அறிகுறிகளாக இருந்தன. ஆயினும் உத்தமமான ஸமதமாதி குணங்களுக்கு ஸ்தாநமான ஒரு மஹான் அந்தர்தாநத்தை அடைந்து விட்டாரே என்பதுதான் மிகவும் பாதிக்கின்றது.

---

## ஸ்ரீ வேதாந்த தீபிகை.

வேதாந்த தீபிகையின் பழைய ஸஞ்சிகைகள் புத்தக ரூபமாக பைண்டு செய்து தயாராக இருக்கின்றன. 12 ஸஞ்சிகைகள் அடங்கிய 1 புத்தகம் விலை ரூபாய் 3. வேண்டுமவர்கள் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

மேனேஜிங் எடிடர்.
17—9—39.

## அறிவித்தல்.

(1)

1938வருஷத்திய வேதாந்த தீபிகை சந்தாவை இதுவரை செலுத்தாத சந்தாதாரர்கள் ஷை சந்தாவை நாளது அக்டோபர்மீ 15உக்குள் செலுத்தி விடவேணுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1939வருஷத்திய சந்தாவையும் வருகிற நவம்பர்மீ 30உக்குள் செலுத்தவேணும்.

(2)

இதுவரை இந்த வேதாந்த தீபிகை சிற்சில வித்வான்களுக்கு மூல்யமின்றி அனுப்பப்பட்டு வருகிறது. சந்தாதாரருடைய ஸங்க்யை குறைவினாலும் சந்தா தொகை குறைக்கப்பட்டதாலும் தீபிகா கார்யங்களை சரிவர நடத்த முடியவில்லை. ஆகையால் மூல்ய மில்லாமல் தீபிகையை வரவழைத்து வாசிக்கும் வித்வான்களும் சந்தா கொடுக்க சக்தியுள்ளவர்களானால் தாங்களும் சந்தாதாரராகச் சேர்ந்து தீபிகைக்கு உபகரிக்கவேணுமாய் ப்ரார்த்திக்கப்படுகிறது. இந்த விளம்பரத்தை வாசித்த பின் அத்தகைய வித்வான்கள், தங்களைச்சந்தாதாரராகச் சேர்த்துக்கொள்ளும்படி ஒரு லெட்டர் எழுதி அனுப்பினால் உத்தமமாயிருக்கும். அப்படியே செய்யவேணுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

மானேஜிங் எடிடர்.
வேதாந்த தீபிகை.

## ஸ்ரீபாஷ்ய முத்ரணம்.

ஸ்ரீபாஷ்யம் ச்ருதப்ரகாசிகா முதலான அநேக வ்யாக்யாநங்களுடன் தேவநாகர லிபியில் உயர்ந்த காகிதத்தில் அச்சிட ஆரம்பித்தது. (2 vols) பைண்டு செய்து ஸித்தமாயிருக்கின்றன. முதல் வால்யூம் வாங்கின மஹான்கள் அனைவரும் இந்த 2-வது புத்தகத்தையும் வாங்கிக் கொண்டால் மேல் மூன்றாவது vol. அச்சிடத் தொடங்க ஸௌகர்யமும் உத்ஸாஹமும் உண்டாகும். ஸ்ரீவைஷ்ணவர் அனைவரும் இப் புத்தகம் தங்களுக்கு உபயோகப் படாத போனாலும் ஸ்ரீ உடையவர் ஸ்ரீ தேசிகன் முதலிய ஆசார்யாளுக்கு ஒரு கைங்கர்யம் செய்வதாய் நினைத்து இப் புத்தகத்தை ஆதரிக்க வேணுமாய் வேண்டுகிறோம்.

Krishnapuram, }
12—9—1939. }

V. அனந்தாசார்யன்,
Editor of Sree Bhashya.

## புஸ்தக விமர்சம்.

ஸ்ரீ அழகியசிங்கர் அடைக்கலப்பத்து என்ற புத்தகம் வரப்பெற்றோம். இது இப்போது ஸ்ரீ அஹோபிலமடம் 41வது பட்டத்தில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்வாமி விஷயமாய் ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி தாஸனால் இயற்றப்பட்டு ஸ்ரீஅழகியசிங்கர் திருவடிவாரத்தில் விண்ணப்பிக்கப்பட்டு, கரூர் தாலூகா புகளூர் வி ராமஸ்வாமி அய்யங்காரால் ப்ரசுரிக்கப்பட்டது. இந்நூலுக்கு சென்னை அட்வொகேட், வித்வான் R. கேசவய்யங்கார் எழுதிய முன்னுரை ஸங்க்ரஹமாயும் ரஸபரபரிதமாயும் ஸாரகர்ப்பமாயும் உள்ளது. இந்நூலை ஆதரத்துடன் வாசிப்பவருக்கு ஆசார்ய நிஷ்டை தன்னடையே உண்டாகும் என்பதில் ஸம்சயமில்லை. எளிய நடையில் 10 பாசுரங்களும் அதற்கு வ்யாக்யாநங்களும் மிகவும் ரஸ்யமானவை.

புத்தகம் கிடைக்குமிடம்—
வி. ராமஸ்வாமி அய்யங்கார், அக்கவுண்டெண்டு,
தென்னிந்திய சர்க்கரைக் கம்பனி, புகளூர், கரூர் தாலுகா.

---



றனவென்று கூறுவதால், அவை ஜீவனுடன் செல்லுவதில்லை என்றால் அது அப்படி அல்ல—அங்கு வாக் என்னும் சொல்லுக்கு வாக்கின் அபிமானி தேவதை பொருளாகும். லயிக்காத லோமாதிகளோடு கூடவே படித்திருக்கிறது மேற்சொன்ன பொருளுக்கு அநுகூலம்.

## सू—प्रथमे श्रवणादिति चेन्न ता एव ह्युपपत्तेः

॥ ३-१-५ ॥

प्रथमे द्युलोके अपामश्रवणात् नापो गच्छन्ति "एतस्मिन्नग्नौ देवाः श्रद्धां जुह्वति" इति श्रद्धैव श्रुतेति चेत्—न। अप एव श्रद्धाशब्देनोच्यन्ते इत्यप्सु पृष्टासु तदुत्तरत्वोपपत्तेः गम्यते। "श्रद्धा वा आपः" इति श्रूयते ॥

த்யுலோகத்தில் அப்புக்கள் கூறப்படவில்லை. ச்ரத்தையே கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் அப்புக்கள் ஜீவனோடு செல்லுகிறதில்லை என்பதில்லை. ச்ரத்தை என்னும் சொல் அப்பையே சொல்லும். அப்படியே ச்ருதியும் உண்டு.

## सू—अश्रुतत्वादिति चेन्नेष्टादिकारिणां प्रतीतेः

॥ ३—१—६ ॥

अत्र प्रश्नप्रतिवचनयोः आप एव प्रतीयन्ते, न तत्परिष्वक्तो जीव इति चेत्—न उत्तरत्र। "अथ य इमे ग्रामे इष्टापूर्ते दत्तमित्युपासते" इत्यादाविष्टादिकारिणां गमनप्रकारवचनात् द्युलोकाग्निसंबन्ध्यप्शब्द-वाच्यस्य "तस्या आहुतेस्सोमो राजा संभवति" इति सोमभूतस्यैव "सोमो राजा" इति प्रत्यभिज्ञानात् अद्भिः परिष्वक्तः तच्छरीरक एव आप इत्युच्यते इत्यवगम्यते ॥

விடையிலும் வினாவிலும் அப்புக்களே குறிக்கப்படுகின்றன. அவற்றால் தழுவப்பட்ட ஜீவனைக் குறிக்கவில்லை என்று ஆக்ஷேபமும் சரியல்ல. மேலே

அந்த ஆஹுதிக்கு ஸோமன் ராஜாவாகிறான் என்று ஸோமனாக ஆனவன் அதாவது அப்புக்களால் சூழப்பட்டு அவற்றை சரீரமாகப் பெற்ற ஜீவனே அப் என்று வ்யவஹரிக்கப்படுகிறான் என்று விளங்கும்.

## सू—भाक्तं वा नात्मवित्वात्तथाहि दर्शयति ॥ ३-१-७ ॥

एष सोमो राजा—तद्देवा भक्षयन्ति, इति सोमापन्नस्य देवैर्भक्ष्यमाणत्ववचनम् भाक्तम् । अनात्मवित्वेन देवोपकरणत्त्वाभिप्रायम् । तथाहि दर्शयति श्रुतिः । "यथा पशुरेवं स देवानाम्" इति पशुवत् देवोपकरणत्वं दर्शयति । तथात्मविदामनात्मविदाञ्च परमपुरुषोपकरणत्वं देवोपकरणत्वं च स्मर्यते—"देवान् देवयजो यान्ति मद्भक्ता यान्ति मामपि" इति ॥

இவன் ஸோமன் ஆகிறான். இவனை தேவதைகள் சாப்பிடுகிறார்கள் என்று சொல்லுமிடத்து, ஜீவனை சாப்பிடமுடியாததாகையால் ஜீவன் அங்கு குறிக்கப்படவில்லை என்றும் சொல்லக்கூடாது. ஆத்மஞ்ஞானமில்லாத ஜீவன் பசுபோல் தேவர்களுக்கு கருவியாகிறான். அப்படியே கீதையும் கூறுகிறது.

---

### க்ருதாத்யயாதிகரணம்

## सू—कृतात्ययेनुशयवान् दृष्टस्मृतिभ्यां यथेतमनेवञ्च ॥ ३-१-८ ॥

कृतस्य कर्मणः अन्ते निवर्तमानः भुक्तशिष्टकर्मवान् निवर्तेत इति श्रुतिस्मृतिभ्यामवगम्यते । "रमणीयचरणाः—रमणीयां योनिमापद्यन्ते," इति श्रुतिः । "ततः परिवृत्तौ कर्मफलशेषेण जातिं रूपम्" इत्यादिका स्मृतिः । आरोहप्रकारेण मार्गैकदेशः । प्रकारान्तरेण चैकदेशः ॥



செய்த வினை அநுபவித்து முடிந்தபின் திரும்பும்போது, அநுபவித்தது போக மிகுதியுள்ள வினையுடன் கூடவே திரும்புகிறான் என்று ச்ருதிஸ்மிருதிகளால் அறிவிக்கப் படுகிறது. வரும்போது, போனவழியில் கொஞ்சமும் வேறு வழியில் கொஞ்சமுமாகும்.

## सू—चरणादिति चेन्न तदुपलक्षणार्थेति कार्ष्णाजिनिः ॥ ३-१-९ ॥

रमणीयचरणाः इति चरणशब्दात् नानुशयः । चरणशब्दस्य स्मार्ताचारविषयत्वादिति चेत्—न, अनुशयोपलक्षणार्था आचारश्रुतिः । तस्यैव सुखसाधनत्वात् ॥

வேதவாக்யத்தில் சரணம் என்ற சொல் ஆசாரத்தையே சொல்லும், கர்மத்தைச் சொல்லாது. கர்மம் வேறு, ஆசாரம் வேறு என்று ச்ருதியே மற்றோரிடத்தில் கூறுகிறது. ஆதலால் கர்மசேஷத்தோடே கூட திரும்புகிறான் என்பது கூடாது என்றால்—அங்கு சரணம் என்னும் சொல் கர்மசேஷத்தையே குறிக்கும். கர்மமே சுகஸாதனமாகையால், என்று கார்ஷ்ணாஜினி ரிஷி கூறுகிறார்.

## सू—आनर्थक्यमिति चेन्न तदपेक्षत्वात् ॥ ३-१-१० ॥

स्मार्ताचारस्यानुपयोगात् आनर्थक्यमिति चेत्—न, तदपेक्षत्वात् सर्वस्य पुण्यकर्मणः । "सन्ध्याहीनोशुचिर्नित्यमनर्हस्सर्वकर्मसु" इति वचनादिति कार्ष्णाजिनिमतम् ॥

கர்மமே ஸுகஸாதகம், கர்ம சேஷத்தோடேயே திரும்புகிறான் என்று ஒப்புக்கொண்டால் ஆசாரம் பயனற்றதாய் தீருகிறது என்றால் அப்படி அல்ல. புண்யகர்மங்கள் எல்லாம் ஆசாரத்தை அபேக்ஷித்தே நிற்கும். ஸந்த்யோபாஸநம் செய்யாதவன் ஸர்வகர்மங்களிலும் அநர்ஹன் என்று ஸ்ம்ருதி வாக்யம் ஆகையால் என்பது கார்ஷ்ணாஜினி ரிஷியின் கொள்கை.

## सू—सुकृतदुष्कृते एवेति तु बादरिः ॥ ३-१-११ ॥

रमणीयचरणाः कपूयचरणाः इति चरणशब्देन सुकृतदुष्कृते एवा-

भिधीयेते । पुण्यं कर्माचरति इति प्रसिद्धे रिति बादरिः । एतदेव स्वीकृतम् । स्मार्ताचारापेक्षं पुण्यं कर्मेति च स्वीकृतम् ॥

பாதரி என்ற ஆசார்யன் சரண சப்தத்தால் ஸுக்ருதங்கள் கூறப்படுகின்றன. புண்ய கர்மத்தை ஆசரிக்கிறான் என்று ப்ரஸித்தி இருப்பதால் என்றும், புண்யகர்மம் ஸ்மார்த்தாசாரத்தை அபேக்ஷித்து நிற்கும் என்றும் அபிப்ராயம் கொள்கிறார்.

---

அநிஷ்டாதிகார்யதிகரணம்

## सू—अनिष्टादिकारिणामपि च श्रुतम् ॥ ३-१-१२ ॥

इष्टापूर्ताद्यकुर्वतामपि चन्द्रगमनमस्ति । " ये वै केचास्माल्लोकात् प्रयन्ति चन्द्रमसमेव ते " इत्यविशेषात् ॥

தடாகநிர்மாணம் முதலான நல்ல கார்யங்களைச் செய்யாதவருக்குக் கூட சந்த்ரப்ராப்தி உண்டு. ச்ருதியில் இந்த லோகத்திலிருந்து போகிறவர் அனைவர்க்கும் சந்த்ரப்ராப்தி உண்டென்று பொதுவாகக் கூறியிருப்பதால்.

## सू—संयमने त्वनुभूयेतरेषामारोहावरोहौ तद्गतिदर्शनात् ॥ ३-१-१३ ॥

इष्टापूर्ताद्यकुर्वतां यमसदने तत्फलमनुभूय आरोहादिः । " वैवस्वतं संगमनम् " इत्यादौ तद्दर्शनात् ॥

இஷ்டாபூர்த்தம் முதலான தர்ம கார்யங்களைச் செய்யாதவருக்கு யமலோகத்தில் பாப பலங்களை அநுபவித்து பிறகு சந்த்ரலோகமடைதலும் திரும்புவதும் உண்டு.

## सू—स्मरन्ति च ॥ ३-१-१४ ॥

" सर्वे चैते वशं यान्ति यमस्य " इति ॥



பாபிகள் 'எல்லாரும் யமனுக்கு வசமாகின்றனர் என்று பராசர பகவான் விஷ்ணு புராணத்தில் அருளிச் செய்திருக்கிறார்.

## सू—अपि सप्त ॥ ३-१-१५ ॥

सप्त रौरवादीनपि स्मरन्ति ॥

அந்த பாபிகள் அநுபவிப்பதற்காக ஏழு நரகங்களும் குறிக்கப்பட்டன.

## सू—तत्रापि तद्व्यापारादविरोधः ॥ ३-१-१६ ॥

तत्रापि यमव्यापारादेव यमवश्यताया अविरोधः ॥

கர்மாநுகுணமாக ஏழு உலகங்களுக்கும் செல்லக்கூடுமல்லவா? அப்போது யமலோக ப்ராப்தி எப்படி பொருந்தும்? என்றால் அந்த உலகங்களுக்குப் போகுதலும் யமனுடைய கட்டளையாலேயே ஆதலால் விரோதமில்லை.

## सू—विद्याकर्मणोरिति तु प्रकृतत्वात् ॥ ३-१-१७ ॥

विद्याकर्मणोः फलं ब्रह्मगमनं चन्द्रगमनञ्च कथम्? " तद्य इत्थं विदुः तेर्चिषमभिसंभवन्ति, " " इष्टापूर्ते दत्तमित्युपासते ते धूममभिसंभवन्ति " इति प्रकृतत्वात् ब्रह्मचन्द्रगमनयोः । अतः पापिनां न तद्गतिप्रसङ्गः ॥

முன் சூத்திரங்களில் சொன்னவை எல்லாம் அதாவது பாபிகளுக்குக் கூட சந்த்ரப்ராப்தி உண்டென்பது பூர்வபக்ஷம். இந்த சூத்திரத்தால் ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது. ப்ரஹ்ம கமநமும், சந்த்ரகமநமும், முறையே வித்யைக்கும் கர்மத்துக்கும் பலமாகக் கூறப்பட்டது. ஆகையால் பாபிகளுக்கு சந்திரகமநத்துக்கு ப்ரஸக்தியே இல்லை.

## सू—न तृतीये तथोपलब्धेः ॥ ३-१-१८ ॥

न च पापिनां द्युलोकगमनाय चन्द्रलोकगमनापेक्षा । तेषां द्युलोकगमनाभावोपलब्धेः । अथैतयोः पथोः न कतरेण च "

इत्यारभ्य “ एतत् तृतीयं स्थानं तेनासौ लोको न संपूर्यते ” इति । तृतीयस्थानमिति पापकर्माण उच्यन्ते ॥

த்யுலோக ப்ராப்திக்காக சந்த்ரலோக ப்ராப்தி வேணும். பாபிகளுக்கு த்யுலோக ப்ராப்தி இல்லையாதலால் சந்திரலோக ப்ராப்தியு மில்லை.

सू—स्मर्यतेपि च लोके ॥ ३–१–१९ ॥

लोके च द्रौपद्यादीनां पुण्यकर्मणामपि पञ्चमाहुत्यनपेक्षदेहारम्भः स्मर्यते ॥

மறு பிறப்புக்காக சந்திரலோக ப்ராப்தி வேணும். அதில் ஐந்தாவது ஆஹுதி என்று சொல்லப்படும் புருஷபீஜம் மறுபிறப்பிற்குக் காரணம். அது உண்டாகும் படியைச் சொல்லும்போது சந்திரலோக ப்ராப்தி அவச்யமாகிறது என்ற சங்கையைப் போக்குகிறது இந்த ஸூத்திரம். திரௌபதி முதலான புண்ய கர்மிகள் கர்ப ஸம்பந்த மில்லாமலே பிறந்ததாக ஸ்மிருதிகள் சொல்லுவதால் ஐந்தாவது ஆஹுதியும், அதற்காக சந்திரலோகப்ராப்தியும் வேணும் என்ற நியமம் இல்லை.

सू—दर्शनाच्च ॥ ३-१-२० ॥

तथा श्रुतावपि दृश्यते । “ भूतानां त्रीण्येव बीजानि भवन्ति, अण्डजं जीवजं उद्भिज्जं ” इति स्वेदजोद्भिज्जयोः तदनपेक्षत्वम् ॥

வேதத்திலும் மேற்சொன்ன நியமம் காணப்படுகிறது. ஸ்வேதத்தால் உண்டாகும் பூதங்களுக்கும், பூமியை பிளந்து கொண்டு மேலே புறப்படும் வஸ்துக்களுக்கும், ஐந்தாவது ஆஹுதியின் அபேக்ஷை இல்லை அல்லவா?

सू—तृतीयशब्दावरोधः संशोकजस्य ॥ ३-१-२१ ॥

स्वेदजस्य उद्भिज्जशब्देन संग्रह इत्यर्थः ॥

வேதத்தில் ப்ராணிகளின் ஜனனம் மூன்று விதமாகப் பிரிக்கப்பட்டது. ஜீவனிலிருந்தும் முட்டையிலிருந்தும், பூமியிலிருந்தும். அதில் ஸ்வேதத்தால் உண்டாகும் ப்ராணியை “உத்பிஜ்ஜம்” அதாவது பூமியைப் பிளந்து கொண்டு புறப்படுமது என்ற வகையில் சேர்த்து உரைக்கப் பட்டது.



தத்ஸ்வாபாவ்யாபத்த்யதிகரணம்

सू—तत्स्वाभाव्यापत्तिरुपपत्तेः ॥ ३-१-२२ ॥

“ यथेतमाकाशं ” इत्यादिना आकाशसादृश्यापत्तिः प्रत्यवरोहत उपदिश्यते । तत्र तत्र सुखदुःखानुभवाभावोपपत्तेः । तदनुभवार्थं हि तत्तच्छरीरता ॥

திரும்பிவரும் ஜந்துவிற்கு ஆகாசத்தோடு ஸாம்யமே சொல்லப்படுகிறது. ஆகாச சரீரம் பெறுவதில்லை. அங்கங்கே இன்ப துன்பங்களை அனுபவிப்பதற்காக வல்லவோ சரீரம் வேண்டுவது. இங்கு அப்படிப்பட்ட அனுபவம் இல்லை. ஆதலால் ஆகாசத்தோடு ஸாம்யமே கொள்வது உசிதம்.

---

நாதிசிராதிகரணம்

सू—नातिचिरेण विशेषात् ॥ ३-१-२३ ॥

व्रीह्यादिप्राप्तेः प्राक् आकाशादिषु नातिचिरं तिष्ठति “ अतो वै खलु दुर्निष्प्रपतरं ” इति व्रीह्यादावेव विशेषवचनात् ॥

வ்ரீஹி முதலான நிலைகளில் மாத்திரம் நீண்டகாலம் இருப்பதாகச் சொல்லி இருப்பதால் அதற்கு முற்பட்ட ஆகாசாதி நிலைகளில் தாமதமில்லை. விரைவிலேயே செல்வான்.

---

அந்யாதிஷ்டிதாதிகரணம்

सू—अन्याधिष्ठिते पूर्ववदभिलापात् ॥ ३-१२४ ॥

“ त इह व्रीहियवाः ” इत्यादौ च अन्यजीवाधिष्ठिते व्रीहियवादौ संश्लेषमात्रम् । अवरोहतः आकाशादिष्विव जननहेतुविरहिताभिलापात् । जायन्ते इति वचनमौपचारिकम् । यत्र ब्राह्मणादिजन्मास्ति, तत्र—“ रमणीयचरणाः ” इति हि हेतुरभिलप्यते ॥

திரும்பிவருகிற ஜீவனுக்கு வ்ரீஹியவாதிகளில் ஸம்பந்த மொழிய தத்ரூபமாக ஜநந மில்லை. ப்ராம்மணாதி ஜந்மங்களைச் சொல்லும்போது.

158623



...ரணமான புண்யபாப கர்மங்களும் கூறப்படுகின்றன. இங்கு அப்படி சொல்லப்பட வில்லையாதலால் இதர ஜீவர்களால் அநுப்ரவேசம் கொண்ட வ்ரீஹ்யாதிகளில் சேர்க்கையே உண்டு.

सू—अशुद्धमिति चेन्न शब्दात् ॥ ३-१-२५ ॥

अवरोहतः पूर्वानुष्ठितयागादिषु अग्नीषोमीयादिहिंसागर्भत्वेन अशुद्धं कर्मास्तीति चेत्—न "हिरण्यशरीरः ऊर्ध्वस्वर्गं लोकमेति" "न वा उवेतन्म्रियसे न रिष्यसि" इति पशुसंज्ञपनस्य अहिंसात्वशब्दात् ॥

வ்ரீஹி முதலியதாகப் பிறப்பது பாப பலமாகும். அந்த பாப கர்மம் சொல்லப்பட வில்லையானாலும் முன் பிறப்பில் செய்யப்பட்ட யாகாதிகளில் ஜந்து ஹிம்ஸை அடங்கியிருப்பதால் அது பாபமாகும். அந்த பாபத்தின் பயனாக வ்ரீஹ்யாதியாகப் பிறக்கிறான் என்றால்—அப்படி இல்லை. யாகத்தால் ஜந்துவுக்கு ஹிம்ஸை இல்லை. உயர்ந்த கதியே உண்டு என்று வேதம் கூறுகிறது.

सू—रेतस्सिग्योगोथ ॥ ३-१-२६ ॥

"यो यो ह्यन्नमत्ति, यो यो रेतस्सिञ्चति" इति अन्नेन संसृष्टस्य रेतस्सिचा योगमात्रम् अनन्तरमुच्यते । अतः पूर्वमपि व्रीह्यादि योगमात्रम् ॥

மேலும், அன்னத்தோடு கலந்த ஜீவனுக்கு ரேதஸ்ஸேகம் செய்யும் புருஷனோடு சேர்க்கை மாத்திரமே கூறப்படுகிறது. அது போலவே அதற்கு முன்பும் வ்ரீஹ்யாதிகளோடு யோகமே கொள்ளத்தக்கது.

सू—योनेश्शरीरम् ॥ ३-१-२७ ॥

योनिप्राप्तेः पश्चादेवावरोहता शरीरं प्राप्यते ॥

திரும்பி வருமவனுக்கு ஸ்திரீயோநிப்ரதேசத்தை அடைந்த பிறகே சரீரம் உண்டாகிறது. ஆகையால் அதற்கு முன் ஆகாசாதிகளில் ஸம்ச்லேஷம் மாத்திரமே உண்டு. அந்தந்த வடிவமாகப் பிறப்பு இல்லை.

மூன்றும் அத்யாயம் முதல் பாதம் முடிந்தது.

---


अमृतांजनम्

அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முதுமொழி கூறுகிறது.

"अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम्।"
"अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः।"




தலைவலி, ஜலதோஷம், சுளுக்கு முதலான சகல நோய்களையும் தீர்க்கவல்ல ப்ரஸித்தமான லேபனம்—

அம்ருதாஞ்சனம் லிமிடெட்

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

Registered No. M. 3778.


சீரும் சிறப்பும் செழித்துப் பெருமையாய் வாழ
அழகிய ஆபரணங்களை அணிவது அவசியம்.
ஆபரணங்களுக்கெல்லாம் அரசனுயிருப்பது
வைர நகையே.

சிமைக் கமலங்களைச் செம்மையாகத் தேடியணிபவரிடம் ஸ்ரீதேவி தானே வந்து தாண்டவமாடுவள். இது விளம்பரக் கட்டுரையென்று வீணில் நினைத்துவிடாதீர்கள். வைரம் முதலிய இரத்தினங்களின் அருமை பெருமைகளைப் பகுத்தறிந்த பண்டைக் காலத்திய பண்டிதோத்தமர்கள் நிர்ணயித்து நிரூபித்துள்ள வசனங்களையும் வாசித்துப் பாருங்கள்.

षड्भिर्वाष्टभिरन्यैर्यत् बहुभिर्वा समन्वितम् ।
अम्बुदेन्द्रधनुर्वारिधरं वज्रं प्रशस्यते ॥
वज्रस्य सर्वदा तादृग्गुणयुक्तस्य धारणम् ।
शोभाकरं श्रेयसां च साधकं दोषघातकम् ॥

"ஆறு பட்டைகள், எட்டு பட்டைகள், அநேகம் பட்டைகள் உள்ள வைரங்கள் குணத்தில் ஒன்றுக்குமேல் ஒன்று உயர்ந்தவை. நீர் கொண்ட மேகத்தில் தோன்றும் இந்திர தனுஸ்ஸுக்கு ஒப்பான நிறங்களோடுகூடி நிரம்ப நீரோட்டமுடைய வைரக்கல் வெகுப்பிரசஸ்தமானது. அவ்வாறு உயர் குணமுள்ள வைரத்தை எப்பொழுதும் அணிவதால் அழகும் ஒளியும் ஓங்கி வளரும்; சீரும் சிறப்பும் செழிக்கும்; பீடையும் பிணிகளும் பற்றறவே ஒழியும்."



உத்தம குணம் பொருந்திய வைரங்களே அணிபவருக்கு அவ்வித அழகையும் ஐச்வர்யத்தையும் அளித்திடுமென்பதை ஆற அமர யோசித்து அவ்வித வைரங்களை வாங்கியணிய முயலவேண்டும். அவ்வகை வைர நகைகளை நாகரிகமான மோஸ்தரில் நன்கு செய்து நம்பிக்கைக்குப் பாத்திரமாய் பெரும் வியாபாரம் செய்பவர் ஸூராஜ்மல் கம்பெனியாரே.



SURAJMAL'S
The Jewellers.
313 ESPLANADE MADRAS.


Printed by M. Satyanarayana, at the Hindi Prachar Press, T. Nagar, and Published by V. Ananthacharlar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras.